விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 03 வியாழக்கிழமை (20.08.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 244

# புதிய அரசில் இணையுமாறு
# கட்சிகளுக்கு ரணில் அழைப்பு

## ஜனாதிபதியை சந்தித்த பின் அறிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தில் பங்கெடுக்குமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். பொதுத் தேர்தலில் அதிக இடங்களை வென்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணி புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றது. (23ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் விக்கிரமசிங்க இன்று பதவிப்பிரமாணம்



(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றுள்ள நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளதாக அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ரணில் விக்கிரமசிங்க இன்று பிரதமராக பதவியேற்கவுள்ளதுடன், புதிய அமைச்சரவையும் அமைக்கப்படவுள்ளதாக அவர் 24ஆம் பக்கம் பார்க்க....

## 34 தமிழ் பேசும் எம்.பிக்கள் இம்முறை நாடாளுமன்றுக்கு

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலில் 34 தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். த.தே.கூ. தேசியப்பட்டியல் ஆசனங்கள் இரண்டுடன் 16 ஆசனங்களையும், ஈ.பி.டி.பி ஒரு ஆசனத்தையும், ஸ்ரீ லங்கா மு.கா தனித்து ஒரு ஆசனத்தையும் ஐ.தே.கவுடன் இணைந்து 04 ஆசனங்களையும் 23ஆம் பக்கம் பார்க்க....

## ஜேர்மன் அரசு அவதானிக்கும்

(பேர்லின்)

புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்படும் என ஜேர்மன் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையுடன் தொடர்ந்தும் இணைந்து செயற்பட விரும்புவதாக ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் பிரான்க் வோல்டர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலும், பொதுத் தேர்தலும் அமைதியானதும் நீதியானதுமான முறையில் நடைபெறறுள்ளது. 24ஆம் பக்கம் பார்க்க....

## அரசியலில் இருப்பேன் மகிந்த விடாப்பிடி



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினராக தொடர்ந்தும் அரசியலில் நீடிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் சவால்களுக்கு மத்தியில் தான பெற்ற வாக்கு முடிவுகளை ஏற்றுக் கொள்வதாக அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

நாட்டுக்காக தான் ஆற்றிய சேவையை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். கடந்த ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதி 23ஆம் பக்கம் பார்க்க....

## பிரதமர் ரணிலுக்கு பான் கீ மூன் வாழ்த்து

(ஜெனிவா)

நல்லாட்சி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கான நடவடிக்கைகளை இலங்கையின் புதிய அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என்று ஐ.நா செயலாளர நாயகம் பான் கீ மூன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு தெரிவித்த வாழ்த்



துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பாக தெரிவித் 24ஆம் பக்கம் பார்க்க....

## அமெரிக்கா வரவேற்பு

(வாஷிங்டன்)

இலங்கைத் தேர்தல் தொடர்பில் அமெரிக்கா வரவேற்பை வெளியிட்டுள்ளது.

ஜனநாயகம் மற்றும் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கு அரசாங்கமும் பொதுமக்களும் காட்டிய சிரத்தை வரவேற்கப்பட வேண்டியது என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் ஜோன் கிர்பி தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளர், வேட்பாளர்கள், சிவில் சமூகத்தினர் அனைவருக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் 23ஆம் பக்கம் பார்க்க....

## கன்னியமர்வு செப்ரெம்பர் – 01 இல்

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலின்போது தெரிவு செய்யப்பட்ட புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய புதிய நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

புதிய நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு உதவுவதற்காக உதவிக் கரும பீடமொன்று எதிர்வரும் 23, 24, 25 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் திறக்கப்படும் என்று நாடாளுமன்ற பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார். (எ-11)

## கூட்டமைப்பு மீதான நம்பிக்கையை மக்கள் மீண்டும் நிரூபித்துள்ளனர்

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையையும் உறுதியையும் வடக்கு கிழக்கு மக்கள் மீண்டும் நிரூபித்துள்ளனர். அவர்களின் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் எப்பொழுதும் நாம் காப்பாற்றுவோம் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மக்கள் எம்மீது கொண்ட நம்பிக்கையை மீண்டும் உலகம் அறிய நிரூபித்துள்ளார்கள். அவர்களுக்கு நன்றி தெரிவிக்க நாம் கடமைப்பட்டவர்கள். அவர்களின் நம்பிக்கையை எப்பொழுதும் நாம் காப்பாற்றியே தீருவோம்.

வடக்கு கிழக்கில் போட்டியிட்ட மக்கள் செல்வாக்கற்ற சில கட்சிகளின் விஷ 23ஆம் பக்கம் பார்க்க....

## கூட்டமைப்பின் தேசியப்பட்டியலில் அருந்தவபாலனுக்கும் இடம் கொடுங்கள்

### கல்விப்புலம் சார்ந்தோர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வேட்பாளர் அருந்தவபாலனுக்கு தேசிய பட்டியலில் இடம் கொடுக்குமாறு கல்விப்புலம் சார்ந்தவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் இரா.சம்பந்தன், மாவை.சேனாதிராசா ஆகியோருக்கு மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.


அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நடந்து முடிந்த இலங்கைப் பாராளுமன்ற பொதுத்தேர்தலில் (2015) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தமிழரசுக் கட்சியில் போட்டியிட்டு மிகச் சொற்ப வாக்கு வித்தியாசத்தில் உறுப்பினராக தெரிவு செய்யப்படாதுள்ள கந்தையா அருந்தவபாலன் அவா 23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அமரசிங்கம் தர்மகுலசிங்கம்



நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும், முரசு மோட்டையை நிரந்தர வதிவிடமாகவும், இல. 100, பிறவுன் கம்பனியடி யாழ்வீதி, வவுனியாவை தற்போதைய முகவரியாகவும் கொண்ட அமரசிங்கம் தர்மகுலசிங்கம் நேற்று (19.08.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரசிங்கம் - பராசக்தி தம்பதிகளின் மூத்த மகனும், கணேசராசா - ஸ்ரீபாரததேவி தம்பதிகளின் மருமகனும், சத்தியானந்ததேவியின் அன்புக் கணவரும், லதீஸன், தினோசன், கிருதுஜா ஆகியோரின் தகப்பனாரும், வரதலட்சுமி (திருவையாறு), தர்மானந்தன் (கனடா), கேதீஸ்வரன் (உதவிதிட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலகம், கிளிநொச்சி), கமலவேணி (ஆசிரியர் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரீரதேவி (லண்டன்), சரசானந்ததேவி (இந்தியா), விஜயகுமாரன், காலஞ்சென்ற விஸ்ணுகுமாரன், ஸ்ரீஸ்கந்தகுமாரன், சாந்தினிதேவி, சிவஞானதேவி, நந்தகுமாரன், கலாதேவி (கனடா), பத்மராணி (முகாமைத்துவ உதவியாளர் - பச்சிலைப்பள்ளி பிரதேசசபை), தர்மகுலசூரியர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2015) வியாழக்கிழமை மாலை 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இல.100, A9 வீதி
பிறவுன் கம்பனியடி,
வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே: 0778888681,
0770541014

(சி-1856)

# பிரபலங்களின் உறவுகள் பல நாடாளுமன்றுக்குத் தெரிவு!

உறவு முறையை கொண்ட ஏராளமான வேட்பாளர்கள் இந்த முறையும் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர். இந்த தரப்பினரிடையே தந்தை, மகன், சகோதரர்கள் மற்றும் உறவுக்கார சகோதரர்கள் என பலர் இதில் அடங்குகின்றனர்.

குருநாகல் மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்துக்கு தெரிவான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனான நாமல ராஜபக்ஷ, அமைச்சர் ராஜித சேனராத்னவின் புதல்வரான சத்துர சேனாரத்ன, சப்ரகமுவ முதலமைச்சர் மஹீபால ஹேரத்தின் மகனான கனக ஹேரத், முன்னாள் பிரதியமைச்சர் எச்.ஆர் மித்ரபாலவின் மகனான துஸ்மந்த மித்ரபால மற்றும் தென் மாகாண அமைச்சர் டீ.வீ உபுலின் புதல்வரான டீ.வீ. சானக ஆகியோர் இந்த குழுவில் அடங்குகின்றனர்.

அத்துடன் முன்னாள் பிரதமர் டி.எம ஜயரத்னவின் புதல்வரான அநுராத ஜயரத்ன கண்டி மாவட்டத்தில் இருந்து இந்த முறை நாடாளுமன்றத்துகததெிவானர் முன்னாள் அமைச்சர் மகிந்த விஜேசேகரவின் புதல்வரான காஞ்சன விஜேசேகர மாததறை மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்துக்கு தெரிவானார்.

முன்னாள் அமைச்சரான ஜகத் பாலசூரியவின் மகனான தாரக பாலசூரிய கேகாலை மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றததுக்கு தெரிவாகியுள்ளார்.

அநுராதபுரத்தில் இருந்து இந்த முறை நாடாளுமன்றத்துக்கு தெரிவான அமைச்சர் துமிந்த திசாநாயக்க, வட மத்திய முன்னாள முதலமைச்சரான பேர்டி பிரேமலால் திசாநாயக்கவின் புதல்வராவார். (எ-11)

## சேல்ஸ்மன் தேவை

O/L, A/L படித்த அனுபவமுள்ள புடவை வியாபாரம் தெரிந்த விற்பனையாளர் தேவை. நேரில் வரவும். சிவகணேசன் ரெக்ஸ்ரைல் 41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

## நகைக்கடை தளபாடம் விற்பனைக்கு

169, மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள தர்மதா நகை மாடத்தில் உள்ள தளபாடம் யாவும் விற்பனைக்கு உள்ளது.
நேரில் வந்து பார்வையிடவும்.
(1530)
தொடர்புகளுக்கு :- 0777110281

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு 18.07.1918 | இறப்பு 21.07.2015

கடந்த 21-07-2015
செவ்வாய்க்கிழமை
சிவபதமடைந்த எமது
குடும்பத் தலைவர்

**அமரர் முருகர் சீனியர்**

அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று 20-08-2015, வியாழக்கிழமை முற்பகல் 5.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

கரவெட்டி தெற்கு,
கரவெட்டி.
077 2722851

( C-1857 )

- குடும்பத்தினர்

## எனது பேரன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட மக்களே!

இரண்டு ஆண்டு காலத்திற்குள் எனக்கு மீண்டும் ஒரு பெரு வெற்றியைத் தந்திருக்கும் உங்கள் அனைவரது கரங்களையும் நான் நன்றியோடு பற்றிக் கொள்ளுகின்றேன்.

மாகாண சபை உறுப்புரிமையைப் போல அல்லாமல் - இப்போது, இது வேறு ஒரு பரிமாணத்திலான புதிய பணி.

நாடாளுமன்ற உறுப்புரிமை என்பது ஒரு மாறுபட்ட தளத்தில் உங்களுக்குச் சேவை ஆற்றுவதற்கான வாய்ப்பு. இது வேறு வகையான ஒரு பொறுப்பு.

மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதி என்பது மிகப் பெறுமதியானதோர் தகுதி. அந்த பொறுப்பினை என்னிடமும் வழங்குவதற்கு உங்களிடம் இருந்த நம்பிக்கைக்கும் மன உறுதிக்கும் எக்காலத்திலும் தளர்வு வராதவாறு நான் எனது கடமைகளைச் செய்ய முயற்சிப்பேன்.

எமது மக்களின் சமூக பொருளாதார வாழ்வின் மேம்பாட்டுக்காக உழைப்பதுவும், அவர்களது அரசியல் உரிமைகளை உறுதி செய்வதற்காகச் செயற்படுவதும் - ஒன்றைத் தவிர்த்து இன்னொன்று என்றில்லாமல் - சமாந்தரமாக முன்னெடுக்கப்பட வேண்டிய பணிகள்.

அவ்வாறு - இரண்டு தடங்களிலும் இரண்டு பணிகளையும் சம நேரத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கான அங்கீகாரமும் ஆணையுமே நாடாளுமன்ற உறுப்புரிமை என்பதனை நான் நன்கறிவேன்.

ஏற்கெனவே இரண்டு தடவைகள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய காலத்தில் நான் கற்றறிந்த விடயங்களையும், பட்டறிந்த பாடங்களையும் மனதில் வைத்து - யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்களாகிய உங்களுக்குச் சிறந்த சேவையை ஆற்ற முயற்சிப்பேன் என்பதை உறுதி செய்கின்றேன்.

மிகவும் சிக்கலான - அதியுச்ச போட்டித்தன்மை கொண்ட - இன்றைய அரசியற் சூழ்நிலையில் - மாறுபட்ட கொள்கைகளுடன் உங்கள் வாசல் தேடி பல அரசியற் பணியாளர்கள் வந்தார்கள். இருந்த போதும் - எங்களுக்கே நீங்கள் கதவுகளைத் திறந்தீர்கள். அந்த மாபெரும் அங்கீகாரத்தை நான் ஒருபோதும் மறவேன்.

மனமார்ந்த நன்றியுடன்,



(சி-1858)

தர்மலிங்கம் சித்தார்த்தன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுகிறதா என்பதை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருப்போம்

## சோபித தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டிற்கு நல்லாட்சியையும் ஜனநாயகத்தையும் ஏற்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்திடம் 5 வருட ஒப்பந்தத்தை வழங்கி விட்டு ஒதுங்கியிருக்கப் போவதில்லை எனவும் வழங்கிய வாக்குறுதிகள் நிறை வேற்றப்படுகிறதா? என்பதை உன்னிப்பாக அவதானிக்கப் போவதாகவும் மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித் துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிககையில்,

வழங்கிய வாக்குறுதிக்கு அமைய ஊழலுக்கு முடிவு கட்டி, குற்றம் செய்தவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டிய பொறுப்பு புதிய அரசாங்கத்திற்கு உள்ளது. எனினும் பழிவாங்குவதற்காக சட்டத்தை பயன்படுத்த வேண்டாம் எனவும் புதிய அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம்.

தேர்தல் முடிவுகளை அமைதியான முறையில் ஏற்றுக்கொள்ளுமாறு இதற்கு முன்னர், நடைபெற்ற தேர்தல்களில் தோல்வியடைந்த தரப்பினர் தமது ஆதரவாளர்களிடம் கேட்டுக்கொள்வது வழமையான சம்பிரதாயமாக இருந்து வந்தது.

எனினும் இம்முறை அப்படியான கோரிக்கை விடுக்கப்படாமையானது கவலைக்குரியது எனவும் மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்தார்.

அதேவேளை இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய பேராசிரியர் சரத் விஜேசூரிய, கடந்த ஜனவரி 8 ஆம் திகதி தாம் எடுத்த முடிவு தவறானதல்ல என்பதை மக்கள் மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளதாக கூறியுள்ளார்.



மக்கள் அன்று தவறிழைத்து விட்டதாக சிலர் கூறிய போதிலும் அது தவறில்லை என்பதை மக்கள் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் பேராசிரியர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## 3 கோடியே 75 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கம் மீட்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து சுமார் 3 கோடியே 75 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட்டுகளை விமான நிலையத்தில் இருந்து வெளியில் எடுத்துச் செல்ல முயற்சித்த இரண்டு விமான சேவை ஊழியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் இவர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப் பட்டுள்ளனர். இவர்களிடம் 75 தங்க பிஸ்கட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களில் ஒருவர் பிரபல விமான சேவை நிறுவனம் ஒன்றின் அதிகாரி. மற்றைய நபர் அந்த விமான நிறுவனத்தின் சாரதி என சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 4 கிலோ கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவர்கள் சிங்கப்பூரிலிருந்து நேற்று அதிகாலை 1.30 அளவில் வந்த விமானத்தில் கட்டுநாயக்க வந்துள்ளனர்.

குறித்த விமானத்தில் வந்த பயணி ஒருவர் இந்த தங்கத்தை கடத்தி வந்திருப்பதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விமான நிலையத்தில் இருந்து அதனை வெளியில் கொண்டு செல்வதற்காக அந்தப் பயணி தங்கப் பொதியை விமான சேவை அதிகாரியிடம் வழங்கியிருக்கலாம் என சுங்க அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சந்தேக நபர் சாரதியுடன் தங்கத்தை விமான நிலையத்திற்கு வெளியில் எடுத்துச் செல்ல முயற்சித்த போது, ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் பாதுகாப்பு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து சுங்க திணைக்களத்தின் மத்திய விசாரணைப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (இ-7)

## முஜிபுர் ரஹ்மான் நன்றி தெரிவிப்பு

நல்லாட்சியின் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆணையை வழங்கிய அனைவருக்கும் நன்றியை தெரிவித்துள்ள முஜிபுர் ரஹ்மான், இந்த பயணத்தில் இன, மத, கட்சி பேதங்களை மறந்து அனைவரும் ஒன்றிணைந்து முன்னோக்கிச் செல்வோம் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.


பொதுத் தேர்தலில் போட்டியிட்டு 83 ஆயிரத்து 884 வாக்குகளை பெற்று ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கொழும்பு மாவட்டத்திலிருந்து 7 ஆவது இடத்தில் பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள மத்திய கொழும்பு பிரதான அமைப்பாளர் முஜிபுர் ரஹ்மான், தனது வெற்றிக்கு உடல் ரீதியிலும் நிதி ரீதியாகவும் ஒத்துழைத்தோருக்கும் நன்றி தெரிவத்துள்ளார்.

தேர்தல் வெற்றிக்கு பின்னர் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,கடந்த பல வருட காலமாக மக்களுக்காக குரல் கொடுத்தமையினாலும் வீதியில் இறங்கி போராட்டங்களை நடத்தியமையினாலும் மக்கள் என்மீது நம்பிக்கை வைத்து பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்துள்ளனர்.இதற்காக நான் முதலில் இறைவனுக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளேன்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத்தினால் கொழும்பிலுள்ள அப்பாவி பொதுமக்கள் பழிவாங்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சியாக 20 வருடகாலமாக இங்குள்ள மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



கேலிச்சித்திரம்

## ஆடிப்பூர விழா

(இருபாலை)

கல்வியங்காடு மருவத்தூர் அம்மன் ஆலயத்தில் ஆடிப் பூர விழா எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை திருநெல்வேலி அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத் தில் இருந்து கஞ்சிப்பானை என்பன எடுத்துச் செல்லப்படவுள்ளது. இதனையடுத்தே மருவத்தூர் அம்மன் ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் இடம் பெற்று ஆடிப்பூர விழா நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5-136)

## 2000 ரூபா கொடுப்பனவு

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட முதியோர்களுக்கான ஆவணி மாத 2ஆயிரம் ரூபா முதியோர் கொடுப்பனவு இன்று வியாழக்கிழமை தொடக்கம் வழங்கப்படவுள்ளது.

எனவே குறித்த கொடுப்பனவுகளை பெற்று வருகின்ற முதியோர்கள் தத்தமது தபால்நிலையங்களுக்கு சென்று உரிய கொடுப்பனவுகளை விரைவாக பெற்றுக்கொள்ளும் படி கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி கேட்டுள்ளார்.(இ-5-60)

## குடும்பத்துடன் தோல்வியடைந்த பீல்ட் மார்ஷல் பொன்சேகா கட்சி

(கொழும்பு)

என்றுமே குடும்ப ஆட்சிக்கு எதிராக செயற்பட்ட ஜனநாயகக் கட்சி இம்முறை நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் குடும்பத்துடன் படுதோல்வியடைந்துள்ளது.

ஜனநாயக கட்சி இம்முறை தேர்தலில் பெரிய அளவிலான வெற்றியை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்திருந்த போதும் ஏற்றுக் கொள்ள முடியாதவகையிலான தோல்வியை சந்திக்க நேரிட்டுள்ளது.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தலைமை வகிக்கும் ஜனநாயக கட்சிக்கு இம்முறை நாடாளுமன்றில் எவ்வித ஆசனங்களையும் பெற்று கொள்ள முடியவில்லை.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின ஜனநாயக கட்சிபெற்று கொண்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 28,587ஆகும். (இ-7)

## விமலின் கட்சி பெரு வெற்றி

பொதுத் தேர்தலில் போட்டியிட்ட விமல் வீரவன்ச தேசிய சுதந்திர முன்னணியைச் சேர்ந்த ஐவர் பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

இவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து இம்முறை தேர்தலில் களமிறங்கினர்.

தேசிய சுதந்திர முன்னணி கட்சியில் இருந்து நாடளாவிய ரீதியில் 11 பேர் மட்டுமே களமிறக்கப்பட்டிருந்த நிலையிலேயே இந்த ஐவரும் வெற்றி பெற்றுள்ளனர்.

விமல் வீரவன்ச (கொழும்பு), வீரகுமார திசாநாயக்கா (அநுராதபுரம்), நிரோஷன் பிரேமரத்ன (மாத்தறை), ஜெயந்த சமரவீர (களுத்துறை), பத்ம உதயசாந்த (மொனராகலை) ஆகியோரே இம்முறை வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 258

## அஹங்காரத்தை விடுதல்

...உதாரணத்திற்கு இப்பொழுது நீங்கள் என்னுடன் இந்த வகுப்பில் இருக்கிறீர்கள். உங்களுக்குள் நிறைய கேள்விகள் எழும். ஆனால், நீங்கள் அவற்றையெல்லாம் உடனே தன்னிச்சையாக எழுப்பி விடுகிறீர்களா? இல்லை.

நீங்கள் அவற்றை உள்ளுக்குள்ளேயே கையாண்டு இறுதியில் அடக்கி வைத்து விடுகிறீர்கள். நீங்கள் அவற்றைக் கையாள்வதற்குக் காரணம், கேள்விகளைக் கேட்டு முட்டாள் தனமாகத் தோற்றமளித்து விடுவோமோ என்ற அச்சம்தான்.

முட்டாள்தனமாகத் தோற்றமளிக்க விரும்பாததால் கேட்பதில்லை. உங்கள் அஹங்காரத்தைக் காப்பாற்றிக் கொள்கிறீர்கள். என்னுடைய இருப்பினால் உங்கள் கேள்விகள் தானாகவே கரைந்து விடுமாயின், அது வேறு விடயம். ஆனால், இது அவ்வாறல்ல.

நீங்கள் உங்களைப் பற்றிய மற்றவர்களின் எதிர்ச்செயல்களிலும் அபிப்பிராயங்களிலும் மிகுந்த கவனம் செலுத்துகிறீர்கள்.

நீங்கள் இத்தனை ஆண்டு கர்லமாக மிகவும் கவனத்துடன் பேணிக் காத்துவரும் உங்கள் அஹங்காரத்தின் மீது தழும்பு விழும் துயரத்தை உங்களால் தாங்கிக்கொள்ள முடியாது.

இந்த அஹங்காரம்தான் உங்கள் ஆதாரமாக இருக்கிறது. அது பலமாகக் குலுக்கப்படும் பொழுது நீங்கள் ஆதாரமற்றுப் போய்விட்டதாக உணர்கிறீர்கள். அதனால் கீழ்ப்படிவது போன்ற சாக்கில் பேசாமல் இருந்து விடுகிறீர்கள்.



குருவின் இருப்பில் உங்கள் அஹங்காரத்தை வெளிப்படுத் தும் இன்னொரு வாய்ப்பையும் தவற விட்டு விடுகிறீர்கள். நீங்கள் மலர் தலை நோக்கி இன்னொரு அடி எடுத்து வைக்கும் வாய்ப்பையும் தவறவிட்டு விடுகிறீர்கள்.

சாமி ஒன்று சொல்கிறேன்.... இறுதியில் எல்லாக் கேள்விகளுமே முட்டாள்தனமானதுதான்.

சில கேள்விகள் முட்டாள்தனமானவை, மற்ற கேள்விகள் எல்லாம் அறிவுள்ளவை என்று ஒரு கணமும் எண்ணாதீர்கள். ஆழமான புரிந்து கொள்ளுதல் நிகழும் பொழுது கேள்விகள் தானாகவே கரைந்து விடும். இதுவே உண்மையான ஞானம். எப்படியோ நாம் நமது அஹங்காரத்தைப் பாது காத்துக் கொள்ள மிகவும் எச்சரிக்கையுடனேயே நடந்து கொள்கிறோம்.

நாமெல்லாம் நன்றாகப் பேணிக்காக்கும், அஹங்காரத்தின் இன்னொரு விளையாட்டும் இருக்கிறது- அதன் பெயர் சமூக அஹங்காரம். இந்த சமூக அஹங்காரம் என்பது என்ன?

உங்கள் வாழ்க்கை உங்களுக்கு மிகவும் அந்தரங்கமானது எனவும், அதற்குள் எவரையும் அனுமதிக்கக்கூடாது எனவும் எண்ணுகிறீர்கள்.

உதாரணத்திற்கு மக்கள் என்னிடம் தங்கள் குழந்தைகளின் தவறான போக்கைப் பற்றி விவாதிக்க வருகிறார்கள். ஆனால், சுற்றி மற்றவர்கள் இருக்கும்பொழுது அவர்கள் இயல்பாக இருப்பதில்லை. இவற்றைப் பற்றியெல்லாம் மற்றவர்கள் தெரிந்துகொள்வதை நீங்கள் விரும்புவதில்லை.


ஏனெனில், நீங்கள் உங் களைப் பற்றியும் உங்கள் குடும்ப உறுப்பினர்கள் பற்றியும் சமூக த்தின் கண்களில் ஒரு தோற்றத்தை உருவாக்கி வைத்து இருக்கிறீர்கள். *(தொடரும்)*

பரமஹம்ஸ சுவாமி

---

# சிறப்பாக நடைபெற்ற மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

வைரவிழா





புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி சமூகத்தினால் மத்திய கல்லூரியின் அறுபது வருட சேவையினை நினைவு கூரும் முகமாக கொண்டாடப்பட்ட வைரவிழா நிகழ்வு புதுக்குடியிருப்பு வரலாற்றில் ஒரு 'முக்கிய மைல் கல் என்றால் அது மிகையாகாது.

வைரவிழாவின் முதள் நாள் பாடசாலை மாணவர்களின் அணிவகுப்புடன் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்களினால் முதன்மை, சிறப்பு மற்றும் பிரதம விருநதினர்கள் வரவேற்கப்பட்டு மத்திய கல்லூரியின் கலையரங்கத்தில் சிறப்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. மாங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட விழா அதிபர் சி. சுப்பிர மணியேஸ்வரனின் தலைமைத்துவத்துடன் வருகைதந்திருந்த முதன்மை, சிறப்பு மற்றும் பிரதம விருந்தினர்கள் மதிப்பிற்குரிய இ.இரவீந்திரன் (செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்), திருமதி உ.முனீஸ்வரன் (வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிமனை, முல்லைத்தீவு), திரு. சி.குணபாலன் (பிரதேச செயலாளர், துணுக்காய்) பா. தயானந்தரூபன் (வைத்திய கலாநிதி, முல்லைத்தீவு), திரு ச. நாகரத்தினம் (ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர், முல்லைத்தீவு) மற்றும் புலம்பெயர் வாழ் பழைய மாணவ சங்க தலைவர்கள் ஆகியோரது சிறப்புரைகளுடன் மெருகேற்றப்பட்டது.

முதல் நாள் விழாவினை சிறப்பித்த முக்கியமான நிகழ்வுகளாக மத்திய கல்லூரி மற்றும் புலம்பெயர் நாடுகளிலிருந்து வருகை தந்திருந்த மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் பாடசாலைக் கல்விச் சமூகத்தினரால் வெளியிடப்பட்ட "புது வைரம்" என்ற வைர விழா மலர் மற்றும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வரலாற்றினைத் தாங்கி வந்த ஆவணப்படம் என்பவற்றுடன் மத்திய கல்லூரி மாணவர்கள் தயாரித்து வெளியிடப்பட்ட இறுவட்டும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இரண்டாவது நாள் விழாவும் பாடசாலை மாணவர்களின் அணிவகுப்புடன் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்களினால் முதன்மை, சிறப்பு மற்றும் பிரதம விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு மங்கழ விளக்கேற்றலுடன் விழா ஆரம்பிக்கப்பட்டது. இரணடாவது நாள் முதன்மை, சிறப்பு மற்றும் பிரதம விருந்தினர்களாக மதிப்பிற்குரிய திரு. செ. உதயகுமார் (மாகாணக் கல்விப் பணிப்பாளர், வட மாகாணம்), திரு க. பிரதாபன் (பிரதேச செயலாளர், புதுக்குடியிருப்பு), திருமதி தட்சாயினி வசீகரன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், முல்லைத்தீவு), திரு. பொ.பேரின்பநாயகம் (ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர், முல்லைத்தீவு) கலாநிதி க. சிவசிதம்பரம் (பழைய மாணவன், நோர்வே), சி.சிதம்பரப்பிள்ளை (முன்னாள் பிரதேச சபைத் தலைவர் புதுக்குடியிருப்பு), பொ.பாலசிங்கம் (முன்நாள் பிரதேச சபைத் தலைவர் புதுக்குடியிருப்பு) மற்றும் அ.சிவனருள்ராஜா (வட மாகாண உதவிக்கல்விப் பணிப்பாளர், விஞ்ஞானம்) என்பவர்கள் கலந்து கொண்டு தமது சிறப்புரைகளை வழங்கி விழாவை சிறப்பித்தனர்.

முதல் நாள் போன்றே வைரவிழாவின் இரண்டாவது நாள் நிகழ்வுகளாக மத்திய கல்லூரி மற்றும் புலம்பெயர் நாடுகளிலிருந்து வருகை தந்திருந்த மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், ஆசிரியர்களின் கலை நிகழ்ச்சிகள் என்பவற்றுடன் புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் வரலாற்றை தாங்கி வந்த "பூர்வீக நோக்கில் புதுக்குடியிருப்பு" என்ற நூல் வெளர்யீடும், காலஞ்சென்றவர்களான அண்ணா வியார் திரு வேலுப்பிள்ளை பொன்னம்பலம் திருமதி பொன்னம்பலம் நாகம்மா என்பவர்களை கௌரவிக்கும் முகமாக அவர்களது வாரிசுகளினால் ஐக்கிய

இராச்சிய பழைய மாணவர்களின் அனுரணையுடன் "வைர ஊற்று" என்ற இறுவட்டு வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

வைரவிழா நிகழ்வை மேலும் மெருகூட்டிய மற்றுமொரு அம்சமாக பாடசாலை மாணவர்களினால் அரங்கேற்றப்பட்ட "சத்தியவான் சாவித்திரி" மற்றும் கோவலன் கண்ணகை வரலாற்று" இலக்கிய நாடகங்களாகும்.

இரண்டு நாட்கள் வெகு விமரிசையாக நடந்தேறிய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வைரவிழா நிகழ்வின் மிக முக்கிய அம்சமாக குறிப்பிடப்படவேண்டிய விடயம் இவ்விழாவில் இடம்பெற்ற நிகழ்வுகள் அனைத்தும் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டு புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் அனைவருக்கும் கண்ணுக்கு விருந்தளித்தமையாகும். இது ஒரு கன்னி முயற்சியாக இருந்தபோதும் வைர விழாவில் நிகழ்ந்தேறிய அனைத்து நிகழ்வுகளும் தெளிவாக ஒளிபரப்புச் செய்யப்பட்டமை பாராட்டப்பட வேண்டிய முக்கிய விடயமாகும். அத்துடன் வைர விழா சிறப்பாக இடம்பெறும் வகையில் மத்திய கல்லூரியின் கலையரங்கம் மீளவும் புனரமைப்புச் செய்யப்பட்டு பொலிவுடன் காட்சியளித்தமை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி சமூகத்தினரால் விமரிசையாக கொண்டாடப்பட்ட வைரவிழா சிறப்புற இடம்பெற்றமை பரைது கூட்டுமுயற்சிக்கு கிடைத்த பரிசாகும். அந்த வகையில் முதலாவதாக வடமாகாண கல்வி அமைச்சு மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கல்வித்திணைக்களம் என்பவற்றின் ஒத்துழைப்பு நினைவு கூரத்தக்கது.

மேலும், மத்திய கல்லூரியின் அதிபர் திரு சி. சுப்ரமணியேஸ்வரன் அவர்களது விடா முயற்சியும் அர்ப்பணிப்பும் பாராட்டத்தக்கது. அதிபருக்கு உறுதுணையாக இருந்து இவ்விழா சிறப்பாக நடந்தேற தம்மாலான ஆக்கத்தையும் ஊக்கத்தையும் வழங்கிய மத்திய கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இனிவரும் காலங்களிலும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி புதுமைகள் பலபடைத்து தமிழுக்கும் தமிழ் மக்களிற்கும் மேலும் பல சேவைகளை வழங்க நாம் அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் சேவையாற்ற முனைவோமாக.

கலாநிதி ந.ரவீந்திரகுமாரன்
பழைய மாணவன்
அவுஸ்திரேலியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய தேசியக் கட்சியினால் தனித்து செயற்பட முடியாது

## நிமால் சிறிபால டி சில்வா கூறுகிறார்

**நாடாளுமன்றில் ஐக்கிய தேசியக் கட்சியினால் தனித்து செயற் பட முடியாது என முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**

இதனால் நாடாளுமன்றில் எமக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் மீது விசேடமான அழுத் தங்களை பிரயோகிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேட்பு மனு தாக்கல் செய்வது குறித்த நிச்சயமற்றத்தன்மை முதல் சில காரணிகளினால் தேர்தலுக்கு பிரவே சிக்க காலதாமதம் ஏற்பட்டது.



அவ்வாறு இல்லாமல் இருந்திருந்தால் நிச்ச யமாக இதனைவிட நல்ல பலன்களை பெற்றுக் கொள்ள முடியும். சிலர் நாம் இரண்டாக பிளவ டைந்துவிடுவோம் என நினைத்தார்கள் அவ் வாறானவர்களின் கனவு பலிக்கவில்லை.

இந்த முடிவுகளின் அடிப்படையில் எமது கட்சியின் உறுப்பினர்களுக்கு அழுத்தங் களை பிரயோகிக்க முடியாது.

நல்லாட்சி பற்றி பேசிய ஐக்கிய தேசியக் கட்சி பல்வேறு வழிகளில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மீது அழுத்தங்களை பிரயோகித்தது. நல்லாட்சி முன்னெடுக்கப்ப டுகின்றதா என்பதனை நாம் உன்னிப்பாக அவதானிப்போம்.

ஒரு கூறு வெற்றிலை 30 ரூபா, ஒரு கிலோ நெல் 22 ரூபாவாகும் என முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


## வேலையாட்கள் தேவை

லைடன் புடைவை நிலையத் திறகு 3 வேலையாட்கள்தேவை. பழக விரும்புவர்களும் விரும்பத்தக்கது. (பெண் பிள்ளைகள்) கவர்ச்சிகர மான சம்பளம் வழங்கப்படும்.

**லைடன் புடைவை நிலையம்,**
**410, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**


## எமது கண்ணீர் அஞ்சலி

### அமரர் சுந்தரலிங்கம் சுதர்சன்

எமது பாடசாலையின் உப அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற திருமதி இராஜலக்ஷ்மி பற்குணராஜா அவர் களின் பாசமிகு மருமகன் அமரர் சுந்தரலிங்கம் சுதர்சன் அவர்களின் திடீர் மறைவினால் துயர் அடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது அஞ்சலியை செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யாழ். கீரிமலை நகுலேஸ்வரா
மகா வித்தியாலயம்.

## 12 ஆம் ஆண்டு நினைவலைகள்

### செல்வி மங்கையர்க்கரசி பொன்னம்பலம்
(மங்கை)

மலர்வு குப்பிளானில் 23.08.1978
உதிர்வு லண்டனில் 20.08.2003



**அன்பின் திருவுருவாய் பாசத்தை பொழிந்த**
**இனிய இளைய அழகு மகளே! மங்கையே!**
**ஆண்டுகள் பன்னிரெண்டு ஆனாலும் ஆறுமோ**
**எம் துயர் தான் உன் நீங்காத நினைவுகளை**
**மனதில் சுமந்தபடி....**



குப்பிளான் தெற்கு
தொடர்புகளுக்கு:
077 8526152

உன் நினைவில் வாழும்
அப்பா, அம்மா, அண்ணன்மார்,
அக்காமார்.
பொன். மணிவாசா

(1483)

## ராசி பலன்

20.08.2015
(ஆவணி 03, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
பஞ்சமி காலை 6.06மணிவரை
சஷ்டி காலை 6.07 மணி தொடக்கம்
சித்திரை பிற்பகல் 2.45 மணிவரை
இராகுகாலம் 1.35-3.05 மணிவரை
சுபநேரம்7.35-9.05 மணிவரை
சஷ்டி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை | | செவ் |
| | | | சூரி, குரு சுக் புதன் |
| | | சந் சனி | ராகு |

**மீனம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தில் சில வாக்குவாதம், ஏற்பட்டு விலகும், பிரயாண பயமுண்டு.

**மேடம்:** மறக்க முடியாத இனிய சம் பவமொன்று நடைபெறும், நண்பர்கள் நம்பிக்கைக்குரிய வர்களாக நடந்து கொள்வர், உடல் நலன் சீராகும், கௌர வமான நாள்.

**இடபம்:** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங் காகும், செய்தொழிலில் சிறப்புக் கள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் கூடும்.

**மிதுனம்:** பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், பாதி யில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வெளியூர்த் தொடர்புகளால் நன்மை யுண்டு.

**கும்பம்:** பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ஆரோ க்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**கடகம்:** தொல்லை கொடுத்த சிலரே தோள் கொடுத்துதவ முன்வர லாம், புதிய நபர்களின் அறி முகம் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும், சுப செலவுகள் கூடும்.

**மகரம்:** விரதம் வழிபாடுகளில் ஆர் வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்திகரமாக அமையும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்:** உறவு பகை பாராமல் உதவி கள் செய்யும் நாள், கௌர வமான சம்பவங்கள் இடம் பெறலாம், சிந்திக்காமல் செய்த காரியங்களில்கூட சிற ப்படையும் நாள்.


**தனுசு:** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, குடும்பத்தில் மகி ழ்ச்சி அதிகரிக்கும் நாள், கௌர வமான சம்பவங்கள் இடம் பெற லாம்.


**விருச்சிகம்:** சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, சயன சுகக் குறைவான நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்:** தொழிலில் புதிய பொறுப்புக் களை யோசித்து ஏற்பது நல்லது, சுப செலவுகள் அதிகரிக்கும், பய ணங்களால் பலன் கிடைக்கும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.


**கன்னி:** தொழில் ரீதியாக புதிய திட் டங்கள் தீட்டுவீர்கள், சுப முயற்சிகள்மூலம் சுகம் காண வேண்டிய நாள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர்க்கந்தன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ பெருவிழா நேற்றையதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோசத்துடன் நேற்றுக்காலை பத்து மணிக்கு ஆலயத்தின் கொடியேற்றம் இடம்பெற்றது. (படங்கள்:-உ.சாளின்)

# கண்காணிப்பு இல்லாத காரணத்தினால் போதைப்பொருளை ஒழிக்க முடியவில்லை

## வடமாகாண உதவி மதுவரி ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**போதைப்பொருள் பாவனையை இல்லாமல் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வு நடவடிக்கைகளின் பின்னர் தொடர்ச்சியான கண்காணிப்பு இல்லாத காரணத்தால் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த முடியாதுள்ளதாக வடமாகாண உதவி மதுவரி ஆணையாளர் கிறிஸ்ரீன் யோசப் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் 9 மதுவரி நிலையங்கள் உள்ளன. அவற்றில் 70 மதுவரி உத்தியோகத்தர்கள் பணிபுரிவதுடன் மதுவரித் திணைக்களத்திற்கென 6 வாகனங்கள் தற்போது உள்ளன. அதை பயன்படுத்துவதற்கு 9 சாரதிகள் தேவைப்படும் இடத்தில் 2 சாரதிகள் மட்டும் கடமையாற்றுகின்றார்கள்.

இந்த நிலையில் சட்டவிரோத மதுபான விற்பனைகளை தடுப்பதற்காகவும் சமூக முன்னேற்றத்திற்காக வும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். கடந்த 7 மாதங்களில் ஆயிரத்து 300 சட்டவிரோத மதுபான விற்பனை மற்றும் உற்பத்தி என்பவற்றுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் அனுமதிப்பத்திரம்பெற்ற மதுபான விற்பனை நிலையங்களில் காணப்பட்ட தொழில் நுட்ப குற்றங்களுக்கு எதிராக 300 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு தண் டம் விதிக் கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தற்போது சட்டவிரோத மதுபான உற்பத்தி, கசிப்பு விற்பனை என்பன முற்று முழுதாக கட்டுப்பாட்டில் இருக்கின்றது.

யாழ். மாவட்டத்தில் இளம் சமூகத்தினரிடையே போதைப்பொருள் பாவனை, புகைத்தல், மதுபான பாவனைகளை இல்லாமல் செய்வதற்கு பல்வேறு மட்டத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

அதாவது பெற்றோர் கூடிய அளவு தமது பிள்ளைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

பாடசாலை மட்டங்களில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும்.

கிராம மட்டங்களில் சமூக சேவை உத்தியோகத்தர்கள் ஊடாக தொடர்ச்சியான பாவனை தொடர்பான அறிவித்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன் ஒவ்வொரு குடும்பத்தினுள்ளும்போதைப்பொருள்பாவனை தொடர்பான விழிப்பு ணர்வு ஏற்படும் பட்சத்தில்போதைப்பொருள்பாவனையை முற்றாக ஒழிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## திருமுறை பாராயணம்

நல்லூர் கந்தனின் மஹோற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை தொடக்கம் தினமும் காலை 5.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை இந்தியாவின் மதுரையம்பதியிலிருந்து வருகை தந்துள்ள தேவார இசைமணி கு.இராமச்சந்திரனின் திருமுறை பாராயணம் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பஞ்ச புராணங்களுடன் கந்தர் அனுபூதி,கந்தர் அலங்காரம், திருப்புகழ் பாடல்களும் பாராயணம் செய்யப்படவுள்ளது. (இ-5)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கரவெட்டி இ.எம்.சி. ரவீன்ஸ் கல்வி நிலையத்தின் பரிசளிப்பு விழாவும் நிலையத்தில் கல்வி பயிலுகின்ற தரம் 11 மாணவர்கள் பங்குபெறும் ஆங்கில மொழியில் மட்டும் நடைபெறவுள்ள முன்ஆயத்தமில்லாத பேச்சு நிகழ்வும் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோவில் கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்வி நிலையத்தில் நிர்வாகி ப.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்விற்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

முன் ஆயத்தமில்லாப் பேச்சு நிகழ்விற்கு கலந்து கொள்கின்ற சபையோர் ஆங் கிலத்தில் வழங்கும் விடயத்திற்கு மாணவர்கள் பேசவுள் ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (5)

## முதியோருக்கான சுயதொழில் கொடுப்பனவு

(கரணவாய்)

கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட முதியோர் சங்கங்களில் அங்கத்தவராக உள்ள 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கான சுயதொழில் கொடுப்பனவு கரவெட்டிப் பிரதேச செயலக முதியோர் செயலகத்தின் ஊடாக வழங்கப்படவுள்ளது.

மேற்படி கொடுப்பனவினை 20 ஆயிரம் ரூபாவாக வழங்க முதியோர் செயலகம் தீர்மானித்துள்ளது.

எனவே சிறப்பாகச் செயற்பட்டு வருகின்ற முதியோர் சங்கங்களில் அங்கத்தவராக அங்கம் வகிக்கின்ற முதியவர்கள் கரவெட்டிப் பிரதேச செயலகத்துடன் உடன்தொடர்பு கொள்ளுமாறு கரவெட்டிப் பிரதேச செய லர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார். (இ-5-60)




## இயல்திறன் விருத்தி பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

மகளிர் விவகார குழுக்களின் பிரதேச செயலக மட்ட பிரதிநிதிகளுக்கான இயல்திறன் விருத்திப் பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 24,25, 26 ஆம் திகதிகளில் பழைய பூங்காவில் அமைந்துள்ள மாவட்டச் செயலக பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

இப்பயிற்சிப்பட்டறை காலை 9மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இப் பயிற்சிப்பட்டறையில் கணக்குப்பதிவு, தீர்மானம் எடுத்தலில் பெண்களின் அவசியம், பெண் குழுக்களின் வினைத்திறன் செயற்பாடு, உள்ளக ரீதியான ஆரோக்கியம் தொடர்பாகவிளக்கமளிக்கப்படவுள்ளது.

மேலும் இப்பயிற்சிப்பட்டறையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலக மட்ட பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-9)

## 149 -வது பொலிஸ் தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்வுகள்

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 149 ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 8.30மணிக்கு யாழ்.கோட்டைப்பகுதியில் வெகு விமரிசையாக கொண்டாடப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் ஜி.கே.பெரேரா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி நடைபெறவுள்ள பொலிஸ் தினத்தை முன்னிட்டு அனைத்து மாவட்டங்களிலும் பொலிஸ் தினம் கொண்டாடப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் அணி வகுப்பு, உயிர் நீத்த பொலிஸ் அதிகாரிகளுக்கான அஞ்சலி நிகழ்வு, ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரிகளுக்கான கௌரவிப்பு நிகழ்வு என்பன நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு காணாத விருப்பு வாக்கு; பிரதமர் ரணில் சாதனை படைத்தார்



(கொழும்பு)

**இலங்கைத் தேர்தல் வரலாற்றில் வேட்பாளர் ஒருவர் பெற்ற அதிகூடிய விருப்பு வாக்குகள் எண்ணிக்கையைப் பெற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சாதனை படைத்துள்ளார். கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 5,00,566 வாக்குகளைப் பெற்று அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற பிரதமர் என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார்.**

கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் விருப்பு வாக்கு பட்டியலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முதலிடம் வகிக்கும் அதேவேளை இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ள சுஜீவ சேனசிங்க 117, 049 விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.

கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி பட்டியலில் ஹிருணிக்கா பிரேமச்சந்திரவும் வெற்றி பெற்றுள்ளார்.

அத்துடன் முஜீபுர் ரஹ்மான். எஸ்.எம். மரிக்கார் ஆகிய இரண்டு முஸ்லிம் உறுப்பினர்களும், மனோ கணேசனும் வெற்றி பெற்றவர்களின் பட்டியலில் உள்ளடங்கியுள்ளனர்.

கொழும்பு விருப்பு வாக்கு பட்டியல்

## ஐக்கிய தேசியக் கட்சி


சுஜீவ சேனசிங்க 117.049



ஹர்ஸ டி சில்வா 114.148



ரவி கருணாநாயக்க 111.394


சம்பிக்க ரணவக்க 100.444


எஸ்.எம். மரிக்கார் 92.526


முஜீபுர் ரஹ்மான் 83.884



இரான் விக்ரமரட்ன 82.738



விஜயதாச ராஜபக்ச 81.758


ஹிருணிகா பிரேமசந்திர 70.584


மனோ கணேசன் 69.064

## ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு


விமல் வீரவன்ச 313.801


உதய கம்மன்பில 198.818


சுசில் பிரேமஜயந்த 174.075



தினேஸ் குணவர்தன 124.451


பந்துல குணவர்தன 96.057


மொஹானலால் கிரேரு 65.703


காமினி லொக்குகே 58527

## ம.வி.மு.


அநுரகுமார திஸாநாயக்க 65.966

## கடல்சார் விவகாரங்களுக்கான ஜனாதிபதி ஆலோசகராக முன்னாள் கடற்படை தளபதி ஜெயந்த பெரேரா நியமனம்



ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவின் கடல்சார் விவகாரங்களுக்கான ஆலோசகராக இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஜெயந்த பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 13ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டு ள்ளது.

கடற்படையில் 37வருடங்கள் சேவையாற்றிய அட்மிரல் ஜெயந்த பெரேரா, இலங்கை கடற்படையின் 19வது கட்டளைத்தளபதியாக கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.

கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியின் திறமை வாய்ந்த மாணவரான ஜயந்த பெரேரா, திருகோணமலையில் அமைந்துள்ள கடற்படை கல்லூரியில் 1978ஆம் ஆண்டு ஆரம்ப பயிற்சியைப் பூர்த்தி செய்து கடட் அதிகாரியாக தனது கடற்படை வாழ்க்கையை தொடங்கினார்.

பதவிநிலை பயிற்சியை இந்தியாவிலும் தேசிய பாதுகாப்பு பாடநெறியை பாகிஸ்தானிலும் பயின்றார். அத்துடன் அவர் பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய ஆய்வுகள் பற்றிய கற்கை நெறியில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

சர்வதேச உதவியுடன்

## போதை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் உறுதியாக முன்னெடுக்கப்படும்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச உதவியைப் பெற்று போதை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை உறுதியாக முன்னெடுத்துச் செல்லவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு புதிய தொழில்நுட்பம் பெருமளவில் பயன படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

போதைப் பொருள் வியாபாரிகளுக்கெதிராக அவர்களது சமூக அந்தஸ்துக்களைக் கவனத்திற் கொள்ளாது சட்ட ஏற்பாடுகளை மிகக் கடுமையாக நடைமுறைப்படுத்த தயங்கப்போவதில்லை என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

நேற்று ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற பிரபல கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்காரவை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் விளம்பரத் தூதுவராக நியமனம் செய்யும் நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

போதை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் சிறுவர்கள் மீது விசேட கவனத்தைச் செலுத்தி போதைப் பொருள் பிரச்சினையிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கு வினைத்திறன்மிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

போதைப்பொருள் பிரச்சினை மிக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, நுவரெலியா போன்ற பிரதேசங்களில் இந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்தப்படும் என்றும் ஜனாதிபதி தெரி வித்தார். இளம் தலை முறையினரின் வாழ்க்கையை மிக மோசமாக சீரழித்துவரும் போதைப் பொருள் பிரச்சினையை சமூகத்திலிருந்து ஒழித் துக்கட்ட தன்னால் முடியு மான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கவுள்ளதாக குமார் சங்கக்கார இந்த நிகழ்வில் தெரிவித்தார்.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் விளம்பரத் தூதுவருக்கான நியமன கடிதத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குமார் சங்கக்காரவிடம் கையளித்தார். போதைப் பொருள் இல்லாத இலங்கையை உருவாக்குவதற்காக ஜனாதிபதி மேற்கொண்டு வரும் அர்ப்பணத்திற்காக ஒரு விசேட நினைவுச் சின்னத்தை கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் கலாநிதி நிலங்க சமரசிங்க வழங்கி வைத்தார்.

100 நாட்கள் வேலைத்திட்டத்தில் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களின் தகவல் அடங்கிய ஒரு நூலையும் கலாநிதி சமரசிங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இதன்போது கையளித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லரசுகளின் கொள்ளை


வெட்டி எடுக்கப்படும் பறவை எச்சம்

இலத்தீன் அமெரிக்கக் கண்டத்திலுள்ள ஒரு நாடு பெரு. அருகிலிருக்கும் ஏராளமான குட்டித்தீவுகளிலும் பாறைத்தீவுகளிலும் பல்லாண்டு காலமாக கடற்பறவைகள் தங்கி வாழ்ந்து வருகின்றன. மனித நடமாட்டம் இல்லாததால் அவற்றின் எச்சங்கள் அப்பகுதிகளில் மலை போல் குவிந்து கிடந்தன. இந்த இயற்கை இடுபொருளை மோப்பம் பிடித்த வணிகக் கப்பல்கள், இதைக் கொள்ளையடிக்க அலையலையாய் புறப்பட்டு வந்தன.

இங்கிலாந்துடன் இதர ஐரோப்பிய நாடுகளும் அப்போது புதிதாக முளைத்திருந்த அமெரிக்காவும் சேர்ந்து இங்கிருக்கும் 94 தனித்தீவுகளையும், பாறைத் தீவுகளையும் சுற்றி வளைத்தன. ஒரே சமயத்தில் ஒரு தீவின் எச்ச உரங்களை ஏற்றிச் செல்ல பலநாடுகளைச் சேர்ந்த 99 கப்பல்கள் முற்றுகையிட்டிருந்தன என்பதை வைத்தே, இதன் தீவிரத்தை நாம் உணர முடியும். இந்தப் போட்டியில் 66 தீவுகளை அப்போதே அமெரிக்கா கைப்பற்றிக் கொண்டது. இன்றும்கூட இதில் 9 தீவுகள் அமெரிக்காவின் உடமையாகவே இருக்கின்றன.

1860-களில் அனைத்து ஐரோப்பிய நாடுகளின் பறவை எச்ச இறக்குமதியைக் காட்டிலும் அமெரிக்காவின் இறக்குமதி அதிகம். இங்கிலாந்து, 1847-ம் ஆண்டில் இறக்குமதி செய்த எச்சத்தின் அளவு 2 இலட்சத்து 20 ஆயிரம் தொன்கள். இறக்குமதியான பறவைகளின் எச்சத்தை வயல்களில் இடுமாறு உழ்வர்களைக் கட்டாயப்படுத்தின இந்த நாடுகள்.

பெரு நாட்டின் கடற்பிரதேசத் தீவுகளில் மலை போல் குவிக்கப்பட்டிருந்த எச்சக்குவியலை, கப்பலில் ஏற்ற பணியாட்கள் பற்றாக்குறை ஏற்பட்டது. அப்போது உலக அளவில் அடிமை முறை ஒழிக்கப்பட்டிருந்த காலகட்டம். இதனால், சீனாவிலிருந்து தொழிலாளரகள் என்கிற பெயரில் அழைத்து வரப்பட்டவர்கள் இங்கே குவிக்கப்பட்டு, வேலை என்கிற பெயரில் கடுமையாகத் துன்புறுத்தப்பட்டனர். ஒரு மூன்றாம உலக நாட்டுக்குச் சொந்தமான இயற்கை வளத்தை, வேறொரு மூன்றாம் உலக நாட்டின் மானுட உழைப்பைக் கொண்டு பணக்கார நாடுகள் கொள்ளையடித்து, தங்கள் மண்ணுக்கு வளம் சேர்த்தன.

கடற்பறவைகளின் எச்சம் ஒன்றும் அமுதசுரபி அல்லவே. சில ஆண்டுகளிலேயே அவை தீர்ந்தன. பிறகு, அந்தக் கப்பல்கள் உலகம் முழுவதும் பறவை எச்சத் தீவுகளைத் தேடியலைந்து தோற்றன. பிறகு, இவற்றின் கவனம் நைட்ரேட் வயல்களின் மீது திரும்பியது. இவ்வயல்கள் பெருநாட்டிலும், பொலிவியா நாட்டிலும் நிறைய இருந்தன. இதற்கிடையே எச்ச உரங்களின் விற்பனை மூலம், பெரு நாட்டில் உருவாகியிருந்த புதிய முதலாளிகளும் இவ்வயல்களின் மீது கவனம் செலுத்தினர்.

நைட்ரேட்டின் தேவை வெறும் உரத்துக்கானது மட்டுமல்ல. அப்போது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருந்த டி.என்.டி வெடிமருந்துக்காகவும் அது தேவைப்பட்டது. இதனால் நைட்ரேட் சுரண்டல் அதிகரித்தது.

விழித்துக்கொண்ட பெரு மற்றும் பொலிவியா ஆகிய இரண்டு நாடுகளும் தங்கள் நைட்ரேட் வயல்களின் மீதான அந்நிய ஆதிக்கத்தை எதிர்க்கத் தொடங்கிய முயற்சி, ஒரு போர் தோன்ற வழிவகுத்தது. இந்தப் போர் 'பசுபிக் போர்' என்று நாகரிகமாக அழைக்கப்பட்டாலும், சூழல் வரலாற்றில் 'நைட்ரேட் போர்' என்றே குறிப்பிடப்படுகிறது.

பொலிவியா, பெரு ஆகிய இரு நாடுகளின் மீது திடீரென போர் தொடுத்தது, சிலி. உண்மையில் இப்போரை பின்னின்று நடத்தியது, பிரிட்டனின் முதலாளிகள்தான். இப்போரில் பிரிட்டன் மற்றும் ப்ரான்ஸ் படைகள் ஈடுபடுத்தப்பட்டன. ஆதிக்க சக்திகளின் ஆதரவுடன் போரில் வென்ற சிலி, நைட்ரேட் வயல்களைக் கைப்பற்றியது. இந்த வயல்கள், மறைமுகமாக பிரிட்டனின கைகளுக்குப் போய்ச் சேர்ந்தன.

இது, ஐரோப்பாவின் மற்றொரு நாடான ஜேர்மனிக்கு நெருக்கடியை ஏற்படுத்தியது. முதல் உலகப் போருக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த அந்நாட்டுக்கு வெடிமருந்துக்காக நைட்ரேட் பெருமளவில் தேவைப்பட்டது. எனவே, ஜேர்மனி மாற்று வழிகளை ஆய்வு செய்யுமாறு தனது அறிவியலாளர்களைத் தூண்டியது. இறுதியில் ஃப்ரிட்ஸ் ஹாப்பர் எனும் அறிவியலாளர் வளிமண்டலத்திலிருந்து நைட்ரஜனைப் பிரித்து அதை நிலைப்படுத்தி, நைட்ரேட்டுக்களாக மாற்றும் நுட்பத்தையும், கருவியையும் கண்டுபிடிக்க, நைட்ரேட் வயல்களின் ஆதிக்கம் முடிவுக்கு வந்தது.

இப்படி கண்டுபிடிக்கப்பட்ட செயற்கை நைட்ரேட்தான் உலகப்போர் முடிந்ததும் விளைநிலங்களுக்கு வந்து சேர்ந்தது. தற்போது ஆண்டுக்கு 10 கோடி தொன் அளவு நைட்ரேட் நம் மண்ணில் கொட்டப்படுகிறது. ஒரு காலத்தில் மூன்றாம் உலக நாடுகளின் வளங்களைக் கொள்ளையடித்து தம் நிலங்களுக்கு ஊட்டத்தையும், தம் மக்களுக்கு உடல் வலிமையையும் தேடிக்கொண்ட பணக்கார நாடுகள், இன்று பணத்துக்காக மூன்றாம் உலக நாடுகளின் மண்ணைக் கெடுத்து, அந்த மக்களின் உடல் நலத்தைச் சீரழிக்கின்றன.

'கெடுவான், கேடு நினைப்பான்' என்பது பழமொழி. அது செயற்கை நைட்ரேட்டைக் கண்டு பிடித்த ஃப்ரிட்ஸ் ஹாப்பருக்கு முழுவதும் பொருந்திப்போனது. இந்தக் கண்டுப்பிடிப்புக்காக இவருக்கு நோபல் பரிசுகூட கிடைத்தது. இவர் சைக்ளோன்-பி (Zyklon-B) எனும் மற்றொரு நச்சுக்காற்றையும் கண்டுபிடித்திருந்தார். இந்த நச்சுதான் இன்றைக்குக் களைக்கொல்லியாகப் பயன்படுத்தப்படுகிறது.

ஒரு யூதரான ஹாப்பரின் இந்தக் கண்டுப்பிடிப்பு, இறுதியில் யூத இனத்தையே அழிக்கப் பயன்படுத்தப்பட்டது வரலாற்றுக் கொடுமை. ஹிட்லரின் வதை முகாம்களில் இந்த நச்சுக்காற்றைச் செலுத்தித்தான் கூட்டம் கூட்டமாக யூதர்களைக் கொன்றழித்தனர். ஆக, இன்றைக்கு 'களைக்கொல்லி'களாக அறியப்படுபவையும் மனிதர்களைக் கொல்வதற்காகக் கண்டறியப்பட்டவைதான்.

ஹாப்பரின் மனைவியும் ஓர் அறிவியலாளர்தான். அப் பெண்மணி, கணவரின் கண்டுபிடிப்புகளுக்கு கடும்எதிர்ப்பு தெரிவித்து துப்பாக்கியால் தன்னையே சுட்டு தற்கொலை செய்துகொண்டார். மகனும் தற்கொலை செய்து கொள்ள எஞ்சிய குடும்ப உறுப்பினர்கள் வதை முகாமில் கொல்லப்பட்டனர். இறுதியில் நாடு கடத்தப்பட்ட ஹாப்பர், அகதியாக அலைந்து திரிந்து மரண முற்றபோது இவரது கண்டுபிடிப்பால் பணத்தைக் குவித்திருந்த எந்தவொரு கார்ப்பரேட்டும் இவருக்காகக் கவலைப்படவில்லை.

அறிவியலாளர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களின் கண்டுபிடிப்புகள்... மக்களுக்கானதாக இருக்க வேண்டும் என்பதையே இது உணர்த்துகிறது. ஆனால், வேளாண்மைக்கான நவீன அறிவியலானது இன்றும் கார்ப்பரேட்டுக்களுடனேயே கைகோர்த்துப் பிணைந்து கிடக்கிறது.


புவியியல், மண்ணியல், வேளாண் மையியல், வேதியியல், உயிரியல், தாவரவியல், பூச்சியியல் போன்ற பல துறைகளைச் சேர்ந்த அறிவியலாளர்கள் பெரும்பாலும் இன்று வரையிலும் கூட மண்ணை முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை என்பது தான் உண்மை.

அதேவேளை, எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் படித்து பட்டம் பெறாத, சர்வதேசக் கருத்தரங்குகளில் கட்டுரைகள் வாசிக்காத எளிய உழவர்கள் பல நூற்றாண்டுகளாகவே மண்ணை எப்படியெல்லாம் புரிந்து வைத்திருந்தார்கள் என்பதை அறிந்து கொள்ளும்போதுவியப்புவிண்ணை முட்டுகிறது. அதை அறிந்து கொள்ள உலகின் நான்கு திசைகளுக்கும் ஒரு பயணத்தை நாம் மேற்கொள்ள வேண்டும்.

ஜூனியர் விகடன்

## செல்பி

உலகம் பூரா செல்ஃபி மோகம் தலை விரிச்சு ஜிங்கு ஜிங்குனு ஆடுது. உலகையே வலம் வரும் சில டெரர் ஷாக்கிங் செல்ஃபிக்கள் இவை...



போர் விமானத்தில் பறந்தபடி எடுக்கப்பட்ட இந்தக் கொலவெறி செல்ஃபியை எடுத்திருப்பது அமெரிக்க விமானப் படை வீரர் ஒருவர். இது கடும் கண்டனத்துக்கு உள்ளானது. ஏரியல் போட்டோகிராபர் ஆன்டனி லவ்லெஸ் என்பவர் இதைப் பரிசீலித்து, மிகவும் பாதுகாப்போடு எடுக்கப்பட்ட செல்ஃபிதான் என சர்டிஃபிகேட் கொடுக்க விஷயம் வெடிக்காமல் அமுங்கியது!



படத்தில் சந்தோஷமாகப் பாட்டுப்பாடிக் கொண்டு செல்ஃபி ஸ்டிக்கோடு படங்களை எடுத்தபடி காரில் செல்லும் இந்த இசைக்குழு இப்போது உயிருடன் இல்லை. 'பேபி கம் பேக்' என்ற பாடலைப் பாடியபடி 'கோப்ரோ' கமராவோடு சென்ற இந்தக் குழு ஒரு விபத்தில் சிக்கிக்கொள்ள செல்ஃபி வீடியோ இணையத்தில் வெளியாகி ஐந்து மில்லியன் பேர் பார்த்திருக்கிறார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெத்தலியாற்று பால வேலைத்திட்டம் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி பெறும்

## முல்லை.பிரா.வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**நெத்தலியாற்று பாலத்திற்கான நிர்மாண வேலை திட்டத்திற்கான அனுமதி கிடைக்கப் பெற்றதும் இவ்வருட இறுதிக்குள் முடிவுபெறுமென முல்லைத் தீவு பிராந்திய வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் ரி.கே.இளங்கீரன் தெரிவித்துள்ளார்.**

மதகு, பாலத்தின் வேலைகள் இதுவரை பூர்த்தியாகவில்லை எனும் தலைப்பில் நேற்று வலம்புரியில் வெளியான செய்தியை அடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், நெத்தலியாற்று பாலத்திற்கான நிர்மாணவேலைத் திட்டம் கடந்த 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான ஒன்பது மாதகால ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தகாரரிடம் வழங்கப்பட்டது. குறித்த ஒப்பந்தகாரர் பால நிர்மாண வேலைகள் அனைத்தையும் மந்தகதியில் மேற்கொண்டதன் பிரகாரம் கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் கொண்ட குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன் அடிப்படையில் அவரது நிர்மாண வேலையில் திருப்தியின்மை காரணமாக அதிகாரி கொண்ட குழுவினரின் மேற்பார்வையின் பின்னர் வேலைத்திட்டத்தை இடைநிறுத்தினர்.

இதேவேளை குறித்த ஒப்பந்தகாரருக்கும் இது தொடர்பில் பல தடவைகள் எடுத்துக் கூறப்பட்டும் எச்சரிக்கை விடப்பட்டும் அவர் அதை அலட்சியம் செய்துள்ளார்.

அதன்பின்னர் வேலைத்திட்டங்கள் அனைத்தும் அவரிடமிருந்து முழுமையாக நிறுத்தப்பட்டு ஆவணங்கள் அனைத்தும் மீளப் பெறப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இவ்வேலைத்திட்டத்தை மேற்கொள்வதற்கு முன்வந்துள்ளனர்.

அதற்கான அனுமதியை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைமையலுவலகத்திற்கு கடிதம்மூலம் அறிவித்துள்ளனர்.

அவர்களின் அனுமதி கிடைக்கப் பெற்றதும் இவ்வருடம் மாரிகாலத்திற்கு முன்னர் பாலத்திற்கான நிர்மாண வேலைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-283)

## கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

நெற் செய்கையில் அண்மைக்காலமாக பெரும் பிரச்சினையாக உருவெடுத்து களைகளை கட்டுப்படுத்துவதில் உள்ள இடர்பாடுகளைக் கருத்திற் கொண்டு கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஒட்டுசுட்டானிலுள்ள மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலிற்கு திணைக்கள உத்தியோகத்தர்கள், துறைசார் ஆராய்ச்சியாளர்கள், விவசாய இரசாயன கம்பனிகளின் விற்பனை ஏற்பாட்டாளர்கள், மாவட்டத்திலுள்ள அனுபவமிக்க விவசாயிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் கலந்துரையாடலில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவிவசாயிகளும் இணைந்து கொள்ள முடியுமென முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் அறிவித்துள்ளார். (2)




# மன்னாரில் சீரற்ற மின்சார விநியோகம்; மின்சாரசபை முன்பாக திரண்டனர் மக்கள்



மன்னார் மாவட்டத்தில் நீண்ட வருடங்களாக இருந்துவரும் சீரற்ற மின் விநியோகம் தொடர்பாக இலங்கை மின்சார சபை அசமந்த போக்கில் செயற்படுவதாக வடக்கு மாகான கிராம அபிவிருத்தி அமைச்சருக்கு மக்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தி வந்தனர்.

இந்நிலையில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இலங்கை மின்சார சபையின் மன்னார் அலுவலகத்துக்கு சென்ற வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் அவரது தலைமையில் திரண்டு நின்ற மக்களோடு உரையாடிய பின்னர், மன்னார் மாவட்ட மின்சார சபையின் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு மக்களது பிரச்சினை குறித்து பதில் வழங்குமாறு தெரிவித்ததன் அடிப்படையில் அங்கு விசேட ஒன்றுகூடல் இடம்பெற்றது,

இதில் மக்கள் தமது கருத்தை தெரிவிக்கையில்,

குறிப்பாக க.பொ.த.உயர்தர பரீட்சை காலங்களில் ஒவ்வொரு ஆண்டும் மின்சார விநியோகம் சீரின்றி காணப்படுவதால் தமது பிள்ளைகளின் கல்வி எதிர்காலம் பாதிப்படைகின்றது.

இந்த நிலைக்கான காரணத்தை தமக்கு விளக்குமாறும் தெரிவித்தனர்,

அதனை தொடர்ந்து தனது கருத்தை தெரிவித்த மின் பொறியியலாளர்,

தாம் இந்த பிரச்சினைகள் தொடர்பில் தமது தலைமை பீடத்துக்கு அறிவித்துள்ளதாகவும் மன்னார் மாவட்டத்தில் உவர் காற்று வீசுவதால் அவை உயர் அழுத்த மின் கம்பிகள் விரைவாக பாதிப்படைகின்றன.

அத்தோடு ஆவணி மாதத்தில் காற்று வேகமாக வீசுவதால் இரவு நேரங்களில் குளிர்வடைந்து உப்புடன் தாக்கம் அடைவதால் இவ்வாறு அதிகமாக மின்தடை ஏற்படுகின்றது. இந்த தடவை மாத்திரம் சுமார் 530 மணித்தியாலங்கள் மின்தடை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் கருத்து தெரிவிக்கையில்,

இதற்கான நிரந்தரத் தீர்வை காண்பதற்கு மேல் மட்டங்களுடன் பேசி ஓர் சாதகமான நிலைக்கு செல்லும் வரை நடைபெற்று வரும் க.பொ.த.உயர்தர பரீட்சை காலத்தில் ஓரளவு விரைவாக மின்தடை ஏற்பட்டால் சீர் செய்து மக்களுக்கு அர்ப்பணிப்பான சேவையை வழங்குமாறும் மின்சார சபையினரை கேட்டுக்கொண்டார்.

மக்கள் சற்று நிலைமைகளை உணர்ந்து இலங்கை மின்சார சபைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் தெரிவித்தார்,

அதனை தொடர்ந்து மன்னார் அரச அதிபர் கொழும்பு சென்றுள்ளமையால் மேலதிக அரச அதிபர் திருமதி.ஸ்டான்லி டிமெல்லையும் சந்தித்து நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

இதில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ நிர்மலநாதன், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான வைத்தியர் குணசீலன், பரீமுஸ் சிறைவா, மதகுரு, மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-9)

# பழைய முறிகண்டி கிராமத்துக்கான வீதி புனரமைக்காமையால் பயணிக்க முடியவில்லை

## பயணிப்போர் அவதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகவும் பழைமை வாய்ந்ததும் அதிகளவான விவசாயக் குடும்பங்களைக் கொண்டதுமான பழைய முறிகண்டி கிராமத்துக்கான பிரதான வீதி புனரமைக்கப்படாமையால் அங்குள்ள மக்கள் அன்றாடம் போக்குவரத்தின் போது பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள மிகவும் பழைமை வாய்ந்த விவசாயக் கிராமங்களில் ஒன்றான பழைய முறிகண்டி கிராமத்தில் 250இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருவதுடன் மேற்படி கிராமத்தின் எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாத நிலை காணப்படுகிறது. சாதாரண தேவையை நிறைவேற்று வதற்கும் அக்கிராம மக்கள் வேறு இடங்க ளையே நாடவேண்டியுள்ளது.

இக்கிராமத்துக்கான பிரதான வீதி இதுவரை புனரமைக்கப்படாமல் மக்கள் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால், இவ்வீதியை பயன்படுத்துகின்ற பாடசாலை மாணவர்கள் உட்பட இப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே உரிய அதிகாரிகள் மாரி காலத்திற்கு முன்னர் செப்பனிட்டு தருமாறு அப்பகுதிமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(2)

# மழைநீர் வடிந்தோடுவதற்காக கட்டப்பட்ட குழாய்கள் சேதமாகின



(கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுரம் மேற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள முதலாம் குறுக்கு வீதியில் அண்மையில் மழை நீர் வடிந்தோடுவதற்கு ஏதுவாக வீதிக்கு குறுக்காக குழாய்கள் வைத்து கட்டப்பட்டன.

அண்மைய நாட்களில் மழைநீர் வடிந்தோடும் குழாய்கள் வைத்து கட்டப்பட்ட போதிலும் அவை தற்போது சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

பாரியஅளவிலான நிதி வளங்களைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படுகின்ற இத்த கைய வேலைத் திட்டங்கள் சிறந்த முறை யில் திட்டமிடப் படாமல் செய்யப்படுவதால் பொது மக்களுக்கும் சிறந்த பலன் கிடைக்கப் பெறா மல் நிதி வளமும் வீணடிக்கப்படுகின்ற நிலையே காணப்படுவதாகவும் பொதுமக்களால் சுட்டிக் காட்டப்படுகின்றது.

எதிர்வரும் காலங்களிலாவது இத்தகைய வேலைத்திட்டங்களை உரிய பிரதேச சபையினர், அதிகாரிகள் மேற்பார்வை செய்து வேலைகளை முன்னெடுக்க ஆவன செய்ய வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புத்திசாலி அணில்!

...உடனே நடந்த விடயத்தை கூறியது அணில்.

"ஒருவேளை அது நாளைக் காலையில் தனது நண்பர்களை எல்லாம் அழைத்துக் கொண்டு கொய்யாத்தோப்பினை சேதப்படுத்த வரலாம். அந்த நேரத்தில் நீ உன்னுடைய நண்பர்களோடு வந்து குரங்குகளை தடுத்திடு," என்றது அணில்

"அணிலே! மரங்களை எல்லாம் பாதுகாப்பதும் நம் போன்ற உயரினங்களின் கடமைதானே! நாளைக் காலையில் குரங்குகள் வருவதற்கு முன்னரே நான் எனது நண்பர்களுடன் அந்த கொய்யாதோப்பிற்கு வந்துவிடுவேன். ஆனால், அந்தக் கொய்யாத்தோப்பு எந்த இடத்தில் இருக்கிறது என்பதை மட்டும் நீ எனக்குத் தெரியப்படுத்திடு." என்றது கழுகு.

"கழுகே! இந்த மலையடிவாரத்தில் இருந்து நீ மேற்குப் பக்கமாக வந்தால் ஓர் ஒற்றைத் தென்னைமரம் நின்று கொண்டிருக்கும். அந்த தென்னை மரத்தின் வடக்கு பக்கமாக சிறிது தூரம் பறந்து வந்தால், நீ கொய்யாத் தோப்பினை வந்தடையலாம்," என்றது அணில்.

"இது போதும் அணிலே! நான் இந்த அடையாளங்களின்படியே என் நண்பர்களையும் அழைத்துக் கொண்டு மிகவும் எளிதாக அந்த கொய்யாத்தோப்பினை வந்தடைவேன். கொய்யா மரங்களை அழிக்க துடித்துக் கொண்டிருக்கும் அந்த குரங்கிற்கும், அதன் கூட்டத்திற்கும் நாம் சரியான பாடம் புகட்டலாம்," என்றது கழுகு.

மறுநாள் கழுகானது தனது நண்பர்களை எல்லாம் அழைத்துக் கொண்டு அணில் கூறிய அடையாளத்தின்படியே கொய்யா மரத் தோப்பினை வந்தடைந்தது.

அந்த கொய்யாமரங்களின் பின்னே அணிலும், மற்ற கழுகுகளும், அணிலின் நண்பனான கழுகும் மறைந்திருந்தன. சிறிது நேரத்தில் குரங்குகள் எல்லாம் மிகவும் உற்சாகத்துடன் தோப்பிற்குள் நுழைந்தன.

அணிலுடன் போட்டியிட குரங்கானது முதலில் வந்து நின்றது.

"அணிலே! நீ என்னை ஏளனம் செய்தபடி அறிவுரை கூறினாயே! நீ எங்கே இருக்கிறாய்? இதோ நானும் என் நண்பர்களும் வந்து இந்தத் தோப்பினை அழிக்கப்போகிறோம்," என்றது குரங்கு.

உடனே அணில் மறைவிடத்தில் இருந்த தனது கழுகு நண்பனை நோக்கியது.

"நண்பா! இதுதான் சரியான சமயம்! நாம் தாமதிக்காமல் தாக்குதலைத் தொடங்கிவிட வேண்டியது தான்," என்றது அணில்.

உடனே மறைவிடத்திலிருந்த கழுகுகள் எல்லாம் பறந்து வந்து, குரங்குகளை தாக்கத் தொடங்கின.

குரங்குகளோ அந்தத் தாக்குதலை சமாளிக்க முடியாமல் ஓட்டமெடுத்தன.



அதன் பின்னர் அவைகள் அந்த கொய்யாத் தோப்புப் பக்கம் எட்டிப் பார்க்கவேயில்லை!

கழுகுகள் எல்லாம் ஒன்று சேர்ந்தபடி அணிலைப் பாராட்டின.

"அணிலே! நல்லறிவோடு செயற்பட்டு அழகான சாகசம் ஒன்றினை நிகழ்த்தி விட்டாய்! எங்களை எல்லாம் அழைத்து வந்து நீ இந்த சாகசச் செயலினை செய்து இங்கே இருக்கும் மரங்களை எல்லாம் காப்பாற்றி விட்டாய்! இந்தப் புண்ணியமானது உன்னைச் சேர்ந்துவிடும்" என்று கூறியபடி தங்கள் இருப்பிடத்திற்குப் புறப்பட்டுச் சென்றன கழுகுகள். (முற்றும்)

## 08.2015 20 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 636 - அரபுப் படைகள் பைசண்டைன் பேரரசிடம் இருந்து சிரியா, பாலஸ்தீனம் ஆகியவற்றைக் கைப்பற்றினர்.
- 1000 - ஹங்கேரி நாடு முதலாம் ஸ்டீபன் என்பவனால் உருவாக்கப்பட்டது.
- 1866 - அமெரிக்க ஜனாதிபதி அண்ட்ரூ ஜோன்சன் அமெரிக்க உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததாக அதிகாரபூர்வமாக அறிவித்தார்.
- 1914 - முதலாம் உலகப் போர்: பெல்ஜியத்தின் தலைநகர் பிரசெல்சை ஜேர்மனியப் படைகள் கைப்பற்றின.
- 1917 - இலங்கையில் ஒரு ரூபாய்த் தாள் வழங்கப்பட்டது.
- 1940 - மெக்சிக்கோவில் இடம்பெற்ற கொலை முயற்சி ஒன்றில் ரஷ்யப் புரட்சியாளர் லியோன் ட்ரொட்ஸ்கி படுகாயமுற்று அடுத்த நாள் மரணமானார்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ருமேனியா மீது சோவியத் ஒன்றியம் தாக்குதலை ஆரம்பித்தது.
- 1948 - "இலங்கை குடியுரிமை சட்டம்" இலங்கை நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. இதன்மூலம் 10 இலட்சம் இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களான இந்திய வம்சாவளித் தமிழர்கள் நாடற்றவர்கள் ஆக்கப்பட்டனர்.
- 1953 - ஐதரசன் குண்டைத் தாம் சோதித்ததாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது.
- 1960 - செனெகல் மாலிக் கூட்டமைப்பில் இருந்து விலகி தனி நாடாக அறிவித்தது.
- 1968 - பனிப்போர்: 200,000 வார்சா ஒப்பந்த நாடுகளின் படைகள் செக்கோஸ்லவாக்கியாவினுள் புகுந்தன.
- 1975 - நாசா வைக்கிங் 1 விண்கலத்தை செவ்வாயை நோக்கி ஏவியது,
- 1977 - நாசா வொயேஜர் 2 விண்கலத்தை ஏவியது.
- 1988 - ஈரான் - ஈராக் போர்: 8 ஆண்டுகள் போரின் பின்னர் போர் நிறுத்தம் உடன்பாடாகியது.
- 1991 - எஸ்தோனியா சோவியத் ஒன்றியத்தில் இருந்து விலகி மீண்டும் தனி நாடாகியது.
- 1997 - அல்ஜீரியாவில் 60 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2006 - அருட்தந்தை ஜிம் பிறவுண் காணாமல் போனமை, 2006: கத்தோலிக்க அடிகள் ஜிம் பிரவுண் மற்றும் அவரது உதவியாளர் விமலதாஸ் ஆகியோர் அல்லைப்பிட்டியில் காணாமல் போனார்கள்.
- 2006 - நமது ஈழநாடு பணிப்பாளர், முன்னாள் யாழ்ப்பாணம் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிவமகராஜா சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

### பிறப்புக்கள

- 1890 - எச். பி. லவ்கிராஃப்ட், அமெரிக்க எழுத்தாளர், கவிஞர் (இ. 1937)
- 1910 - ஈரோ சாரினென், கட்டடக்கலைஞர் (இ. 1961)
- **1944 - ராஜீவ் காந்தி, இந்தியப் பிரதமர், (இ. 1991)**
- 1946 - நா. ரா. நாராயண மூர்த்தி, இந்தியத் தொழிலதிபர்
- 1951 - முகம்மது முர்சி, எகிப்திய அரசியல்வாதி, 5 ஆவது அரசுத்தலைவர்
- 1974 - ஏமி ஆடம்சு, அமெரிக்க நடிகை, பாடகி

### இறப்புகள்

- 984 - பதினான்காம் யோவான் (திருத்தந்தை)
- 1854 - பிரீடரிக் ஷெல்லிங், ஜேர்மன் மெய்யியலாளர் (பி. 1775)
- 1912 - வில்லியம் பூத், இரட்சணிய சேனையின் நிறுவனர்களில் ஒருவர் (பி. 1829)
- 1914 - பத்தாம் பயஸ் (திருத்தந்தை) (பி. 1835)
- 2006 - சி. சிவமகராஜா, ஈழத்து அரசியல்வாதி, பத்திரிகையாளர்
- 2013 - நரேந்திர டபூக்கர், இந்திய செயற்பாட்டாளர் (பி. 1945)
- 2014 - பி. கே. எஸ். அய்யங்கார், யோகா ஆசிரியர் (பி. 1918)

## ராஜீவ் காந்தி



ராஜீவ் காந்தி (Rajiv Gandhi) ஆகஸ்ட் 20, 1944 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது தாயாரான பிரதமர் இந்திரா காந்தி 1984, அக்டோபர் 31 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டதன் பின் இந்தியப் பிரதமரானவர்.

இந்தியாவின் புகழ்பெற்ற அரசியல் குடும்பத்தில் பிறந்தும், அரசியல் மீது ஆர்வமில்லாது, விமான ஓட்டும் தொழிலில் ஈடுபட்டிருந்தார். தாயார் இந்திரா காந்தியால் வாரிசாக வளர்க்கப்பட்டு வந்தவரெனக் கருதப்பட்ட இவரது தம்பியான சஞ்சய் காந்தி, விமான விபத்தொன்றில் காலமான பின்னர், மிகுந்த தயக்கத்துடன் வற்புறுத்தலுக்கு இணங்கி அரசியலுக்கு வந்தார். 1981 பெப்ரவரியில், சஞ்சய் காந்தியின் தொகுதியான உத்தரப் பிரதேசத்திலுள்ள, அமேதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இந்திய அமைதி காக்கும் படையினை இலங்கைக்கு அனுப்பி தமிழர்களுக்கு கூட்டாச்சி முறையிலான உரிமையை பெற்றுத் தர முயன்றார். 21 மே 1991 அன்று ஸ்ரீபெரும்புதூரில் தற்கொலைப் படையினரால் வெடிகுண்டு மூலம் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 18.08.2015~17.09.2015

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## எதிர்பாராத தனலாபம் இல்லம் தேடி வரும்!



**எதிர்பாராத தன லாபம் இல்லம் தேடிவரும்! சமயோசித புத்தியால் இமயம் போல் உயரவழி வகுத்துக்கொள்ளும் மிதுன இராசி நேயர்களே!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசிநாதன் புதன் சூரியனோடும், சுக்ரனோடும், குருவோடும் இணைந்து சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே, தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர். வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும். வீடு மாற்றம், நாடு மாற்றம் போன்றவைகள் விரும்பிய விதத்தில் அமையும். மொத்தத்தில் பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும் மாதமிது.

2 இல் செவ்வாய் நீச்சம் பெறுவது நன்மைதான். விற்ற பூமியாலும், விற்கப் போகும் பூமியாலும் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். கோபத்தோடு வெளியேறிச் சென்ற சகோதரர்கள் குணமோடு வந்திணைவர். உத்தியோகத்தில் கடந்த சில வருடங்களாக வராத "பிரமோஷன்" இப்பொழுது வந்து ஆச்சரியத்தில் ஆழ்த்தும். கூடுதல் சம்பளம் கிடைக்கும் விதத்திலும், கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் விதத்திலும் கிரக நிலைகளின் சஞ்சாரம் பலன் கொடுக்கப்போகிறது.

பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனியின் ஆதிக்கத்தால் பிள்ளைகளின் பிடிவாத குணம் மேலோங்கும்.

அவர்களை அன்பாக திருத்திக் கொண்டு வருவது நல்லது. பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடிவடைவதோடு பூர்வீக சொத்தில் ஒரு பகுதியைக் கொடுத்து விட்டுப் புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகலாம். சீரான வாழ்வு அமைய திருமாலை வழிபாடு செய்யுங்கள்.

போராடி வெற்றி பெறாமல் புறப்படும் பொழுதே வெற்றியை கைப்பற்றிக் கொள்ள, சஞ்சீவி மலையைச் சுமந்து வரும் அனுமனை நெஞ்சில் வைத்துப் போற்றுங்கள். வெற்றிலை மாலையை யோக எண் ஆதிக்கத்தில் அணிவித்தால் வெற்றி கிட்டும்.

**வக்ர புதனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 21 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். மீண்டும் செப்டம்பர் 15 ஆம் திகதி சிம்மத்திற்கு வக்ரமாகச் செல்கிறார். இந்த வக்ர காலங்கள் உங்கள் வளர்ச்சிக்கு வித்திடும் காலங்கள் என்றே சொல்லலாம்.

தக்க விதத்தில் பொருளாதார நிலை உயரும். தனவரவில் இருந்த தடைகள் மாறும். புகழ் பெற்றவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து உதவி செய்வர். மிகச் சிறந்த முறையில் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள நண்பர்கள் வந்திணைவர். ஆயினும் ராசிநாதனாக புதன் வக்ரம் பெறுவதால், ஒரு சில காரியங்களை யோசித்துச் செய்வது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.




**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 24 ஆம் திகதி சுக்ரன் வக்ர இயக்கத்தில் கடக ராசிக்கு செல்கிறார். 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதி வக்ரம் பெறும் பொழுது பெண் குழந்தைகளால் பிரச்சினைகள் ஏற்பட்டு மறையும். திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும். தனவரவு எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிகமாக வந்தாலும் இனத்தார் பகையும், இல்லத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்பு குறைவும் மனநிம்மதியைக் குலைக்கலாம்.

**விருச்சிக சனியும், சிம்ம செவ்வாயும்!**

செப்டம்பர் 5 ஆம் திகதி விருச்சிகத்தில் சனி சஞ்சரிக்கப் போகிறார். செப்டம்பர் 17 இல் சிம்மத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக முன்னேற்றம் கூடுதலாகவே இருக்கும். புத்திசாலி நண்பர்களால் புதிய பாதை புலப்படும். அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். ஊர் மாற்றம், திருப்தியாக அமையும். சிம்ம செவ்வாயால் அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்பு கிடைக்கும். வெளிநாட்டு அனுகூலம் உண்டு. இம்மாதம் சதுர்த்தியன்று விநாயகப் பெருமானை வழிபடுவதன் மூலம் சங்கடங்களிலிருந்து விடுபட இயலும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். வீட்டுத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பிள்ளைகள் நலனில் அதிக கவனம் செலுத்துவீர்கள். அவர்களின் கல்விப் பணிக்காகவும், தொழில் தொடங்குவதற்காகவும் எடுத்த முயற்சி வெற்றி பெறும். கணவன், மனைவிக்குள் பாசம் கூடும். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். சனி வக்ர நிவர்த்திக்குப் பிறகு உத்தியோகத்திற்காக விண்ணப்பித்திருப்பவர்களுக்கு அது கிடைக்கலாம். அரசியல் செல்வாக்கு மிக்கவர்களின் அனுகூலம் கிடைக்கும். குடும்பப் பிரச்சினை தீரும். சர்ப்ப சாந்தி செய்வது சந்தோஷத்தை வழங்கும்.

## தடைகள் அகன்று தக்க பலன் கிடைக்கும் நேரம்!



**தடைகள் அகன்று தக்க பலன் கிடைக்கும் நேரம்! உடன் இருப்பவர்களை அனுசரித்துச்சென்று கூடுதல் ஆதாயத்தைப் பெறும் கடக இராசிநேயர்களே!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசிநாதன் சந்திரன் சகாய ஸ்தானத்தில் ராகுவோடு இணைந்து சஞ்சரிக்கின்றார். தனாதிபதி சூரியன் தன ஸ்தானத்தில் மூன்று கிரகங்களுடன் இணைந்து சஞ்சரிக்கின்றார். குறிப்பாக விரயாதிபதியுடன் இணைந்து சஞ்சரிப்பதால் விரயங்கள் கூடுதலாகவே இருக்கும் என்றாலும் பணவரவு வந்து கொண்டே இருக்கும். கடன் சுமை பாதிக்கு மேல் குறைந்தது என்று சொல்லி சந்தோஷப்படுவீர்கள்.

பஞ்சம ஸ்தானாதிபதி நீச்சம் பெற்றிருப்பதால் பிள்ளைகள் வழியில் சில தொல்லைகள் ஏற்பட்டு அகலும். அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. 6, 9 ஆகிய இடங்களுக்கு அதி பதியான குரு, தன ஸ்தானத்தில் கூடியிருப்பதால் உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வி.ஆர்.எஸ் பெற்றுக் கொண்டு சுய தொழில் செய்யும் எண்ணம் மேலோங்கும். எத்தனை நாள்தான் கைகட்டி சேவகம் செயவது, இனிநாம் சொந்தத் தொழில் செய்தால் என்ன என்று சிந்திக்கலாம். இருப்பினும் சுய ஜாதகத்தை ஒரு முறை அலசிப்பார்த்து முடிவு எடுப்பது நல்லது. திசாபுத்தி பலம் பெற்றவர்கள் துணிந்து தொழில் செய்யலாம்.

கோச்சாரத்தைக் காட்டிலும் திசா புத்தி பலம் பெற்றால்தான் அதிக நற்பலன் கிடைக்கும். குறிப்பாக பாதகாதிபதி திசை நடப்பவர்கள் பணி ஓய்வு பெறாமல் பணியைத் தொடர்வதே நல்லது. உடன்பிறப்புகளால் ஒரு சில நன்மைகள் உண்டு. வீட்டு உபயோகப் பொருட்களில் விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். குறிப்பாக தங்கம், வெள்ளி போன்றவற்றை வாங்க உகந்த நேரமிது. மங்கல நிகழ்ச்சிகளை முன்னிட்டு மக்கள் செல்வங்களுக்காக வாங்கிச் சேர்ப்பீர்கள். ஆனைமுகன் வழிபாடும், ஆறுமுகன் வழிபாடும் உகந்தது.

**வக்ர புதனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 21 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். மீண்டும் செப்டம்பர் 15 ஆம் திகதி சிம்மத்திற்கு வக்ரமாகச் செல்கிறார். இதன் விளைவாக மிகுந்த நன்மைகள் வந்து சேரும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். செய்யும் தொழிலில் நவீன தொழில் நுட்பங்களைப் புகுத்தி செல்வ வளம் குவிய வழிவகுத்துக் கொள்வீர்கள். உடன்பிறப்புகளோடு இணைந்து செய்த தொழிலில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு பிரிந்து செல்ல நினைத்தவர்கள் இப்பொழுது மீண்டும் மனம் மாறி இணைந்து செயறபடத் தொடங்குவர். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும் இந்த நேரத்தில், புதிய வீடு வாங்கக் குடியேறலாமா? என்று கூட ஒரு சிலர் சிந்திப்பர்.




**கடகச் சுக்ரனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 24 ஆம் திகதி சுக்ரன் வக்ர இயக்கத்தில் உங்கள் ராசியான கடகத்திற்கே மீண்டும் செல்கிறார். இதன் விளைவாக தாய்வழி உறவில் விரிசல் ஏற்படலாம். தலைமைப் பொறுப்புகளில் இருந்து திடீரென மாறுபாடு வந்து சேரும். திருமணம் போன்ற சுபகாரியங்களுக்காக ஒரு சிலர் செலவிட்டு மகிழ்வர். இளைய சகோதரத்தால் ஏற்பட்ட விவகாரத்தை பஞ்சாயத்துக்கள் மூலமாக சரி செய்து கொள்வீர்கள்.

**விருச்சிக சனியும், சிம்ம செவ்வாயும்!**

செப்டம்பர் 5 ஆம் திகதி விருச்சிகத்தில் சனி சஞ்சரிக்கப் போகிறார். சப்தம அஷ்டமாதிபதி 5-ல் சஞ்சரிககும் பொழுது குடும்பச்சுமை கூடும். செலவுகள் அதிகரிக்கும். கடுமையாக முயற்சித்தும் சில காரியங்கள் முடிவடையாமல் போகலாம். செப்ரெம்பர் 17 ஆம் திகதி சிம்மத்தில் செவ்வாய் சஞ்சரிக்கும் பொழுது நன்மைகள் படிப்படியாக வந்து சேரும். நாட்டுப்பற்று மிக்கவர்கள் உங்கள் கூட்டு முயற்சிக்கு ஒத்துழைப்புச் செய்வர். பங்காளிப் பகை மாறும். தங்கு, தடைகள் அகலும். இம்மாதம் முருகப்பெருமான் வழிபாடு முன்னேற்றம் வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் முற்பாதியில் விரயமும், பிற்பாதியில் லாபமும் கிடைக்கும். தாய்வழி உறவினர்களின் பகை மேலோங்கும். தனவரவு போதுமானதாக இருந்தாலும், மன நிம்மதி இருக்காது. உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்வது நல்லது. குழந்தைகளின் கல்யாணம், காதுகுத்து, கல்வி வளர்ச்சிக்காக செலவு செய்யும் சூழ்நிலை உண்டு. செப்ரெம்பர் 4 ஆம் திகதி வரை சிறுசிறு தொல்லைகள் உடலில் உருவாகலாம். மாற்று மருத்துவத்தால் உடல்நலத்தை சீராக்கிக் கொள்வது நல்லது. ஆதியந்தப்பிரபு வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் அனுமதியுடனேயே தேசியப்பட்டியல் உறுப்பினர்கள்

## சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப பட்டியலின் கீழ் நாடாளுமன்றத்திற்கு நியமிக்கப் படும் 12 பேரின் பெயர்கள் அடங்கிய பட்டியலை ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டியது தன்னுடைய கடமை என முன்னணியின் முன்னாள் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**

இதற்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்களில் கட்சி தலைவரின் அனுமதியின் கீழ் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் இதனால், இம்முறையும் தான் அதனை கையாள போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஸ்தாபிக்கப்பட்ட நாளில் இருந்து அதன் பொதுச் செயலாளராக கடமை யாற்றி வந்துள்ளேன்.



வேட்புமனு தாக்கல் செய்யப் படும் முன்னர், தற்போதைய ஜனா திபதி மைத்திரிபால சிறிசேனவு டன் கலந்துரையாடியே தேசியப்பட்டி யலை தயாரித்து அதனை தேர்தல் ஆணையாளரிடம் கையளித்தோம்.

இதனடிப்படையில், ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணிக்கு கிடை த்துள்ள 12 தேசியப்பட்டியல் உறுப் பினர்களுக்கான பெயர்களை பரிந் துரைத்து அனுப்பி வைக்க வேண் டும்.

நீதிமன்றத்திற்கு சென்று தடை யுத்தரவுகளை பெற்று இதனை செய்ய வேண்டிய அவசியமில்லை. கட்சி தலைமையுடன் கலந்துரை யாடிய பின்னரே நாங்கள் இறுதிப்ப ட்டியலை அனுப்புவது வழக்கம்.

இம்முறையும் அப்படி செய்யும் எதிர பார்ப்புடனேயே நான் இருந் தேன். சட்டரீதியாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் நான் என்றே கருதுகிறேன்.

எனினும் பொதுச் செயலாளர் யார் என்பதை தேர்தல்கள் ஆணை யாளரே தீர்மானிக்க வேண்டும் எனவும் சுசில் பிரேமஜயந்த தெரி வித்தார்.

இதனிடையே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப்பட் டியல் குறித்து ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுடன் கலந்துரை யாடி இறுதி முடிவை எடுக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சுசில் பிரேமஜயந்தவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணிக்குள் பிரச்சினைகள் உருவாகாத வகையில் அதனை மேற் கொள்ளு மாறும் அவர தெரிவித்தார. (இ-7)




மிஷாந்தி செல்வராஜாவின் மூன்றாம் முத்தம் குறுநாவல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது நூலாசிரியர் மிஷாந்தி செல்வராஜாவின் பெற்றோர் மங்கல விளக்கேற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதையும் நூலின் முதற்பிரதியை நூலாசிரியர் மிஷாந்தி–செல்வராஜா, கவிஞர் சோ.பத்மநாதனுக்கு வழங்கி வைப்பதையும் நூலின் நயப்புரையினை வெளிவாரிப்பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் திருமதி மீரா அருள்நேசன் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# கல்வி எனும் அறிவாயுதத்தால் அறிவுப்பசி தீர்த்த அரும்பெரும் பொக்கிசம் அமரர் சி.வரதராஜன்

தமிழ் கல்வி உலகில் பொரு ளியல் பாட ஆசிரியர்களுள் ஒரு ஜாம்பவனாக திகழ்ந்தவர்தான் பொருளியல் பேராசான் அமரர் சின்னத்துரை வரதராஜன். இவர் எம் கல்விப்புலத்தில் பொருளியல் பாடத்தைக் கற்பிப்பதில் மட்டும் அன்றி ஆசிரியர்களுக்கும் மாண வர்களுக்கும் சிறந்ததொரு வழி காட்டியாகவும் திகழ்ந்தார். நான்கு தசாப்தகாலமாக ஈழத்திருநாட்டில் மாணவர்களுக்கு ஒளியேற்றும் “ஞானநெடும்சுடரோனாய்த்” திக ழ்ந்த இவர் 18.08.2014 அன்று இவ்வுலகத்தை விட்டு பிரிந்து சென்றார் என்ற செய்தி ஈழத் தமிழர் நெஞ்சங்களை நெருட வைத்த செய்தியாகும். இவரது இழப்பு ஈழத்திருநாட்டில் யாராலும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

ஈழநாட்டின் வடபால் கல்வி கேள்வி, ஞானத்தில் உயர்ந்து விளங்கும் ஊரெழு எனும் கிராம த்தில் 1951 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 07 திகதி சின்னத்துரை மகேஸ்வரி தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக வரதரா ஜன் பிறந்தார். தனது தந்தையின் தொழில் நிமிர்த்தம் தனது ஆரம் பக்கல்வியை திருகோணமலை இந்துக்கல்லூரியில் தரம் 8 வரை கல்வி கற்றார். பின்னர் யாழ்ப் பாணம் வைத்தீஸ் வராக்கல்லூ ரியில் கல்வி கற்று 1972 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக் கழகம் சென்று பொரு ளியல் பாடத்தை தெரிவு செய்து கற்று இரண்டாம் தர உயர் நிலையில் சித்தி பெற்ற நான்காவது தமிழ் மாணவன் என்ற பெருமையை பேராதனைப் பல்கலைக்கழக வர லாற்றில் 1976ஆம் ஆண்டு நிலை நாட்டி, அப்பல்கலைக்கழகத்தில் பொருளியல் விரிவுரையாளரானார்.

2014 ஆண்டு நடுப்பகுதியில் அவர் உயிராயுதம் மௌனிக்கும் வரை இறுதிவரை தன் கல்வி எனும் அறிவாயுதத்தால் அறிவுப்பசி தீர்த்த அரும்பெரும் பொக்கிசமாய் திகழ்ந்தார்.

இவர் தமிழ்த் தேசியத்தை நேசி த்த ஒருவராவார். ஆரவாரம் இன்றி அமைதியான முறையில் தமிழ் தேசிய உணர்வாளராக, தேசியப்ப றறாளராக விளங்கியவர். கொள்கை ரீதியாக தனது கோட்பாடுகளில் உறுதியாக இருந்தவர். இன்றைய அரசியல் உரிமைகளை பெறு வோம் என்ற ஆர்ப்பரிப்போர் மத் தியில்ஒரு முன்மாதிரியாக அர சியல் சாணக்கியத்தில் இவருக்கு இருந்த இவ் ஈடுபாடு இவரை பல தடவைகள் சிறைவாசம் வரை இழுத்துச் சென்றது. இதனால் பல துன்ப துயரங்கள் வேதனைகளை அனுபவித்தவர். பின்பு இறுதிக் காலத்தில் அதிலிருந்து விலகி இருந்தார்.

அமரர் சி.வரதராஜன் சேர் ஒரு ஆசிரியர் என்ற நிலைக்கு அப்பால் அவர் ஒரு எழுத்தாளராகவும் திகழ் ந்தார். “தேனுப்பிரியன்” என்ற புனைபெயரில் அவர் பல கட்டுரை களை எழுதியுள்ளார். இவரது எழுத்துக்கள் ஆழ்ந்த சிந்தனைப் போக்குடையவை. இவர் எழுதிய கட்டுரைகளில் “தமிழர் தாயகம் ஒரு மாயையா?” “தமிழர்களின் வாழ்விடங்களும் சிங்களக் குடியேற்றமும்” “வடக்கில் வசந்தம் வீசுமா?” “இலங்கைக்களத்தில் அமெரிக்கக்குழு -சீனட்ராகன் இந் திய யானை” “இரணைமடு நீர் வழங்கல் யாரு க்கு இலாபம்?” “வரலாற்றிலிருந்து நாங்கள் பாட ங்களைப் படிக்கவில்லை என்றால் வரலாறு எங்களை மன்னிக்காது” போன்ற கட்டுரைகள் மிக முக்கியமா னவை.

அமரர் அவர்கள் இன்றைய ஆசிரியர் குழாத்திற்கு ஓர் முன்மாதி ரியானவர் எந்தவிதமான தீய பழக் கங்களும் அற்றவர். தன் சொந்தப் பிள்ளைகள் போல் எல்லோரையும் கவனம் எடுப்பவர். மிகவும் சுறு சுறுப்பானவர். கடின உழைப்பாளி, எந்த ஒருவிடயத்தையும் ஆழ ந்து [illegible] ண்டவர். தான் [illegible] ண்ட விடயத்தில் மிகுந்த தெளிவு டனேவகுப்பிற்கு நுழைவார். சகல விடயங்களையும் தன்ஞாபகத்தில் வைத்திருப்பவர். இத்தகைய ஆற் றல் மிக ஆசிரியரை இனிக் காண் பது என்பது அரிது. தனது நான்கு தசாப்தகால கற்பித்தல் வரலாற்றில் அன்று போல் இன்றுவரை கற்பித்த ஒரு ஆசிரியப் பெருந்தகை இவர் ஆவார். இவர் இவ்வுலகில் ஆல விருட்சமாய் நின்று எமக்கெல்லாம் நிழல் கொடுத்தார். இன்று இவர் இல்லாவிட்டாலும் இவரது மாண வர் பரம்பரையினர் விழுதுகளாய் வேரூன்றியுள்ளார்கள்.

இத்தகைய ஆற்றல்மிக்க ஒரு பேராசனை இறுதியில் கொடிய நோய் ஒன்று வந்துவிட்டது என்பதை இறுதியில் அறிந்திருந்தும் உடல் தளர்வுற்று இருந்தபோதிலும் இறு திவரை வகுப்பிற்கு சென்று பாடம் போதித்து வந்தவர். இறுதி நாட்க ளில் வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டிருந்த வேளையில் அங்கு சென்ற மாணவர்களிடம் “நான் கல்லறைக்குப் போக மாட் டான் வகுப்பறைக்குத்தான் வரு வேன்” என்று உறுதிகூறி அனுப பியவர். தன் உடல் நோயை கருத் தில் எடுக்காது மாணவர் நலனில் பெரும் அக்கறை கொண்ட ஒரு ஆசிரியராவார். தான் வைத்திய சாலைக்கு செல்லும் போதும் கூட 2014 உயர்தரப் பொருளியல் பாட வினாத்தாளில் காணப்பட்ட தவறு களைச் சுட்டிக்காட்டி அது பற்றிய ஒரு கட்டுரையை எழுதி கொடு விட்டே சென்றவர்.




இத்தகைய ஆற்றல் மிக்க பொரு ளியலின் இமயமாய், ஒளிகொடு க்கம் சூரியனாய் எம் கல்வி உல கில் வலம் வந்த அமரர் சி.வரத ராஜன் இன்று இவ்வுலகில் இல் லாவிட்டாலும் அவர் ஒவ்வொரு வரது நெஞ்சங்களிலும் வாழ்ந்து கொண்டே இருப்பார் என்பது உறுதி. பொருளியல் உள் ளவரை வரதராஜன் என்ற நாமம் வாழும்.

**க.சந்திரலிங்கம**
**(மாணவனும் ஆசிரியரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ்.பி.திஸாநாயக்க தேர்தலில் தோல்வி



(கொழும்பு)

எஸ்.பி. திசாநாயக்க, லக்ஷ்மன் செனவிரத்ன உட்பட பல முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் 23 பேர் இம்முறை தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர்.

இவர்கள் சுதந்திர இலங்கையின் 15 ஆவது பாராளுமன்றத்துக்கான தேர்தலில் பல்வேறு மாவட்டங்களிலும் போட்டியிட்டு போதிய விருப்பு வாக்குகள் இல்லாமல் தோல்வியைத் தழுவியவர்களாவர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் கண்டி மாவட்டத்தில் போட்டி யிட்ட எஸ்.பி. திசாநாயக்க, மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்ட லக்ஷ்மன் யாபபா அபேவர்தன, ஹேமால் குணசேகர, கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட மஹிந்தானந்த அளுத்கமகே, குருநாகலில் போட்டியிட்ட டி.பி. ஏக்கநாயக்க மற்றும் திஸ்ஸ கரலியத்த, ரோஹண புஷ்பகுமார ஆகியோரும் தோல்வியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் பதுளை மாவட்டத்தில் போட்டியிட்ட உதித்த லொக்கு பண்டார, புஷ்பகுமார, சாமிக புத்ததாச, லக்ஷ்மன் செனவிரத்ன ஆகியோரும்மொனராகலை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்ட ஜகத் புஷ்ப குமார, விஜித் விஜயமுனி சொய்சா ஆகியோரும் தோல்வியடைந்துள்ளனர்.

அக்கட்சியில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட்ட நிருபமா ராஜபக்ஷ களுத்துறை மாவட்டத்தில் போட்டியிட்ட மகிந்த சமரசிங்க, காலியில் போட்டியிட்ட பியசேன கமகே, கம்பஹாவில் போட்டியிட்ட உபேக்ஷா சுவர்ணமாலி, பண்டு பண்டாரநாயக்க, பீலிக்ஸ் பெரேரா சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே , ருவன் ரணதுங்க, துலிப் விஜேசேகர, சரதகுமார குண ரத்ன போன்றோரும் தோல்வி கண்டுள்ளனர். (இ-7)

# ஆதரவுக்கு நன்றி தெரிவித்த மகிந்த

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்காக தங்கள் வாக்குகளை பயன்படுத்திய அனைவருக்கும் தனது நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அனைத்து அழுத்தங்களுக்கு மத்தியிலும் தன்னுடன் செயற்பட்ட அனைவரையும் இந்த சந்தர்பபத்தில் நினைவு கூர் வதாக அவர் கூறியுள்ளார்.

தான் தேர்தலில் போட்டியிட்ட குருநாகல் மாவட்டத்தின் அனைத்து வேட்பாளர்களுக்கும், வாக்குகளை வழங்கிய அனைவருக்கும், விசேடமாக அம்பாந்தோட்டை மாவட்ட மக்களுக்கும் தனது நன்றியை தெரிவித்துக் கொள்வதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-7)

## சு.க.பொருளாளராக எஸ்.பி.நியமனம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய பொருளாளராக எஸ்.பி. திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழு ஏகமனதாக இந்த நியமனத்தை அங்கீகரித்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் பொருளாளராக பணியாற்றிய எஸ்.பி. நாவின்ன, ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டதை அடுத்து, அந்தப் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டது.


அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள துமிந்த திஸாநாயக்கவை நிரந்தரமாக நியமிப்பது குறித்தும் நிறைவேற்றுச் சபையில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 60 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 80 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 160 | 140 |
| தக்காளி | 100 | 100 | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 60 | 80 | 70 | 80 | 80 |
| கரட் | 120 | 150 | 100 | 160 | 120 |
| பூசணி | 40 | 60 | 40 | 60 | 40 |
| புடோல் | 40 | 20 | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 90 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 110 |
| பாகற்காய் | 150 | 100 | 150 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 30 | 40 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 40 | 40 | 60 | 60 | 40 |
| லீக்ஸ் | 100 | 80 | 80 | 120 | 80 |
| பீற்றூட் | 40 | 50 | 50 | 60 | 70 |
| கறிமிளகாய் | 100 | 100 | 120 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 40 | 100 | 80 | 100 | 100 |
| போஞ்சி | 200 | 150 | 150 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 80 | 40 | 70 | 60 |
| கீரை – 1 பிடி | 20 | 20 | 20 | 20 | 10 |
| தேசிக்காய் | 60 | 50 | 70 | 120 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 40 | 40 | 35-40 | 40 |
| இராசவள்ளி | 200 | 140 | 100 | – | 120 |
| வெங்காயப்பூ | 100 | 200 | 180 | 200 | 160 |
| முள்ளங்கி | 40 | 30 | 70 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 464

அம்பி டைகர்




சங்கர் டினோ



சதீஸ் சோபா



பையன்: அம்மா! எதிர் வீட்டு ஆன்டி பேர் என்னம்மா?

அம்மா : கமலா டா...

பையன் : அப்பாவுக்கு இது கூட தெரிய மாட்டேன்குதும்மா அந்த ஆன்டிய டார்லிங்னு கூப்புடுறார்...

கோகிலன் சிவணேசன்


ஏன்யா பணத்த மட்டும் கரெக்டா பேங்கில போடுறீங்களே!!



அதுமாதிரி குப்பையையும் குப்பத்தொட்டில போட்டா என்ன?

ஹார்ட் பெயின்

ஏன் மச்சான் பசங்க I LOVE YOU சொன்னதும் பெண்கள் செருப்ப கலட்டுறாங்க?



ஆண்களின் இதயம் கோவில் மாதிரிடா. அதுக்குள்ள போவதற்கு முன் செருப்ப கலட்டுறது தானே முறை. அதான்...

நிரோ நிரோஜி

**ஆசையே துன்பத்திற்கு காரணம்**

- புழுவிற்கு மீன் ஆசைப்பட்டது. மீனுக்கு மனிதன் ஆசைப்பட்டான்
- மீனுக்கு சிக்கியது புழு மனிதனுக்கு சிக்கியது மீன் புழுவிற்கு...?
- ஆனாலும் காத்திருந்தது புழு மனிதன் மண்ணுக்குள் வரும் வரை.

யாரும் யாரை விடவும் உயர்ந்தவருமில்லை... தாழ்ந்தவருமில்லை...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் கொலைக் கைதிகளை விடுவிக்க தமிழக அரசு எடுத்த முடிவு சரியானதே


## உச்சநீதிமன்றிற்கு எழுத்து மூலம் அறிவிப்பு

(புதுடில்லி)

**ராஜீவ் காந்தி கொலைக் கைதிகளை விடுவிக்க தமிழக அரசு எடுத்த முடிவு மூல வாதம் முன்வைக்கப்பட்டது.**







முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைக் கைதிகள் முருகன், சாந்தன், பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுவிப்பது குறித்து தமிழக அரசு எடுத்த முடிவுக்கு எதிராக மத்திய அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை உச்சநீதி மன்றில் நடைபெற்று வருகிறது.

தலைமை நீதிபதி எச்.எல். தத்து தலைமையில் நீதிபதிகள் இப்ராகிம் கலிபுல்லா, பி.சி.கோஷ், ஏ.எம். சப்ரே, யு.யு.லலித் ஆகியோரை கொண்ட அரசியல் சாசன அமர்வு இந்த வழக்கை விசாரித்து வருகிறது.

இந்த வழக்கின் மீதான இறுதி வாதங்கள் கடந்த 12 -ந்தேதி முடிவடைந்த நிலையில் தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

மேலும் இந்த வழக்கில் தொடர்புடைய மாநில அரசுகள், மத்திய அரசு மற்றும் முருகன், சாந்தன், பேரறிவாளன் உள்ளிட்ட 7 கைதிகளும் தங்களுடைய எழுத்துப்பூர்வமான வாதங்களை ஒரு வாரத்துக்குள் நீதிமன்றில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் அப்போது நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இதன் அடிப்படையில் நேற்று முன்தினம் தமிழக அரசு எழுத்துப்பூர்வ வாதங்களை உச்சநீதிமன்றில் தாக்கல் செய்தது.

அந்த வாதத்தில் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற முருகன், பேரறிவாளன், சாந்தன், நளினி, ராபர்ட்பயாஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகியோரை விடுதலை செய்வதாக தமிழக அரசு எடுத்த முடிவில் எந்த சட்டவிதி மீறலும் இல்லை.

ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுதலை செய்வதற்கு மாநில அரசுக்கு தேவையான அதிகாரம் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ளது.

இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் 432 (7) -ல், இது தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எனவே, சட்டத்தின் அடிப்படையில் மாநில அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் முடிவெடுக்கப்பட்டு உரிய முறையில் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இவர்களது விடுதலை குறித்து அறிவிக்கப்பட்டது. பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை நீதித்துறை கேள்வி கேட்க முடியாது.

ஒரு குற்றத்திற்கு இரண்டு தண்டனை விதிக்க முடியாது. இவர்களது விடுதலையில் சம்பந்தப்பட்ட அரசு என்பது, தமிழக அரசுதான். எனவே, தமிழக அரசின் முடிவை எதிர்த்து மத்திய அரசு தொடர்ந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது. (3-7)

## இமாச்சல பிரதேசத்தில் நிலச்சரிவு விடுதியில் இருந்த 10 பேர் பலி

(சிம்லா)

இமாச்சலபிரதேச மாநிலம் குலு மாவட்டம் மானிகரன் என்ற இடத்தில் புகழ்பெற்ற சீக்கிய புனிததலமான மானிகரன் சாஹிப் குருத்வாரா உள்ளது. இதனையொட்டி 4 மாடி மற்றும் 6 மாடிகளை கொண்ட 2 விருந்தினர் விடுதிகளும் இருந்தன. இந்த விடுதிகளில் சீக்கிய பக்தர்கள் பலர் தங்கியிருந்தனர். நேற்று முன்தினம் அந்த பகுதியில் திடீர் நிலச்சரிவு ஏற்பட்டது.

இதில் பெரிய பாறைகள் உருண்டு விழுந்ததில் அந்த 2 அடுக்குமாடி விடுதிகளும் இடிந்து தரைமட்டமானது. அதில் தங்கியிருந்த 10 பேர் இடிபாடுகளில் சிக்கி பலியானார்கள். மேலும் 5 பேரை காணவில்லை. இதனால் இடிபாடுகளுக்குள் மேலும் சிலர் சிக்கி இருக்கலாம் என்று கருதப்படுகிறது. மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இறந்தவர்கள் பெரும்பாலும் வெளியூர்களை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை அடையாளம் காண்பதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (3-7)

# உலகின் முதல் சூரிய சக்தி விமானநிலையம் கொச்சியில்


(கொச்சி)

உலகிலேயே சூரிய சக்தியில் இயங்கும் முதல் விமான நிலையம் என்ற பெருமையை கேரள மாநிலம் கொச்சியில் உள்ள சர்வதேச விமான நிலையம் பெற்றுள்ளது.

கொச்சி சர்வதேச விமான நிலையத்திற்கு ஒரு நாளைக்கு 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் யூனிற் வரை மின்சாரம் தேவைப்படுகிறது. இந்த மின்சாரத்தை சூரிய சக்தி மூலம் உற்பத்தி செய்ய முடிவு செய்த கொச்சி விமான நிலைய நிறுவனம் முதற்கட்டமாக கடந்த 2013-ல் 100 கிலோவாட் மின்சார உற்பத்தி திறன் கொண்ட சோலரை விமான நிலையத்தின் கட்டடத்தின் கூரையில் அமைத்தது.

இது வெற்றிகரமாக அமைந்ததை அடுத்து, விமான நிலைய வளாகத்திலும், கூரையிலும் மீண்டும் ஒரு மெகாவாட் சோலரை அமைத்தது. இதில் பாதி சோலரை விமான நிலைய கூரைகளிலும், பாதி தரையிலும் அமைக்கப்பட்டன.

ரிமோட் கொன்ட்ரோல் மூலம் கட்டுப்படுத்தும் வகையில் இந்த சோலர் அமைக்கப்பட்டது. சோலர் மூலம் விமான நிலையம் இயக்கப்பட்ட பின்னர், இதுவரை 550 மெட்ரிக் தொன் அளவுக்கு கார்பன் குறைக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில், தற்போது விமான நிலையம் முற்றிலுமாக சோலர் மயமாக்கப்பட்டுள்ளது. கார்கோ வளாகத்தின் அருகே சுமார் 45 ஏக்கர்கள் நிலப்பரப்பில் 46150 சோலர்களுடன் கூடிய 12 மெகாவாட் மின்சார உற்பத்தி நிகழ்வை நேற்று காலை கேரள முதல்வர் உம்மன்சாண்டி ஆரம்பித்து வைத்தார். இதன்மூலம் விமான நிலையத்திற்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்றும், முழுக்க முழுக்க சூரிய மின்சக்தியில் இயங்கும் உலகின் முதல் விமான நிலையமாக கொச்சி விமான நிலையம் என்றும் விமான நிலைய நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. (3-7)

## மோடி- ஜெயா சந்திப்பை கிண்டலடித்தது காங்கிரஸ்

### சென்னையில் போராட்டம்

(சென்னை)

தமிழகத்தில் இளங்கோவனுக்கு எதிராக அ.தி.மு.க.வினர் போராட்டம் நடத்தி வருகின்றனர். சென்னை நந்தம்பாக்கத்தில் அ.தி.மு.க. தொண்டர்கள் செல்போன் டவரில் ஏறி போராட்டம் நடத்தினர்.

அரசு விழா ஒன்றில் பங்கேற்பதற்காக சென்னை வந்த பிரதமர் நரேந்திர மோடி, போயஸ் கார்டன் சென்று முதலமைச்சர் ஜெயலலிதாவை சந்தித்து பேசினார். இந்த சந்திப்பினை தமிழக காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் தரக்குறைவான வார்த்தைகளால் விமர்சனம் செய்ததாக கூறி, அ.தி.மு.க.வினர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

சென்னையில் சைதாப்பேட்டை, நந்தம்பாக்கம் உள ளிட்ட பகுதியில் அ.தி.மு.க.வினர் தரப்பில் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

அ.தி. மு.க.வினர் இளங்கோவன் உருவ பொம்மையை செருப்பால் அடித்து, எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (3-7)

## ஏவுகணை மனிதர் கலாமுக்கு ஒடிசா சட்டமன்றத்தில் அஞ்சலி

(புவனேஸ்வர்)



ஒடிசா சட்டசபை மழைக்கால கூட்டத் தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமானது. முதல் நாள் கூட்டத்தின்போது சட்டசபை உறுப்பினர்கள் மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் மற்றும் ஒடிசா முன்னாள் முதலமைச்சர் ஜே.பி பட்நாயக் உள்ளிட்டோருக்கு அஞ்சலி செலுத்தினர்.

சட்டசபை சபாநாயகர் நிரஞ்சன் ஜாரி இரங்கல் செய்தியை வாசித்தார். அப்போது, டாக்டர் அப்துல்கலாம் இந்தியாவின் பெருமைக்குரியவர். திறமையான நிர்வாகத் திறமை கொண்ட மற்றும் அர்ப்பணிப்புள்ள விஞ்ஞானியுமான அவரது தியாகத்தை இந்த தேசம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

முதலமைச்சர் நவீன் பட்நாயக் பேசுகையில், அப்துல் கலாமை மக்களின் ஜனாதிபதி என்றும் ஏவுகணை மனிதர் என்றும் புகழாரம் சூட்டினார்.

இதைதொடர்ந்து ஒடிசாவில் 3 முறை முதலமைச்சராக பதவி வகித்த மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜே.பி.பட்நாயக் மற்றும் மறைந்த முன்னாள் அமைச்சர்கள் மற்றும் முன்னாள் எம்.எல்.ஏக்களுக்கும் அஞ்சலி செலுத்தினர்.

தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் சட்ட சபை ஒத்திவைக்கப்பட்டது.

# பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுக்க இந்துக்கள் மனித குண்டாக வேண்டும்

### சொல்கிறது சிவசேனா

(மும்பை)

பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்றால், இந்துக்கள் மனித வெடிகுண்டாகவும் மாற வேண்டும் என்று சிவசேனா தெரிவித்துள்ளது.

பால்தாக்கரே பற்றி விமர்சனம் மறைந்த சிவசேனா தலைவர் பால்தாக்கரேயை விமர்சித்து சமீபத்தில் வார இதழ் ஒன்றில் கட்டுரை வெளியானது.

இது சிவசேனா தொண்டர்கள் மத்தியில் அதிர்ச்சியையும், சலசலப்பையும் ஏற்படுத்தியது. எனவே, அவர்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தினார்கள்.

மும்பை நரிமன் பொயிண்ட் பகுதியில் அமைந்துள்ள அந்த வார இதழ் நிறுவனம் முன்பு திரண்டு

இந்நிலையில், பால்தாக்கரேயின தேசிய கொள்கைகளை நினைவு கூரும் பொருட்டு சிவசேனா கட்சி நேற்று அதன் அதிகாரபூர்வ பத்திரிகையான 'சாம்னா'வில் தலையங்கம் வெளியிட்டது. அதில் கூறப்பட்டிருப்பதாவது:

பால்தாக்கரே மீது மக்கள் மிகுந்த மரியாதையும், அன்பும் வைத்திருக்கிறார்கள். அவருடைய தேசிய கொள்கையை எண்ணி மக்கள் பெருமைப்படுகிறார்கள்.

இந்துக்களுக்கான பயத்தை மக்கள் மத்தியில் விதைத்தவர், பால்தாக்கரே.

இந்துக்கள் இந்த நாட்டில் பெருமையுடன் நடைபோட வேண்டும். அவர்களுடைய குரல் சிங்கத்தை போல் கர்ஜிக்க வேண்டும்.

பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்றால், இந்துக்கள் மனித வெடிகுண்டாகவும் மாற வேண்டும். அவர்கள் மிகு படையெடுத்து செல்லவும் தயாராக இருக்க வேண்டும்.

அனைத்து மதங்களையும் சமமாகவே பால்தாக்கரே கருதினார்.

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் படுகொலையை தொடர்ந்து, மாநிலத்தில் அமைதி நிலவு மாறு அறைகூவல் விடுத்தவர், பால் தாக்கரே.

அவரால் தான் சீக்கியர்கள் மும்பையிலும், மராட்டியத்தின் மற்ற பகுதிகளிலும் அமைதியாக வாழ முடிகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசாங்கத்துக்கு கோத்தபாய வாழ்த்து!

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கிய அனைவருக்கும் தனது நன்றியை தெரிவித்துகொள்வதாகவும், புதிய அரசாங்கத்துக்கு தனது வாழ்த்தினை தெரிவித்து கொள்வதாகவும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் கோத்தபாய தனது முகப்புத்தகத்தில் தெரிவித்துள்ளதாவது,


மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கிய அனைவருக்கும் என மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

வெற்றியை போன்றே தோல்வியையும் ஏற்றுக் கொள்ளும் அவர், நாட்டை நேசிக்கின்ற தலைவராக பலர் மனங்களில் இருக்கின்றார்.

அத்துடன் புதிய அரசாங்கத்திற்கு வாழ்த்து தெரிவிப்பதோடு, நாட்டினுள் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு எங்கள் ஆதரவை வழங்குவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிங்களவர்கள் அதிகார மோகத்தினால் பிளவடைந்துள்ளனர் - ஞானசார தேரர்

(கொழும்பு)



சிங்களவர்கள் அதிகார மோகத்தினால் பிளவடைந்துள்ளதாக பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞான சார தேரர் தெரிவித்துள்ளார்.

சிங்களவர்கள் அதிகார மோகத்தினால் பிளவடைந்து வேறுபட்டிருக்கும் போது, ஏனைய தரப்பினர் தங்களது நலனை உறுதி செய்து கொண்டுள்ளனர்.

சிங்களவர்களின் அதிகார மோகத்தினால் எமது இளைய தலைமுறையின் எதிர்காலம் பாரிய கேள்விக்கு உள்ளாகியுள்ளது.

நாட்டில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பொது ஜன பெரமுன கட்சி பாரிய வெற்றியை அடைந்துள்ளது.

நாட்டை நேசிக்கும் நாட்டை பாதுகாக்க விரும்பும் தரப்பினரை ஒன்றிணைத்துக்கொள்ள முடிந்துள்ளது.

எமது கட்சியை அறிமுகம் செய்ய வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டது. அதில் வெற்றியடைந்துள்ளோம், எமக்கு ஊடகங்கள் உதவி செய்யவில்லை.

செலவழிப்பதற்கு பணம் இருக்கவில்லை.

இவ்வாறான பின்னணி யில் தேர்தலில் போட்டியிட்டோம். எனவே தேர்தலில் எமது இலக்குகள் ஈட்டப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் நாட்டுக்கு எதிரான சக்திகள் முழு வீச்சில் செயற்படும்.

இந்த ஆபத்து குறித்து மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கின்றோம். இது குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

நாட்டின் பெரும்பான்மை சமூக குறுகிய சுயநலவாத அடிப்படையில் செயற்பட்டு வருகின்றமை வருத்தமளிக்கின்றது என கலகொட அத்தே ஞானசாரதேரர் தேர்தல் தோல்வி குறித்து அறிவித்துள்ளார். (இ-7)

# பலசேனாவுக்கு படுதோல்வி

களுத்துறை மாவட்டத்தில் நாக பாம்பு சின்னத்தில் பொது ஜன பெரமுன கட்சியில் போட்டியிட்ட பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தலைமையிலான அணி சகல தொகுதிகளிலும் படுதோல்வி கண்டுள்ளது.

தேர்தல் தொடர்பாக வெளியான முடிவுகளில் படி நாகபாம்பு சின்னத்தில் பொது ஜனபெரமுன என்ற கட்சியில் போட்டியிட்ட பொது பல சேனா அணியினர் சகல மாவட்டங்களிலும் மிகவும் குறைவான வாக்குகளை பெற்றுள்ளனர்.

அத்துடன் களுத்துறை மாவட்டத்தில் பேருவளை தேர்தல் தொகுதியில் நாகபாம்பு 2,119 வாக்குகளை பெற்றுள்ளதோடு மத்துகம தேர்தல் தொகுதியில் 953 வாக்குகளையும் ஹொரண தேர்தல் தொகுதியில் 290 வாக்குகளையும் மட்டுமே பெற்றுள்ளது.

பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தலைமையிலான அணியினர் மக்கள் விரோதப்போக்குடன் செயற்பட்டு வந்ததை கண்டித்து மக்கள் இத்தேர்தலில் இவர்களுக்கான வாக்குகள் அளிப்பதையும் நிராகரித்து சரியான பாடத்தை புகட்டியுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பெரும்பாலான மாவட்டங்களில் பொது பல சேனா அணியினர் நாகபாம்பு சின்னத்தில் பொது ஜன பெரமுன கட்சியில் [illegible] (இ-7)


# ஷிராணியின் மகனுக்கு வெறும் 149 வாக்குகளே

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்திற்காக சுயாதீனமான குழுவில் போட்டியிட்ட ஷவின் பண்டாரநாயக்க காரியவசத்தின் கட்சி பெற்று கொண்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 149 ஆகும்.

ஷவின் பண்டாரநாயக்க காரியவசம் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் மகன் ஆவார்.

அண்மையில் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக முகப்புத்தக பக்கத்தில் கருத்துக்களை பதிவு செய்து ஊடகங்களில் அதிகம் பேசப்பட்ட ஒருவராவார். அதனை தொடர்ந்து அரசியலுக்குள் நுழைவதாக குறிப்பிட்டிருந்தார்.



எப்படியிருப்பினும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக அவர் உட்பட குழுவினர் பெரிய அளவிலான முயற்சிகள் எதனையும் மேற்கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகின்றன. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## அச்சம் இன்மையே அமரத்தன்மை

இவர் நல்லவர், இவர் கெட்டவர் என்று மனிதர்களைப் பிரிப்பது மடமையானது. ஒருவர் குடிக்காதபோது நல்லவர். குடித்துவிட்டால் முரடர். அவரை நல்லவர் என்பதா? கெட்டவர் என்பதா?

இப்போது அசுர குணங்கள் எவை? தேவ குணங்கள் எவை? என்ற பகவத்கீதைப் பட்டியலைப் படிக்கலாம். தேவசம்பத்துகள் எவை தெரியுமா? அச்சமின்மை, மனத்தூய்மை, இறைவன் படைப்பில் எல்லாம் சமம் என்கிற மனநிலை உணர்வு, கருணை, புலனடக்கம், வேள்வி செய்தல், நீதி நூல் ஓதல், அகிம்சை, உண்மை, சினம் இன்மை, துறவு, அமைதி, பிறர் பொருள் நயவாமை, மென்மைத்தன்மை, புறங்கூறாமை, இன்னா சொல்லாமை, தைரியம், பிறர் குற்றம் பொறுத்தல், விடா முயற்சி, பணிவு, தூய்மை, வஞ்சனையின்மை, செருக்கின்மை இவையெல்லாம் ஒருவரைத் தெய்வமாக்கும் தெய்வீக எண்ணங்கள். இவையே தேவகுணங்கள்.

ஆணவம், ஆடம்பரம், பகட்டு, கோபம், கடுமை, பகுத்தறிவில்லாமை இவையாவும் அசுர குணங்கள். பலப்பலவாக அசுர குணங்களை விளக்கலாம் என்றாலும் அரக்க குணங்கள் 3 இயல்புகளில் அடங்கி விடுகின்றன. காமம், குரோதம், லோபம் என்கிற வடமொழிப் பட்டியலே அது. வள்ளுவரும் **காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம் கெடக்கெடும் நோய்** என்று அசுர குணங் களை அறிவிக்கிறார்.

அச்சம் உள்ளவர்கள் அமரநிலை அடையமுடியாது. மனிதர்கள் பிறக்க அஞ்சுகிறார்கள். வாழ அஞ்சுகிறார்கள். சாகவும் அஞ்சுகிறார்கள். அஞ்சுவது- பயப்படுவது ஏன் என்று தன்னைத்தானே ஒருவர் ஆராய வேண்டும்.

பாம்புகள் பயத்தால்தான் பிறருக்குத் தீமை செய்கின்றன. விலங்குகள் தமக்கு ஏதும் ஆபத்து வருமோ என்கிற பயத்தால்தான் பிறரைத்தாக்குகின்றன. எனவே பயம் என்பது பல தவறுகளுக்கான அடித்தளம். அப்பரடிகள், பிரகலாதன், சீதா பிராட்டி, காந்தியடிகள் இவர்கள் எல்லாம் பயத்தை வென்றவர்கள்.

அப்பரடிகள் என்பவர் மதம் மாறிச் சிவனைக் கும்பிட்டார். அரசர் கோபம் அடைந்து அவரைக் கொல்ல ஆள் அனுப்பினார். வந்தவர்களைப் பார்த்து **நாம் ஆர்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்** என்று முழங்கினார் அப்பர். அவரைக் கொல்ல விசம் கொடுத்தார்கள். யானையை மேலே ஏவினார்கள். அவரோ **அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை** என்று அச்சம் இன்றி முழங்கினார்.

கத்தியைக் கண்டோ மரணத்தைக் கண்டோ அவர் அஞ்சவே இல்லை. இன்று அரசாங்க ஊழியர் பலர் மேலே இருப்பவர்களுக்குப் பயந்து எவ்வளவு தவறு வேண்டுமானாலும் செய்கிறார்கள். கேட்டால் வேலை போய்விடும். கொலை செய்துவிடுவார்கள் என்று கூறுகிறார்கள். காந்தியடிகள், நேதாஜி போன்ற தலைவர்கள் இப்படிப் பயந்திருந்தால் நாடு விடுதலை அடைந்திருக்குமா- அச்சமற்ற தலைவர்கள் தேவசம்பத்து உடையவர்கள்.

சீதாபிராட்டி பெண். இராவணன் கடத்தியபோது தன் ஆசைக்கு இணங்கச் சொன்னபோது இணங்கினாளா? இல்லையே! இன்று காசுக்கு உடம்பை விற்கும் பல பெண்கள் வாழ வேறு வழி தெரியவில்லை என்று பொய் சொல்கிறார்கள். மேல் அதிகாரிகளுக்கு வளைந்து நெளிந்து கொடுத்து முன்னுக்கு வரும் பெண்கள் தங்கள் ஒழுக்கக்கேட்டை ஒரு தவறாகவே ஒப்புக்கொள்வதில்லை. அவர்கள் அசுர சம்பத்து கொண்டவர்கள்.

சீதை மரணத்திற்குத் தயார். மாற்றான் ஆசைக்கு இணங்கத் தயாராக இல்லை என்று அறிவித்தாள். இத்தகைய அச்சம் இன்மைதான் தேவசம்பத்து. இன்று நமக்கு அது மிகமிக அதிகம் தேவை.

எல்லாக்கோவில்களிலும் சுவாமி சிலைகளைப் பாருங்கள். வலது கையை நன்கு விரித்து ஆசி தருவது போல் இருக்கும். சிற்ப சாஸ்திரத்தில் இந்த முத்திரைக்கு அபயஹஸ்தம் என்று பெயர். **யாமிருக்கப் பயமேன்** என்று கடவுள் கூறுவதுபோல் அமைந்த ஏற்பாடு அது. கம்சன், இரணியன் —போன்ற அசுரர்கள் இறந்து விடுவோமோ என்ற பயத்தால்தான் பல தவறுகள் செய்தார்கள். எனவே எல்லாப் பயங்களில் இருந்தும் விடுதலை பெறுவதுதான் மனிதன் தெய்வமாகும் முதற்படி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் கனவு தகர்ந்தது ரணில் மீண்டும் பிரதமரானார்





இலங்கை நாடாளு மன்றத் தேர்தல் முடிபுகள் நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை வெளியிடப் பட்டன. இதில் ரணில் விக்கிரமசிங்க தலைமையி லான ஐக்கிய தேசியக் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது.

அவர் மீண்டும் நாட் டின் பிரதமராக பதவியேற்க உள்ளார். முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

இலங்கை நாடாளுமன்ற த்தில் மொத்தம் 225 இடங் கள் உள்ளன. இதில் 196 பேர் தேர்தல் மூலமும் 29 பேர் கட்சிகள் பெறும் வாக்குகளின் விகிதாசார அடிப்படையிலும் தேர்ந் தெடுக்கப்படுகின்றனர்.

**வித்தியாசமான தேர்தல்**

இந்தியாவைப் பொறு த்தவரை தொகுதிகளின் அடிப்படையில் தேர்தல் நடைபெற்று நாடாளு மன்றத்துக்கு உறுப்பினர் கள் தேர்ந்தெடுக்கப்படுகி ன்றனர். இலங்கை நாடாளு மன்றத் தேர்தல் சற்று வித்தியாசமானது.

தொகுதிகளுக்குப் பதி லாக நாட்டில் 22 தேர்தல் மாவட்டங்கள் பிரிக்கப்பட் டுள்ளன. ஒவ்வொரு மாவ ட்டத்துக்கும் இங்குள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப நாடாளுமன்ற உறுப்பினர் களின் எண்ணிக்கை நிர்ண யம் செய்யப்படுகிறது.

மொத்தமுள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்து 160 உறுப்பினர்களும் கட்சி கள் பெறும் வாக்குகள் அடிப்படையில் 36 உறுப் பினர்கள் போனஸ் அடிப் படையிலும் தேர்வு செய்ய ப்படுகின்றனர்.

இந்த நேரடி தேர்தல் நடைமுறையை தவிர்த்து தேசிய பட்டியல் மூலம் கட்சிகள் பெறும் வாக்கு களின் விகிதாசாரத்தின்படி 29 உறுப்பினர்கள் தேர்ந் தெடுக்கப்படுகின்றனர்.

**தேர்தல் முடிவுகள்**

நேற்று முன்தினம் காலை தேர்தல் முடிபுகள் வெளி யானது முதல் ரணில் விக்கிர மசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி முன் னணியில் இருந்தது.

நேற்று முன்தினம் இரவு நிலவரப்படி மொத்தமுள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் 11 மாவட்டங்களில் அந்தக் கட்சி வெற்றிபெற்றுள்ளது. இதன்மூலம் அக்கட்சிக்கு 93 இடங்கள் கிடைத்தன.

மேலும் அக்கட்சி பெற்ற வாக்குகளின் விகிதாசார அடிப்படையில் 14 இடங்கள் கிடைத்துள்ளன. இரண் டையும் சேர்த்து மொத்தம் 107 இடங்களை ரணில் கட்சி பெற்றுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமை யிலான ஐக்கிய மக்கள் சுதந்திரகூட்டணி 8 மாவ ட்டங்களில்ள வெற்றிபெற் றுள்ளது.

அதன்மூலம் அக்கட்சி 83 இடங்களைப் பிடித்துள்ளது. மேலும் அக்கட்சி பெற்ற வாக்குகளின் விகிதாசார அடிப்படையில் 12 இடங் கள் கூடுதலாகக் கிடைத் துள்ளன. அதன்படி மகிந்த ராஜபக்ச கூட்டணி மொத் தம் 95 இடங்களை பெற் றுள்ளது.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட 3 மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றுள்ளது. அந்த கூட்டமைப்புக்கு யாழ்ப் பாணம் மாவட்டத்தில் 5 இடங்கள், வன்னி மாவட்ட த்தில் 4 இடங்கள், மட்டக் களப்பு மாவட்டத்தில் 3 இடங்கள், அம்பாறை, திருகோணமலை மாவட் டங்களில் தலா 1 இடம் என மொத்தம் 14 இடங்கள் கிடைத்துள்ளன.

தேசிய அளவிலான வாக்கு சதவீதத்தில் ரணில் அணி க்கு 50,98,927 வாக்குகள் கிடைத்துள்ளன. இது 45.7 சதவீதம் ஆகும். மகிந்த ராஜபக்ச அணிக்கு 47,32,669 வாக்குகள் கிடைத்துள்ளன. இது 42,4 சதவீதம் ஆகும்.

இடதுசாரி கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனா 5,43,944 வாக்குகளைப் பெற்று 4.9 சதவீதத்தை எட்டியுள்ளது.

**புதிய பிரதமர் ரணில்**

ஆட்சி அமைக்க 113 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. ஐக்கிய தேசியக் கட்சிக்கு தற்போது 107 இடங்கள் உள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ரணிலுக்கு ஆதரவு தெரிவி த்துள்ளது.

மேலும் மகிந்த ராஜ பக்ஷவின் ஆதரவாளர்கள் சிலர் ரணில் அணியில் சேரக் கூடும் என்று தகவல் கள் வெளியாகியுள்ளன. எனவே ரணில் விக்கிரம சிங்க மீண்டும் பிரதமராக பதவியேற்பது உறுதியாகியு ள்ளது.

**கட்சி தாவல்?**

தனிப்பெரும்பான்மை பலம் பெற ஐக்கிய தேசி யக் கட்சி கூட்டணிக்கு இன்னும் 9 இடங்களே தேவை.

அதே நேரத்தில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான எதிர் அணியில் இருந்து 25 முதல் 40 எம்.பி.க்கள் வரை ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டணிக்கு தாவக்கூடும் என தகவல்கள் கசிந்து ள்ளன.

இலங்கையில் கட்சித் தாவல் தடைச்சட்டம் அம லில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் வெற்றி குறித்து ரணில் விக்கிரமசிங்க கரு த்து தெரிவிக்கையில், நல்லா ட்சிக்கு மக்கள் தந்த தீர்ப்பு இது. மக்களுக்காக இந்த வெற்றியை உறுதி செய்வ தற்கு ஓய்வின்றி உழைத்த அனைத்து கட்சிகள், தனிப் பட்ட நபர்கள் என அனை வருக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என கூறினார்.

புதிய சகாப்தத்தின் சவால்களை எதிர்கொண்டு நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வதற்கு நாம் அனை வரும் ஒன்றுபட்டு உழைப் போம்.

சாவல்களை எதிர்கொள் வதற்கு நீங்கள் அனை வரும் எங்களுடன் கரம் கோர்க்க அழைத்து விடுக் கிறேன் என கூறினார்.

**மகிந்தவின் கனவு தகர்ந்தது**

கடந்த ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்த லில் படுதோல்வி அடைந்த மகிந்த ராஜபக்ச இந்த பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று பிரதமர் பதவியை பிடித்து விடலாம் என கனவுகண்டார். ஆனால் அந்த கனவு தகர்ந்து தவிடுபொடியாய் ஆகிவிட் டது.

இலங்கைத் தேர்தல் முடிவுகள் குறித்து செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்த மகிந்த ராஜபக்ச பிரதமராகும் எனது கனவு கலைந்துவிட்டது என ஒப் புக்கொண்டார். மேலும் நான் ஒப்புக் கொள்கி றேன்.

கடும் போட்டியில் நாங் கள் தோல்வி அடைந்து விட்டோம் என தெரிவித் தார். இவ்வாறு இந்தியா விலிருந்து வெளிவரும் தஹிந்து பத்திரிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# போகோஹராம் அட்டூழியம்

## 150 பேரை நீரில் மூழ்கடித்தும் சுட்டும் கொலை வெறியாட்டம்

(போர்னோ)

**நைஜீரியாவில் போகோஹராம் தீவிரவாதிகள் மேற்கொண்ட அட்டூழியத்தில் 150 பேர் பலியாகியுள்ளனர். தீவிரவாதிகளிடமிருந்து தப்பியோடிய சுமார் 75 இற்கும் மேற்பட்டோர் தீவிரவாதிகளினால் நீரில் மூழ்கடிக்கப்பட்டு இறந்துள்ளனர்.**



நைஜீரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். பாணியில் ஒரு தனி நாட்டை உருவாக்கும் நோக்கத்துடன் செயற பட்டுவரும் தீவிரவாத இயக்கமான போகோஹராம பொது இடங்கள் மீது தாக்குதல் நடத்தி நூற்றுக் கணக்கானவர்களை கொன்று குவித்து வருகிறது.

நேற்று முன்தினம் நைஜீரியா நாட்டின் வடகிழக்கு மாநிலமான யோபியில் உள்ள கிராமத்திற்கு மோட்டார் சைக்கிள்களில் சென்ற போகோஹராம் தீவிரவாதிகள், அக்கிராம மக்கள் மீது கண்மூடித தனமாக தாக்குதல் நடத்தியுள்ளனர். தீவிரவாதிகளின் துப்பாக்கிகளுக்கு பாதி பேர் பலியான நிலையில், மீதிப் பேர் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள தப்பி ஓடியுள்ளனர்.

அப்போது அருகில் இருந்த ஆற்றில் மூழ்கி பலர் பலியானதாக செய்தி வெளியாகியுள்ளது. இந்த கொடூர தாக்குதலில் மொத்தமாக 150 பேருக்கு மேற்பட்டவர்கள் பலியாகியிருக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. (3-7)

## பாகிஸ்தானில் எதிர்க்கட்சி எம்.பி.மீது துப்பாக்கிச்சூடு

### வாகனச் சாரதி பலி

(கராச்சி)

பாகிஸ்தானின் எதிர்க்கட்சிகளில் ஒன்று, முத்தாஹிதா குவாமி இயக்கம். கராச்சி நகரில் இது செல்வாக்கு மிக்க கட்சி ஆகும். இந்த கட்சியினர் மீது சமீப காலமாக பொலிஸ் நடவடிக்கை பாய்ந்து வருகிறது.

இந்த நிலையில், கராச்சியில் இந்த கட்சியை சேர்ந்த எம்.பி. அப்துல் ரஷித் கோதில் (வயது-54), நேற்று முன்தினம் காரில் சென்று கொண்டிருந்தார். அப்போது அவரை குறிவைத்து மர்ம நபர் ஒருவர் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டார்.

இதில் அப்துல் ரஷித் கோதில் படுகாயம் அடைந்தார். காரின் சாரதி குண்டு பாய்ந்து உயிரிழுந்தார்.

சம்பவம் தொடர்பாக கராச்சி பொலிஸ் டி.ஐ.ஜி., முனிர் ஷேக் கூறும்போது, "ரஷிதின் உடலில் பல இடங்களில் துப்பாக்கிச்சூட்டு காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவர் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தில், கார் சாரதி சம்பவ இடத்திலேயே குண்டுகள் பாய்ந்து உயிரிழந்தார் " என கூறினார். இந்த படுகொலையால் கராச்சியில் பதற்றம் நிலவுகிறது. (3-7)

## சீன வெடிவிபத்து; இருவர் கைது

சீனாவில் கடந்தவாரம் தொடர் வெடிச் சம்பவங்கள் நடந்த இரசாயன கிடங்கின் இரண்டு உரிமையாளர்கள், அங்கு அபாயகரமான பொருட்களை வைத்திருப்பதற்கான அனுமதிப்பத்திரங்களை பெறுவதற்காக, அதிகாரிகளுடன் தங்களுக்குள்ள செல்வாக்கை பயன்படுத்தியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. உரிமையாளர்களில் ஒருவர், முன்னாள் உள்ளூர் பொலிஸ் தலைமை அதிகாரியின் மகன் என்றும் மற்ற உரிமையாளர் தேசிய இரசாயன கம்பனி ஒன்றின் அதிகாரி என்றும் அந்த செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இரண்டுபேரும் பொலிஸ் காவலில் உள்ளனர். தியான்ஜின் வெடிச் சம்பவங்களில் குறைந்தது 114 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

## சாதனை செய்யப் போகிறார் எலிசபெத் மகாராணி

(லண்டன்)



இங்கிலாந்து ராணியாக இரண்டாம் எலிசபெத் பதவி வகிக்கிறார். இவரது தந்தை மரணம் அடைந்த பிறகு 1952 ஆம் ஆண்டு பெப்ரவரி 6ஆம் திகதி 'அரசி' ஆக பதவி ஏற்றார். அப்போது அவருக்கு வயது 25.

தற்போது அவருக்கு 89 வயது ஆகிறது. எனவே கடந்த 63 ஆண்டுகளாக இவர் ராணியாக பதவி வகித்து வருகிறார்.

மூன்று தலைமுறைக்கு முந்தைய இவரது முப்பாட்டி விக்டோரியா மகாராணி 63 ஆண்டுகள் அரசியாக இருந்துள்ளார். அவரைப் போன்று தற்போது இரண்டாம் எலிசபெத்தும் 63 ஆண்டுகள் ராணியாக இருந்து வருகிறார்.

எதிர்வரும் செப்டெம்பர் 9ஆம் திகதிக்கு பிறகு இவர் இங்கிலாந்தில் நீண்ட நாள் ராணியாக பதவி வகித்தவர் என்ற பெருமையை பெறுகிறார். ஏனெனில் விக்டோரியா மகாராணி எதிர்வரும் செப்டெம்பர் 9 ஆம் திகதிதான் 'ராணி' ஆக பதவி ஏற்றார். (3-7)

## தாய்லாந்தில் குண்டு வைத்தவர் வீடியோ கமராவில் சிக்கினார்

(பாங்கொக்)



தாய்லாந்து நாட்டின் தலைநகர் பாங்கொக்கில் உள்ள பிரம்மதேவன் இந்து கோவிலில் நேற்று முன்தினம் பயங்கர குண்டு வெடித்து சிதறியது. இதில் 30 பேர் வரை உயிரிழுந்தனர். 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். குண்டுவெடிப்புக்கு காரணமானவர்களை தாய்லாந்து பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்த நிலையில் கோவிலுக்கு குண்டு வைத்தவரின் உருவம் அங்குள்ள கண்காணிப்பு கமராக்களில் பதிவாகி இருப்பது தெரிய வந்துள்ளது. இதனை தாய்லாந்து பிரதமர் பிரயுத் சான் யூச்சா உறுதிபடுத்தியுள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில்,

'தாய்லாந்து மீது நடத்தப்பட்ட மோசமான தாக்குதல் இதுவாகும். குண்டுவெடிப்பு தொடர்பாக முக்கியமான தடயம் கிடைத்துள்ளது. குண்டுவெடிப்பு நடந்த இடத்தில் உள்ள கண்காணிப்பு கமராக்களில் வாலிபர் ஒருவரின் உருவம் பதிவாகியுள்ளது. அவர் மஞ்சள் நிற ரீ-சேர்ட்' அணிந்து உள்ளார். ஒரு பை வைத்துள்ளார். அதில் வெடி குண்டுகள் இருந்திருக்கலாம் என்று சந்தேகிக்கிறோம்.

கோவிலுக்குள் நுழைந்த அவர், அங்கிருந்த சாமி சிலைகளை படம் எடுத்துள்ளார். சந்தேகப்படும் வாலிபரின் முடி கருமை நிறத்தில் உள்ளது. கையில் பட்டைகள் அணிந்து இருந்தார். குண்டுவெடிப்பு நடப்பதற்கு முன்பாக கோவிலில் இருந்து அவர் வெளியேறி விட்டார். பாங்கொக்கில் உள்ளூர் நேரப்படி இரவு 7 மணிக்கு குண்டுவெடிப்பு நடந்தது. சந்தேகப்படும் வாலிபர் முன்னதாக மாலை 6:40 மணிக்கு கோவிலை விட்டு வெளியேறி விட்டார். அந்த வாலிபரை பிடிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (3-7)

## ஐ.எஸ்ஸை பழிவாங்க துடிக்கும் சூரிய பெண்கள் படையணி

தமது இனத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பெண்களை கடத்திச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி படுகொலை செய்த ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளைப் பழிதீர்க்கும் முகமாக ஈராக்கிய யஸிடி இனத்தைச் சேர்ந்த முன்னாள் பாடகியொருவர் பெண்களை மட்டுமே உள்ளடக்கிய படையணியொன்றை உருவாக்கி தலைமை தாங்கி வழி நடத்தி வருகிறார்.



ஸேட் ஷின்காலி ( வயது-30) என்ற மேற்படி பாடகி ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராகப் போராடும் முகமாக 'சண் கேர்ல்ஸ்' (சூரிய பெண்கள் ) என்ற முற்று முழுதாக பெண்களைக் கொண்ட படையணியொன்றை உருவாக்கியுள்ளார்.

அவரது படையணியைச் சேர்ந்த பெண்கள் தீவிரவாதிகளிடம் சிக்கிக் கொள்ளும் பட்சத்தில் அவர்களால் கொல்லப்படவும் பாலியல் அடிமையாக நடத்தப்படவும் கூடிய அபாயம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

வட ஈராக்கிய பிராந்தியத்தில் யஸிடி இனத்தவர்களது கிராமப்புற பாடல்களைப் பாடுவதில் பிரசித்தி பெற்ற ஷின்காலிக்கு மேற்படி படையணியை ஸ்தாபிப்பதற்கு குர்திஷ் ஜனாதிபதி அங்கீகாரம் அளித்துள்ளார்.

அவரது படையணியில் 17 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடைய 123 பெண்கள் தற்போது அங்கம் வகிக்கின்றனர்.

கடந்த ஆண்டு வட ஈராக்கின் சின்ஜார் மாகாணத்திலுள்ள கிராமங்களைக் கைப்பற்றிய தீவிரவாதிகள் யஸிடி இனத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பெண்களைக் கடத்திச் சென்றிருந்தனர்.

இந்நிலையில் தீவிரவாதிகளிடமிருந்து தப்பிவந்த பெண்கள் தாம் தீவிரவாதிகளால் கொடூரமான முறையில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டும் அந்த தீவிரவாதிகளை திருமணம் செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டும் கொடுமைப்படுத்தப்பட்டதாக தெரிவித்திருந்தனர்.

'சண் கேர்ல்ஸ்' படையணியில் அங்கத்துவம் வகிக்கும் இளம் பெண் படைவீரரான ஜேன் பாரெஸ் (வயது-17) விபரிக்கையில், ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் சினஜார் பிராந்தியத்தைக் கைப்பற்றியபோது தனது சகோதரனுடன் அங்கிருந்து தப்பிவந்ததாக தெரிவித்தார்.

தான் இந்தப் பெண்கள் படையணியில் இணைந்து போராடுவது குறித்து தனது தந்தை பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த மோதல் போக்கை கைவிடுவதற்கு தீர்மானம்


(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புதிய அரசாங்கத்துடன் மோதல்களை ஏற்படுத்திக் கொள்ளாதிருக்கத் தீர்மானித்துள்ளார்.

அத்துடன் தேசியப் பட்டியல் மற்றும் கட்சியின் நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால எடுக்கும் முடிவுகளை விமர்சிக்காமல் அமைதியாக இருப்பதற்கும் அவர் தீர்மானித்துள்ளார்.

மகிந்தவின் சகோதரர்களான பசில் ராஜபக்ஷ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் இதற்கான ஆலோசனைகளை வழங்கி மகிந்தவை சம்மதிக்க வைத்துள்ளனர்.

இதற்கிடையே நாடாளுமன்றத்தில் பின்வரிசை உறுப்பினராக செயற்படத் தீர்மானித்துள்ள மகிந்த, எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டாலும் ஏற்றுக்கொள்ளமாலிருக்கத் தீர்மானித்துள்ளார். இது குறித்து அவர் தனது நெருக்கமான சகாக்கள் ஊடாக ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும் அறியப்படுத்தியுள்ளதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது. (இ-7)




# தமிழீழம்தான் நிரந்தரத் தீர்வு

**இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் முடிவால் தமிழர்க்கு எந்த பயனும் இல்லை, உலகெங்கிலும் வாழும் ஈழத் தமிழர்களிடையே பொதுவாக்கெடுப்பு நடத்தி தனித் தமிழீழம் அமைக்க ஐ.நா.நடவடிக்கை எடுக்கவேண்டும் என தமிழக பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன. எந்த கட்சியும் ஆட்சியமைக்கும் அளவுக்கு பெரும்பான்மை பெறவில்லை.

எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன் ரணில் விக்கிரமசிங்க பிரதமராவது உறுதியாகிவிட்டது.

இலங்கை ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்து பதவியை பறிகொடுத்த நிலையில், பிரதமர் பதவியைக் கைப்பற்றலாம் என்ற எண்ணத்தில் காய் நகர்த்திய மகிந்த ராஜபக்ஷவின் கனவுகளும் கலைந்து விட்டன.

தமது தோல்வியை ஒப்புக் கொண்டுள்ள மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சி உறுப்பினராக செயற்படப் போவதாக அறிவித்துள்ளார்.

வழக்கம் போலவே தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக வாக்குகளைக் கைப்பற்றியுள்ளது. 15 இற்கும் மேற்பட்ட இடங்கள் அக்கட்சிக்கு கிடைத்துள்ளது.

இலங்கைத் தேர்தலில் தமிழர்களுக்கு சாதகமான அம்சம் ஏதேனும் உண்டு என்றால், அது மகிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்பட்ட தோல்விதான்.

ஜனாதிபதியாக இருந்த போது ஒன்றரை இலட்சம் அப்பாவித் தமிழர்களை படுகொலை செய்த மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமரானால், அதிகாரத்தை கையில் எடுத்துக்கொண்டு தமிழர்களுக்கு எதிராக செயற்படுவார் என்று தமிழர்கள் அஞ்சினர்.

இத்தகைய சூழலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்திருப்பது தமிழர்களுக்கு ஓரளவு நிம்மதியைத் தந்துள்ளது. இதைத் தவிர வேறு எந்த நன்மையும் ஈழத் தமிழர்களுக்கு ஏற்படப்போவதில்லை என்பது தான் உண்மையாகும்.

இலங்கைத் தேர்தல் முடிவுகள் உலகத்திற்கு சொல்லும் பாடம் என்னவெனில், அந்நாட்டில் சிங்கள இனத்தவரும், தமிழர்களும் ஒற்றுமையாக வாழ முடியாது என்பதுதான்.

இந்தத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அணியும், விக்கிரமசிங்க தலைமையிலான அணியும் தமிழர்களுக்கு எதிராகவும், சிங்கள இனவெறியை தூண்டும் வகையிலும் பரப்புரை மேற்கொண்டன. இதன் பயனாக சிங்களவர்கள் வாக்குகளை இரு கட்சிகளும் சரிசமமாக பகிர்ந்து கொண்டனர்.

அதேபோல் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புதான் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

இதன்மூலம் சிங்களவர்களை ஆதரிக்கத் தயாரில்லை என்பதை தமிழர்களும், தமிழர்களுக்கு அதிகாரம் வழங்கத் தயாராக இல்லை என்பதை சிங்களவர்களும் மீண்டும் ஒரு முறை தெரிவித்திருக்கின்றனர்.

இதே நிலை தொடர்ந்தால் தமிழர்கள் தொடர்ந்து கொத்தடிமைகளாகவே வாழ நேரிடும். இதன்பிறகும் இரு இனத்தினரும் ஒன்றாக வாழ்வது பொருந்தா கூட்டணியாகவே இருக்கும்.

எனவே, உலகெங்கும் வாழும் ஈழத்தமிழர்களிடையே பொதுவாக்கெடுப்பு நடத்தி தனித் தமிழீழம் அமைக்க ஐ.நா. அமைப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுதான் இலங்கை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# பொதுத்தேர்தல் நடைபெற்ற காலத்தில் சட்ட மீறல்களில் ஈடுபட்ட 63 பேர் கைது

(கொழும்பு)

பொதுத்தேர்தல் நடைபெற்ற காலப்பகுதியில் சட்ட மீறல்களில் ஈடுபட்ட 63 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் தேர்தல் பிரசாரத்திற்காக பயன்படுத்தப்பட்ட 23 வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் வாக்களித்தவர்கள், சட்டவிரோத பிரசாரத்தில் ஈடுபட்டவர்கள், வாக்காளர்களை அச்சுறுத்தியவர்கள், அழுத்தங்களை பிரயோகித்தவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

# தேர்தலின் பின் 11 பேர் கைது

(கொழும்பு)

தேர்தலுக்கு பிந்தைய காலப் பகுதியில் இருந்து இதுவரையில் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிடைக்கப்பெற்ற 9 முறைப்பாடுகளுக்கமைய இச்சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ ஊடக பேச்சாளர் ருவண் குணசேகர தெரிவித்துள்ளார்.

அச்சுறுத்தல், தாக்குதல் போன்றவைகள் குறித்த முறைப்பாடுகளுக்குள் உள்ளடக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

வாக்களிப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்த 17 ஆம் திகதி மாலை 4 மணி முதல் எதிர்வரும் 7 நாட்களுக்கான காலப்பகுதி தேர்தலுக்கு பிந்தைய காலப்பகுதியென அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கால பகுதியினுள் சட்ட விரோதமான பேரணிகள் நடத்துவதனை தவிர்த்து வெற்றி தோல்வியை சமாதானமான முறையில் மேற்கொள்ளுமாறு பொலிஸார் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொதுத்தேர்தல் தோல்வி தற்காலிக பின்னடைவே!

## ஜோன் செனவிரட்ன கூறுகிறார்

(கொழும்பு)

பொதுத்தேர்தல் தோல்வியானது தற்காலிக பின்னடைவேயாகும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களில் ஒருவரான ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் கட்சியை மறுசீரமைத்து ஆட்சி அதிகாரம் கைப்பற்றப்படும். கட்சியின் பின்னடைவிற்கு கட்சித் தலைவர்களின் நடவடிக்கைகளும் காரணமாகியது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தற்காலிக பின்னடைவேயே எதிர்நோக்கியுள்ளது. உறுப்பினர் எண்ணிக்கையை அவதானித்தால் இதனை காண முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சி அரச அதிகாரத்தையும் ஊடகத்தையும் துஷ்பிரயோகம் செய்தது. எங்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. பாரியளவில் பணத்தை செலவிட்டார்கள்.

வேட்பு மனு வழங்கப்பட்டதன் பின்னரும் நியமனங்களை வழங்கினார்கள். பொலிஸாரையும் மிகவும் மோசமான முறையில் பயன்படுத்திக்கொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சி அழுத்தங்கள் காரணமாக பொலிஸாரினால் எதனையும் செய்ய முடியாமல் போனது.

எங்களது தலைவர்களது கருத்துக்கள் தோல்விக்கு நேரடியாக பாதிப்பினை ஏற்படுத்தியது. கட்சிக்குள் இருந்த முரண்பாடு அதனை விடவும் தாக்கத்தை செலுத்தியது.

எவ்வாறெனினும் அனைத்து விடயங்களையும் மறுசீரமைத்து நாம் மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவோம்.



கட்சி ஆதரவாளர்கள் எதிர்ப்பார்ப்புக்களை இழந்து விட்டதாக கருத வேண்டியதில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி சிறுபான்மை அரசாங்கமொன்றையே அமைத்துள்ளது.

மக்களுக்கு அநீதி இழைத்தால் விரைவில் வீட்டுக்கு செல்ல நேரிடும் என ஜோன் செனவிரட்ன சிங்கள ஊடகமொன்றுக்கு தேர்தல் தோல்வி குறித்து நேர்காணல் வழங்கியுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசை அமையுங்கள்

## மைத்திரிக்கு செய்தி அனுப்பும் மகிந்த ஆதரவாளர்கள்

(கொழும்பு)

**பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ அணியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள பலர், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்குமாறு கோரி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு செய்திகளை அனுப்பி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மாத்திரமே தாம் மகிந்த அணியில் இணைந்து செயற்பட்டதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

அத்துடன் தாம் கையாண்ட தந்திரங்கள் காரணமாகவே மகிந்த ராஜபக்ஷக்கு எதிராக செயற்பட்டவர்கள் தோல்வியடைந்ததாகவும் இதன் மூலம் தமது தந்திரம் வெற்றியளித்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எவ்வாறாயினும் புதிய நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சார்பாக சேவையாற்ற தயார் எனவும் அவரகள் அறிவித்துள்ளனர்.

இவர்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகித்த சில கட்சிகளின் தலைவர்களும் அடங்குவதாக ஜனாதிபதி செயலக தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை கடந்த 10 வீருடங்களுக்கு மேலாக அமைச்சர்களாக பதவி வகித்து பழகிப்போன தமக்கு வெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக செயற்படுவதில் கடும் சிரமங்கள் இருப்பதாகவும் குறிப்பாக தமது குடும்பம் மற்றும் பிளளைகளின் நிலைமை மீண்டும் கீழ் மட்டத்திற்கு செல்வதை காண முடியாது எனவும் குறித்த மகிந்த ஆதரவாளர்கள் கூறியுள்ளனர். (இ-7)

# நடந்து முடிந்த தேர்தல் மிகவும் அமைதியானது

## தேர்தல்கள் ஆணையாளரை பாராட்டும் பவ்ரல் அமைப்பு

நடைபெற்று முடிந்துள்ள தேர்தலானது இதுவரை நாட்டில் நடைபெற்ற தேர்தல்களில் மிகவும் அமைதியான மற்றும் நியாயமான தேர்தல் என தேர்தல்கள் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்ட பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி இதனை கூறியுள்ளார். அரசியல் கட்சிகள், அவற்றின் ஆதரவாளர்கள் தேர்தல் ஆணையாளரினால் அமுல்படுத்தப்பட்ட சட்டங்களுக்கு குறிப்பிடத்தக்களவு மதிப்பளித்து செயற்பட்டமை இங்கு விசேட அம்சமாகும்.

19 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைய தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை அமுல்படுத்துவதிலும் அமைதியான தேர்தலை உறுதிப்படுத்தும் வகையில் சட்டங்களை உரிய முறையில் செயற்படுத்த தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை எடுத்தமை பாராட்டப்பட வேண்டியது.

தேர்தல் சமயத்தில் பவ்ரல் அமைப்புக்கு ஆயிரத்து 323 முறைபாடுகள் கிடைத்தன. அவற்றில் பெரும்பாலான முறைப்பாடுகள் பாரதூரமான சம்பவங்கள் பற்றி முறைப்பாடுகள் அல்ல எனவும் ரோஹண ஹெட்டியாராச்சி மேலும் தெரிவித்தார். (இ-7)

# பேச்சு, பண்ணிசை போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ். மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவினால் பாடசாலை மாணவர்களிடையே சைவ சமய அறிவை ஊக்குவிக்கும் முகமாக ஆண்டுதோறும் நடத்தப்படும் பேச்சு மற்றும் பண்ணிசைப் போட்டி நிகழ்வுகள் நாளை மறுதினம் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் போட்டி களில் பங்குபற்றுவதற்காக விண்ணப்பித்துள்ள மாணவர்கள் உரிய போட்டிகளில் கலந்து கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிபர், துறைசார் ஆசிரியாகளை யாழ். மாநகர சபை சைவ சமய விவகாரக் குழுவின் பரீட்சைப் பொறுப்பாளர் கோரியுள்ளார். (இ)

## தெய்வீக இசையரங்கு

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் 8 மணி வரை நடைபெற்று வருகின்ற தெய்வீக இசையரங்கில் இன்று வியாழக்கிழமை பாடல் எஸ்.சுபாகரன், வயலின்- அ.ஜெயராமன், மிருதங்கம்- க.கண்ணதாஸ்,முகர்சிங்- என்.சதீஸ்குமார் ஆகியோர் பங்குபற்றுகின்றனர். (இ-5)

# நியாயமான தேர்தல் நடத்தப்பட்டமைக்கு அஸ்கிரிய பீடாதிபதி பாராட்டு தெரிவிப்பு

(கொழும்பு)

நியாயமான மற்றும் சமாதானமான தேர்தலை நடத்தியமை தொடர்பில் அனைத்து தரப்பினருக்கும் தனது பாராட்டுக்களை தெரிவித்து கொள்வதாக அஸ்கிரிய பீடாதிபதி கலகம ஸ்ரீ அத்தாதஸ்ஸி தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்டவர்,

நாடாளுமன்றிற்கு தகுதியான நபர்களை தெரிவு செய்வதற்காக மக்கள் சரியாக தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர்.

அதற்காக ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் அர்ப்பணிப்புடன் செயறபட்டமைக்கு மதிப்பளிக்க வேண்டும்.

இதுவரையில் செயற்பட்டதனை போன்று தொடர்ந்தும் செயற்படுவது அனைவரதும் கடமையாகும்.

பொலிஸார் மற்றும் தேர்தல் அதிகாரிகள் சட்டத்தை சரியான முறையில் செயற்படுத்தினார்கள்.

அதனையும் அவ்வாறே தொடர்ந்து செயற்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




### நல்லை முருகன் பேரைச் சொல்லு

அலைபாயும் மனித மனமே
ஒருமுறை நல்லை முருகன் பேரைச் சொல்லு
தொலை தூரம் போகும் துன்பம்
தொட்டதெல்லாம்
வெற்றியாகும் நாம்
வேண்டுவது எல்லாம் தருவான்
நம்பினோர்க்கு என்றும் துணையாய்
இருப்பான்
நம் எல்லாப் பிணிக்கும் அவன்
கடைக்கண் பார்வை
ஒன்றே மருந்தாய் இருக்கிறது

சுப்பிரமணியம் ஜெயரூபன்,
பருத்தித்துறை.

### அருள் தருவாய் நல்லைக் குருபரனே...!

கொடியவராம் அசுரர்களை பொடி செய்த வேலவனே
கூனிக் குறுகிநின்ற தேவர்சிறை மீட்டவனே
கொடியினிலே சேவல்வைத்த கோலமயில்
வாகனனே
குவலயத்தோர் போற்றுஞ்சிங்கை ஆரியர்கள்
நந்தியெனும்
கொடியேந்திஅரசாண்ட யாழ் மண்ணின்
தலைநகராம்
நல்லையிலே வீற்றிருக்கும் சரவணனே
உன்தலத்திற்
கொடியேறி திருவிழாக்காணுகின்ற பெருநாளில்
உன்னடியேன்
உன்னடியைத் துதிக்கின்றேன் அருள்தருவாய்
குருபரனே!

சின்னையா சிவபாலன்,
கோண்டாவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

### கண்டு கொள் வேலவனே

யாழ்.மண்ணின் நடுவில் இருந்து
திருவிழாக்கள் காணும் வேலவனே
உன் உற்சவம் ஓர் நாள் பார் என
எனக்கு ஓர் வரம் வேண்டும் வேலவனே
பெண்கள் மனதில் உறுதியாய் இருந்து
தைரியத்தை கொடுக்கும் வேலவனே
உற்சவ காலத்தில் உன் அழகிய திருவடி
காண பக்தர் கூட்டம் அலைமோதுதடா

எம்.அஞ்சலி
சுன்னாகம்

### நல்லைக் கந்தன் நனிவிருத்தம்

தாயும் நீ தந்தை மற்றும்
சற்குரு தானும் நீயே
வாய்மையும் வனப்பும் நீயே
வற்றாத வூற்றும் நீயே
ஆய்ந்திடும் கிரகம் காற்று
அனைத்திலு மொளியாய் நின்று
ஓய்ந்திடா துலகைக் காக்கும்
ஒருவனே நல்லைக் கந்தாயூ

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவபாலகோபால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலை நோக்கி ஈழத் தமிழர்கள்

விடியலை எதிர்நோக்கி ஈழத்தமிழர்கள் செல்கின்றனர் எனவும் தனக்குத்தானே குழி வெட்டி அதனுள் மகிந்த விழுந்துள்ளதாகவும் இந்தியாவிலிருந்து வெளிவரும் மாலை மலர் பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் நிச்சயம் ஒருநாள் ஈழத் தமிழர்களுக்கு விடிவு காலம் பிறக்கும். அது விடுதலைப்புலிகளால் மட்டுமே சாத்தியமாகும் என்று எல்லோருமே நினைத்திருந்தனர்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன், தனி தமிழ் ஈழத்தை உருவாக்கியே தீருவார் என்றே உலக தமிழர்களால் உறுதியாக நம்பப்பட்டு வந்தது. இந்த நம்பிக்கைக்கும், எண்ணத்துக்கும் வேட்டு வைத்து துரோகிகளின் துணையோடு கொத்து கொத்தாக தமிழர்களை கொனறு குவித்தவர் மகிந்த ராஜபக்ஷ.

இலங்கையின் அரசியல் வரலாற்றில், இவரது ஆட்சி காலத்தில்தான் ஈழத் தமிழர்கள் தாங்க முடியாத துயரத்தை அனுபவித்தனர். விடுதலைப் புலிகளை எதிர்த்து பல ஆண்டுகளாக தன்னந்தனியாக போராடி தோற்றுப் போன இலங்கை அரசாங்கம் கடுமையான இழப்புகளையே தொடர்ந்து சந்தித்து வந்தது.

வீரத்தின் விருட்சங்களாக ஈழ மண்ணில் வேரூன்றி இருந்த விடுதலைப்புலிகளை போரிட்டு வெல்ல முடியாது என்ற நிலையே நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்தது.

இதனால், விடுதலைப்புலிகள் இயக்கத்தில் பிரபாகரனுக்கு வலது கரம் போல இருந்த கருணா உள்ளிட்டோரை விலை க்கு வாங்கிய மகிந்த ராஜபக்ஷ இந் தியா உள்ளிட்ட உலக நாடு களின் உதவியை யும் நாடினார். இப் படி, துரோகிகளும், பல்வேறு நாடுகளும் செய்த உதவியை வைத்தே இலங்கையில் தமிழ இனத்தை அழித்தவர் மகிந்த ராஜபக்ஷ. இன விடுதலைக்காக போராடிய ஒரு இனத்தையே ஈவு இரக்கமில்லாமல் கொனறு குவித்த மகிந்த ராஜபக்ஷ, அந்த விடுதலைப் போராட்டத்துக்கு வைத்த பெயர் தீவிரவாதம். இலங்கையை பொறுத்தவரையில் ஜனாதிபதி பதவியில் இருப்பவரே அதிகாரம் மிக்கவர். இதனையே தமிழர்களுக்கு எதிரான ஆயுதமாக மாற்றி னார் மகிந்த ராஜபக்ஷ.

குறுக்கு வழியில் சென்று விடுதலைப்புலிகளை வீழ்த்தி.. பிரபாகரனையும் கொன்று விட்டதாக போட்டோக்களை வெளியிட்டு மார்தட்டிய அவர், ஜோதிடரின் பேச்சைக் கேட்டு, கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் களம் இறங்கினார். மீண்டும் ஜனாதிபதியாகி மிச்சம் மீதி இருக்கும் தமிழர்களின் உயிரையும் எடுக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவதாக அப்போது தமிழ் ஈழ ஆர்வலர்கள் குற்றம் சாட்டினர். மீண்டும் அவர் ஆட்சி அதிகாரத்துக்கு வந்து விடக் கூடாது என்பதே உலக தமிழர்கள் அனைவரின் வேண்டுதலாகவும் இருந்தது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


## அதிரடிச் சலுகை

**வலம்புரியின் அதிரடிச் சலுகை**

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

ஆகியவற்றுக்கு

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு :-
021 221 7603,
021 321 0815
021 567 1543

Valampurii@yahoo.com



## "றோயல் சுத்தமான தேங்காய் எண்ணெய்"

சுப்பு:- என்ன மணியண்ணே, கடைக்கு வந்து எல்லாத்தேங்காயெண்ணைப் போத்தலையும் முறைச்சுப் பார்க்கிறியள்?

மணி:- இதில உள்ள எல்லாத்தையும் வாங்கி சமைச்சுப் பாத்திட்டன் ஒண்டிலையும் வாசனையோ சுவையோ இல்லை. எல்லாம் கலப்படம்.

சுப்பு:- இதுக்கு ஏன் குழப்பம். நேரடியா சிவா நறுமணப் பூங்கா கடைக்கு போங்கோ. அங்க **"றோயல் தேங்காய் எண்ணையிண்ட"** சாம்பிளை வாங்கி கையில் பூசி மணந்து பாருங்கோ. பிறகு நீங்க அந்தத் தேங்காயெண்ணையை மட்டும் தான் வாங்குவியள். தரமான சுவையான, வாசனையான சாப்பாட்டிற்கு **"றோயல் சுத்தமான தேங்காயெண்ணையை"** அடிக்க எதுவும் இல்லையண்ணே. இப்ப 200ml, 500ml அளவில கிடைக்குது. சாப்பாட்டிற்கு மட்டுமல்லாம தலைக்கும் வைக்கலாம்.

மணி:- அப்ப ஒரு கல்லில இரண்டு மாங்காய் எண்டு சொல்லு சுப்பு. எல்லா கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 2567

Packed By
Royal Industry
Colombo-13

(1789)


## மக்கள் வங்கி அறிவித்தல்

**மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.05.2014 வரை யும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள்- 23.08.2015 முதல் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.**

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | -- |
| நெல்லியடி | -- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சுங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| | கைதடி |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம்,**
**கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 34<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/1137 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 06 செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BBA, MCA/ தனியார் தொழில்<br>தொ.இ: G/1873 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 63 செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/1138 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 36 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர்<br>தொ.இ: G/1874 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 27<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/1142 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 63<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1876 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 38<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/1143 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 32 சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: G/1877 |


**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தூய்மையான மனச்சாட்சி இடிமுழக்கத்திலும் அச்சமின்றித் துயிலும்
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மாவை சேனாதிராசாவுக்கு ஓர் அன்புமடல்

மதிப்புக்குரிய மாவை சேனாதிராசா அவர்களுக்கு அன்பு வணக்கம். தேர்தலுக்குப் பின்னர் அவசரமாக இக் கடிதத்தை எழுத வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் என்பதற்கு அப்பால், பழுத்த அரசியல் தலைவர் என்ற வகையிலும் தங்கள் மீது தமிழ் மக்கள் மிகுந்த மதிப்பு வைத்துள்ளனர்.

எனினும் அரசியலில் தாங்கள் கொண்ட பலமான அனுபவமும் கட்சித் தலைமை அதிகாரமும் தங்களிடம் இருந்தும் சில முக்கிய இடங்களில் தங்களை மேவுகின்ற தங்கள் கட்சி உறுப்பினர்களைக் கண்டு மக்கள் மனம் வருந்துவதுண்டு. இவ் இடத்தில் மாவை சேனாதிராசா கட்சியை நெறிப்படுத்த வேண்டும் என்ற கருத்தும் பல தடவைகள் எழுந்துள்ளன.

அதில் ஒன்றைத்தான் இந்த இடத்தில் சுட்டிக் காட்டவுள்ளோம்.

எனது சிறு வயது. என் சொந்த ஊரில் உள்ள கோயிலில் மகாபாரதம் படித்துக் கொண்டிருந்தேன். தொடராகப் படிக்கின்ற பழக்கம் அப்போது மாணவர்களிடம் இருந்தது. மகாபாரதத்தில் ஒரு காட்சி.

கர்ணன் விழுப்புண் பட்டு போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கிறான். தாய் இல்லை; தந்தை இல்லை. சகவே பரசுராமின் சாபம். உற்றபோது கற்றது மறந்த பரிதாபம். இவற்றை எல்லாம் அவன் மீட்கும் போது வில் துளைத்த வலி அவனை அம்மா என்று சொல்லத் தூண்டுகிறது. இருந்தும் அம்மா என்றால் குந்தி அல்லவா? மனக்கண் வருகிறாள்.

தன்னைப் பெற்ற குந்தி வளர்க்காவிட்டாலும் இரு வரத்தையாவது கேட்காமல் விட்டிருக்கலாமல்லவா? வரமும் கேட்டுப் பெற்றாளை அம்மா என்றால், வேதனை இன்னும் இருமடங்காகும்.

என் செய்வது! அந்த நேரத்தில், கர்ணா நீ செய்த புண்ணியம் அனைத்தையும் தா என்று கேட்பதற்கு கண்ணன் வருகிறான்.

அந்தக் கட்டத்தைப் படித்த போது நான் படித்த மகாபாரதப் புத்தகம் நனைந்து கொண்டது. அந்த ஈரம் மறுபக்கத்தை புரட்டவிடாமல் என்னை ஆற்றுப்படுத்த துடிப்பது போலவும் இருந்தது.

இதுபோன்ற ஒரு சோகத்தை நடந்து முடிந்த தேர்தலில் இடம்பெற்ற ஒரு சம்பவம் எமக்கு ஏற்படுத்தி விட்டது.

நடந்த தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் அருந்தவபாலனுக்குஏற்பட்ட நிலைமையை அறிந்த போது பாரதப் படிப்பில் ஏற்பட்ட சோகம்.

நீதி நிலைக்கவே மாட்டாதா? என்பதுதான் அந்த சோகத்தின் மூலகாரணம். நான் இங்கு சொல்வது சுருக்கம். விரிவாக்கம் நீங்கள் அறிந்ததே. ஐயா! தேர்தல் வன்முறையில் ஈடுபட்டால் தலையில் வெடி என்கிறார் தேர்தல் ஆணையாளர். அப்படியானால் விருப்பு வாக்கில் மாற்றம் செய்த உத்தியோகத்தருக்கான தண்டனை என்ன?

தமிழ் மக்கள் நடந்தும் கிடந்தும் தவழ்ந்தும் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்க; ஏன் இப்படி ஒரு கபடத்தனம் நடந்தது?

நாம் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. தென்மராட்சி மக்களின் நம்பிக்கையும் அவர்கள் அளித்த வாக்குகளும் வீண்போகக் கூடாது என்பதால், தமிழரசுக் கட்சியின் தலைவர் என்ற வகையில் அருந்தவபாலன் பாராளுமன்றம் செல்வதற்கு தாங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

துணிவோடு அதைச் செய்யுங்கள். இது ஒன்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்களை ஆற்றுப்படுத்தும்.

## சிவாஜிக்கு 91 வாக்குகள்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து குருநாகல் மாவட்டத்தில் சுயேட்சைக்குழு 14இல் களமிறங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த எம்.கே.சிவாஜிலிங்கம் 91 வாக்குகள் பெற்றுள்ளார்.

தமிழர்களின் பிரச்சினைகளை சிங்கள மக்களும் உணரவேண்டும் என்ற அடிப்படையில்தான் குருநாகலில் களமிறங்குவதாக சிவாஜிலிங்கம் களமிறங்கினார்.

விடுதலைப் புலிகளின் தலைவரின் உறவினர் ஒருவர் குருநாகலில் தனக்கு எதிராக களமிறங்கியுள்ளதாகக் கூறி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு பிரசாரத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## வகுப்புக்கள் நடத்த தடை விதிப்பு

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை முன்னிட்டு பகுதி நேர வகுப்புக்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் நடத்துவதற்கு நேற்று புதன்கிழமை நள்ளிரவு முதல் தடைசெய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

பரீட்சைக்கான மாதிரி வினாக்கள் மற்றும் விடைகள் அச்சிடுதல் மற்றும் அவற்றை விநியோகித்தல், கையேடுகள் அச்சிடுதல் மற்றும் அதனை விநியோகித்தல், பகுதி நேர வகுப்புக்கள், கருத்தரங்குகள் நடத்துதல் போன்றவற்றிற்கும் முழுமையான தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை திணைக்களத்தின் இந்த அறிவுறுத்தலை மீறும் மாணவர்கள், ஆசிரியர்கள் அல்லது நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவ்வாறு மீறுவோர் தொடர்பாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது பரீட்சைகள் திணைக்களத்துக்கோ தகவல் தருமாறு திணைக்களம் தெரிவித்துள்ளது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளமை தெரிந்ததே. (எ-11)

## வரதராஜப்பெருமாளுக்கு இன்று கொடியேற்றம்

வரலாற்றுப் பிரசித்த பெற்ற பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் மஹோற்சவத் திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறவுள்ளன.

இதற்கமைய இம்மஹோற்சவத் திருவிழாவின் தேர்த்திருவிழா எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறுவதுடன் மறுநாள் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

மேலும் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரத விசேட சிறப்பு பூஜைகளும் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

(வற்றாப்பளை)

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 7.59 மணி தொடக்கம் 9.49 மணிவரையுள்ள சுபவேளையில் நடை பெறும்.

இதற்கான ஆரம்ப கிரியைகள் இன்று வியாழக்கிழமை இரவு 8.15 மணி க்கு ஆரம்பமாகுமென வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (இ)

## அமைதியாக நடைபெற்ற தேர்தல் அரச அதிபர் நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிந்த இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் எட்டாவது பாராளுமன்ற தேர்தலை யாழ் தேர்தல் மாவட்டத்தில் மிகவும் அமைதியானதும், நேர்மையானதும், நீதியானதுமாகவும், சுமுகமாகவும் நடத்தி முடிக்க ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இத்தேர்தலை மிகவும் சிறப்பாக நடத்தி முடிக்க பல வழிகளிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தேர்தல்கள் ஆணையாளர், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக தேர்தல்கள் ஆணையாளர், உதவித் தேர்தல்கள் ஆணையாளர், அரசாங்க அதிகாரிகள், அரச அலுவலர்கள், பொலிஸ் அதிகாரிகள், வாக்குப் பெட்டிகளை நெடுந்தீவுக்கு எடுத்துச் சென்று மீள எடுத்து வர உதவிய இலங்கை கடற்படையினர் மற்றும் இலங்கை விமானப்படையினர், இலங்கை போக்குவரத்துச் சபை, தனியார் போக்குவரத்துச் சங்கம், ஊடகவியலாளர்கள், வேட்பாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் என்ற ரீதியில் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-9)

## தீக்காயத்துக்குள்ளான இளம் குடும்பப் பெண் மரணம்

தீக்காயங்களுக்கு உட்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளம் குடும்பப் பெண் சிகிச்சை பயனளிக்காது நேற்றுக் காலை 8 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இதில் உரும்பிராய் மேற்கினை சேர்ந்தயதீஸ்-தமிழினி(வயது-22)என்னும் 4 வயதுக் குழந்தை ஒன்றின் தாயொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு குறித்த பெண் குப்பி விளக்கு ஒன்றை மேசையில் கொளுத்தி வைத்துவிட்டு அதன் பக்கத்தில் உறங்கியுள்ளார்.

இதேவேளை வேலைக்குச் சென்ற அப் பெண்ணின் கணவர் இரவு 9 மணியளவில் வீடு வந்துள்ளார்.

வீட்டுக் கதவு வெளியே நின்று தனது மனைவியை வெளியே வருமாறு அழைத்துள்ளார். கணவனது அழைப்புச் சத்தத்தைக் கேட்ட உறக்கத்திலிருந்த பிரஸ்தாபப் பெண் தட்டுத்தடுமாறியபடி மேசையை விட்டு எழும்பிய சமயம் குப்பி விளக்கும் தவறுதலாக விழுந்துள்ளது.

இதேவேளை திடீரென தீச்சுவாலை அப் பெண் அணிந்திருந்த ஆடை மீது பற்றி தீப்பிடித்து எரிந்தது. தீயை அணைப்பதற்காக தண்ணீர் தொட்டிற்கு ஓடிச் சென்று விழுந்துள்ளார். எனினும் பலத்த காயத்துக்குட்பட்ட குறித்த பெண் யாழ் போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலே சிகிச்சை பயனளிக்காது நேற்றைய தினம் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். (எ-5)

## உதைபந்து சுற்றுப் போட்டி

(கரணவாய்)

பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பி.ப 4 மணிக்கு நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணி மோதவுள்ளது. (3)

## சத்திய தரிசனம்



### செலவழிக்காமலே கரையும்

❖ உண்மையாயிருங்கள். உண்மை அனுபவம் பற்றி மட்டும் பேசுங்கள். அதை அதிகப்படுத்தியோ, குறைத்தோ திரித்துக் கூறாதீர்கள்.

❖ மனதில் எப்போதும் நல்ல சிந்தனை மட்டும் இருக்கட்டும். அதனால், உங்களைச் சுற்றி எப்போதும் தெய்வ மணம் பரவிக் கொண்டே இருக்கும்.

❖ மனிதர்கள் உலகைப் படைத்த கடவுளின் மீது நம்பிக்கை வைப்பதை விட தங்களின் உடல், மனம் மீது அதிக நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.


❖ உலகம் என்பது இன்பதுன்பம், வெற்றிதோல்வி என இரண்டின் கலப்பாகவே இயங்குகிறது.

❖ செலவழித்தால் தான் செல்வம் கரையும். ஆனால், நம்முடைய வாழ்நாள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் குறைந்து கொண்டே போகும்.

❖ தேவைகளைக் குறையுங்கள். ஆசைகளைக் கட்டுப்படுத்த முயலுங்கள். இதுவே நிம்மதிக்கு வழி.

❖ தலைக்கு மேல் சூரியன் பிரகாசிக்கும்போது நிழல் விழுவதில்லை. அதுபோல, உள்ளத்தில் உறுதியான நம்பிக்கை எழும் போது சந்தேக நிழல் படிவதில்லை.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



### எந்த மாதிரியான கனவு கண்டால் நன்மை ஏற்படும்?

அரசனாக பதவி ஏற்பது போலவும் வீடு தீப்பற்றி எரிவது போலவும் பரிசுகள் பெறுவது போலவும் கம்பி வாத்தியம் வாசிப்பது போலவும் ஒருவன் தலை வெட்டப்படுவது போலவும் பசு கொம்பால் உடலில் தண்ணீர் தெளிக்கப்படுவது போலவும் பெரியவர்கள் ஆசீர்வதிப்பது போலவும் இரத்தத்தில் குளிப்பது போலவும் மது அருந்துவது போலவும் பலகாரம் சாப்பிடுவது போலவும் குதிரை சவாரி பண்ணுவது போலவும் வெள்ளை நிற உடை அணிவது போலவும் மாமிசம் சாப்பிடுவது போலவும் மலை மீது ஏறுவது போலவும் சூதாடி வெல்வது போலவும் சண்டையில் எதிரியை வெல்வது போலவும் நிலம் வாங்குவது போலவும் மலையிலே நடப்பது போலவும் கனவு கண்டால் நன்மைகள் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணம்-2015
# ஸ்கந்தாஸ்ரார் 2 ஆவது சுற்றுக்கு தகுதி




ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்காக ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் முதலாவது சுற்றில் 6 ஆவது போட்டியில் ஸ்கந்தா ஸ்ரார் அணி கே.சீ.சீ.சீ. அணியை 7 இலக்குகளால் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றது.


முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சீ.சீ.சீ. அணி 19.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 134 ஓட்டங்களை பெற்றது. ஜெயரூபன்-39, வல்லவன் -14, ஆதித்தன்-25, பிரதீஸ் -26 ஓட்டங்களைப் பெற்றனர்.


களத்தடுப்பில் ஸ்கந்தாஸ்ரார் அணியை சார்ந்த விஷ்ணுபிரகாஸ்-01, கதியோன்-02, புருசோத்மன்-03, சிந்துஜன்-03, சன்சஜன்-01 இலக்கினைக் கைப்பற்றினர்.


பதிலுக்குக் களமிறங்கிய ஸ்கந்தா ஸ்ரார் அணி 20.4 ஓவர்களில் 3 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. துபிசன் 50, கதியோன் 55 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் கே.சீ.சீ.சீ. அணியைச் சார்ந்த ஜெயரூபன்-03 இலக்குகளை கைப்பற்றினார். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து 6 ஆவது ஆண்டாக நடத்திவரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வுக்கு ஸ்கந்தா ஸ்ரார் அணி 6.05 புள்ளிகளையும் கே.சீ.சீ.சீ. அணி 1.64 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது. (க)

# உதயசூரியன் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்







வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட போட்டி முடிவுகள் வருமாறு, நடைபெற்ற முதலாவது போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன் மற்றும் திக்கம் வி.கழகம் ஆகியன மோதின. இதில் நவஜீவன் வி.கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது. மேலும் இப்போட்டிக்கான ஆட்டநாயகனாக நவஜீவன் விளையாட்டுக்கழக வீரர் பாலீசன் தெரிவானார். இவருக்கான இராசா ஈஸ்வரன் ஞாபகார்த்தமான வெற்றிக்கேடயத்தை வி.கழக வீரர் ஞா.லவநீதன் வழங்கி வைத்தார்.

இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் வி.கழகம் மற்றும் உடுத்துறை செந்தமிழ் வி.கழகம் ஆகியன மோதின. இதில் இரண்டு அணியும் 1:1 என்ற கோல்கணக்கில் சமநிலை பெற்றன. பின்னர் இடம்பெற்ற தண்ட உதையில் றேஞ்சர்ஸ் வி.கழகம் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தெரிவாகியுள்ளது. மேலும் இப்போட்டிக்கான ஆட்டநாயகனாக றேஞ்சர்ஸ் வி.கழக வீரர் சுதாகர் தெரிவானார். இவருக்கானஇராசா ஈஸ்வரன் ஞாபகார்த்தமான வெற் றிக் கேடயத்தை ந.றஞ்சித்குமார் வழங்கிவைத்தார்.

இறுதியாக நடைபெற்ற போட்டியில் சக்கோட்டை சென்சேவியர் மற்றும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணிகள் மோதின. இதில் சென்சேவியர் 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது. மேலும் இப்போட்டிக்கான ஆட்டநாயகனாக சென்.சேவியர் அணி வீரர் கனியூட் தெரிவானார். இவருக்கான இராசா ஈஸ்வரன் ஞாபகார்த்தமான வெற்றிக் கேடயத்தினை க.சண்முகநாதன் வழங்கி வைத்தார். (க)

# தீபிகா பல்லிக்கலை கரம்பிடித்த இந்திய கிரிக்கெட் வீரர் கார்த்திக்



இந்திய கிரிக்கெட் வீரர் தினேஷ் கார்த்திக், இந்திய ஸ்குவாஷ் வீராங்கனை தீபிகா பலிக்கல் திருமணம் கிறிஸ்தவ முறைப்படி சென்னையில் நேற்று முன்தினம் நடந்தது.

இருவரும் 2 ஆண்டுகளாக தீவிரமாக காதலித்து வந்தனர். இவர்களுக்கு ஏற்கனவே திருமண நிச்சயமும் செய்யப்பட்டிருந்தது. இருவரும் தங்களது விளையாட்டில் பிசியாக இருந்ததால் திருமணத்தை தள்ளிப் போட்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் சென் னையில் இவர்களது திருமணம் கிறிஸ்தவ முறைப் படி நடைபெற்றது. இதைத் தொடர்ந்து திருமண வரவேற்பு நிகழ்ச்சி நட்சத்திர ஹோட்டலில் தடல்புடலாக நடந்தது.

இவர்களது திருமணத்திற்கு உறவினர்கள், நண்பர்கள் மற்றும் விளையாட்டு பிரபலங்கள் கலந்து கொண்டனர். நாளை இந்து முறைப்படியும் அவர்களது திருமணம் நடக்கவுள்ளது. (க)

# அராலி வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடர்

## யங்கம்பன்ஸ் அணி வெற்றி




அராலி விளையாட்டு கழகம் நடத்தும் 9நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுத்தொடரில் யங்கம்பன்ஸ் அணி வெற்றி பெற்றது. நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் வட்டுக்கோட்டை வி.கழகத்தை எதிர்த்து மோதிய யங்கம்பன்ஸ் வி.கழகம் 0:1 என்ற அடிப்படையில் வெற்றியை தன தாக்கிக் கொண்டது. அணிக்காக ரதன் ஒரு கோலினைப் போட்டு அசத்தினார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

ஓம் வீராட் விஸ்வப் பிரம்மனே நமக

## விஸ்வப்பிரம்ம ஸ்ரீ சின்னத்தம்பி அமரசிங்கம் ஸ்தபதி



அராலி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அமரசிங்கம் ஆச்சாரியார் அவர்கள் (19.08.2015) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், திருமதி விஸ்வரூபி, ஐங்கரநேசன், நர்த்தனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தங்கமணி, தங்கரத்தினம், செல்வரட்ணம், கணேசலிங்கம், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், கணபதிப்பிள்ளை, சிவபாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ரவிசங்கர், தர்மிளா ஆகியோரின் அன்பு மாமனாரும், பாலசிங்கம், வடிவேலு, இராசதுரை, லோகநாதன், புஸ்வகுணம், புவனேஸ்வரி, அன்னலட்சுமி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2015) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அராலி கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி தெற்கு, அராலி.
0771171170,0773999110,
0771630546

தகவல்:
குடும்பத்தினர்

(1534)

## கூட்டமைப்பின்...

கள் கடந்த முறை பாராளுமன்றத் தேர்தலிலும் (2010) சொற்பவாக்கு வித்தியாசத்தில் சந்தர்ப்பத்தினை இழந்தவர் ஆவார்.

இம்முறை நடந்த தேர்தலில் 43 000க்கும மேற்பட்ட வாக்குகளை பெற்றுள்ள போதி லும் அவருக்கு பாராளுமன்ற உறுப்பினராகும் சந்தர்ப்பம் இல்லாது போயுள்ளமை, அவருக்கு ஆதரவளித்த பொதுமக்களையும் வட பகுதிக் கல்விப்புலம் சார்ந்தவர்களையும் ஏமாற்றமடையச் செய்துள்ளது.

நடந்து முடிந்த இரு பாராளுமன்ற தேர்தல்களிலும் தமிழரசுக் கட்சிக்காக பல்லாயிரக் கணக்கான வாக்குகளை பெற்றுக்கொடுத்தவர் என்ற ரீதியிலும் மிக நீண்டகாலமாக தென்மராட்சிப் பிரதேசத்திற்கு ஓர் பாராளுமன்ற உறுப்பினர் தானும் இல்லாத நிலையில் அப் பிரதேசத்தினை பிரதிநிதித்துவப்படுத்துபவர் என்னும் அடிப்படையிலும் 2010, 2015 ஆகிய பாராளுமன்ற பொதுத்தேர்தல்களில் மிகச்சொற்ப வாக்கு வித்தியாசத்தில் சந்தர்ப்பத்தினை இழந்தவர் என்னும் அடிப்படையிலும் வடபகுதி கல்விப் புலம் சார்ந்தவர்களின் மிகுந்த ஆதரவைப் பெற்றவர் என்ற ரீதியிலும் இம்முறை தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு கிடைக்கவுள்ள இர ண்டு மேலதிக பாராளுமன்ற ஆசனங்களில் ஒன்றினை ஒதுக்கி, க.அருந்தவபாலனை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்வதற்கு ஆவன செய்து உதவுமாறு வடபகுதி கல்விப்புலம் சாந்தவர்களாகிய நாம் மிகுந்த எதிர்பார்ப்புடன் தங்களை வேண்டுகின்றோம். இவ் வேண்டு கோளானது நீதி, நியாயத்தின் அடிப்படையிலும் தர்மத்தின் அடிப்படையிலும் எம்மால் தங்களிடம் முன்வைக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## அரசியலில்...

தேர்தலில் தோல்வியடைந்த மகிந்த ராஜபக்ஷ, கடந்த திங்களன்று நடந்த பொதுத் தேர்தல் மூலம் மீண்டும் நாடாளுமன்ற அரசியலுக்குள் பிரவேசிக்கின்றார்.

அவர் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பால் இந்தத் தேர்தலில் ஆட்சியமைக்கும் அளவுக்கு இடங்களை வெல்ல முடியவில்லை. அதனால்இந்தத்தேர்தல்மூலம மீண்டும் பிரதமராகும் மகிந்த ராஜபக்ஷவின் கனவும் தகர்ந்துபோனது. தனது சொந்த மாவட்டத்துக்கு வெளியில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட மகிந்த ராஜபக்ஷ, அவரது கூட்டணி வேட்பாளர்கள் பெற்ற விருப்பு வாக்குகளில் 89 சதவீதம் அளவுக்கு வாக்குகளை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## அமெரிக்கா...

கொள்வதாகத் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கத்துடன் தொடர்ந்தும் இணைந்து செயற்பட விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## புதிய அரசில்...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ள தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அமையவுள்ள புதிய அரசாங்கத்தில் இணைந்து கொள்ளுமாறு நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சியினருக்கும் அழைப்பு விடுப்பதாக கூறியுள்ளார்.

எனக்கு கிடைத்திருக்கின்ற மக்கள் ஆணையின்படி, எங்களின் தேசிய வேலைத் திட்டம் தொடர்பில் பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்காக நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைக் கோரவுள்ளோம்.

அதன் மூலமே எங்களின் அரசியலை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வோம் என்று கொழும்பில் செய்தியாளர்கள் முன்னிலையில் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஓரிரு ஆண்டுகளாவது அனைத்து அரசியல் சக்திகளும் சேர்ந்து பணியாற்றுவதன் மூலம் முக்கிய பிரச்சினைகளை தீர்க்கும் விடயத்தில் கருத்தொற்றுமையை ஏற்படுத்த முடியும். மீண்டும் மக்களை பிரித்தாளும் அரசியலை யாரும் முன்னெடுப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

"இந்தப் பணியிலிருந்து யாரும் ஒதுங்கி விடுவார்கள் என்றோ அல்லது பிரித்தாளும் அரசியலை நோக்கி மீண்டும் யாரும் செல்வார்கள் என்றோ நான் நினைக்கவில்லை. நாம் அதனை அனு மதிக்க மாட்டோம். கடந்த ஜனவரியில் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் பிரதமராக நியமிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, தற்போது கிடைத்துள்ள தேர்தல் வெற்றியின் மூலம் மீண்டும் பிரதமராக பதவியேற்கவுள்ளார். (எ-11)

## கூட்டமைப்பு மீதான...

மத்தனமான பிரசாரத்தினாலும் நடவடிக்கைளினாலும் நாம் அடையவிருந்த இன்னும் பெரிய பாரிய வெற்றிகள் தடைப்பட்டு விட்டது.

நாம் அக்கட்சிகளை தமிழ்மக்களின் நன்மை கருதி தேர்தலில் இருந்து விலகுமாறு கோரினோம். அவர்கள் அதை செய்யவில்லை. இன்று அவர்கள் எமது மக்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறந்த வெற்றியைப் பெற்றுள்ளது.

பெறப்பட்ட ஆசனங்களின் எண்ணிக்கை எதிர்பார்த்ததிலும் பார்க்க சற்று குறைவாக இருந்த போதிலும் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையையும் உறுதியையும் மீண்டும் நிரூபித்துள்ளனர்.

தமிழ்க் கூட்டமைப்பை வட கிழக்கு மக்கள் தங்களுடைய நம்பிக்கைக்குரிய பிரதிநிதியாக இத்தேர்தலில் தெரிவு செய்திருக்கின்றார்கள். இதில் எவ்வித சந்தேகத்துக்கும் இடமில்லை. துரதிர்ஷ்டவசமாக தேர்தலுக்கு முன்பாக சில விஷமத்தனமான பிரசாரங்கள் எம்மீது மேற்கொள்ளப்பட்டன.

துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இது எமது வெற்றி வாய்ப்பில் தாக்கத்தை ஏற்படுத்தியது. எமது செயற்பாட்டைப் பொறுத்தவரை அரசியல் தீர்வு விடயத்தில் கால தாமதம் செய்யாமல் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பது கூட்டமைப்பின் முக்கியமானதும் உறுதியானதுமான நிலைப்பாடாகும். இது விடயம் குறித்து எடுக்க வேண்டிய முயற்சிகளை இனி வேகமாக மேற்கொள்வோம்.

எம்மை பொறுத்தவரையில் ஜனாதிபதித் தேர்தலில் மக்களால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவாக புதிதாக அமையவிருக்கும் அரசாங்கம் இருக்க வேண்டும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மக்களால் வழங்கப்பட்ட ஆணையை தொடரும் வகையில் அமையவிருக்கும் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அவ்விதமான நிலைமைக்கு நாங்கள் ஆதரவாக இருப்போமென்று கூற முடியும். அமையவிருக்கும் புதிய அரசாங்கமானது தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்க்கமான ஒரு அரசியல் தீர்வை கொண்டு வருவதற்கு கடுமையான காத்திரமான முயற்சிகளை காலதாமதம் இன்றி மேற்கொள்ள வேண்டுமென்பது எமது எதிர்பார்ப்பாகும்.

யாழ். மாவட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பு 5 ஆசனங்களைப் பெற்று பாரிய சாதனை படைத்திருக்கின்ற போதும் 6 ஆசனங்களை பெறுவதற்குரிய வாய்ப்பை மிக மிக சொற்பளவு வாக்கான 6 வாக்குகளால் இழந்து ள்ளது என்பது கவலை தருகின்ற விடயமாகும்.

அவர்கள் பெற்ற சிறியளவு வாக்குகள் காரணமாக கூட்டமைப்பின் பெரிய வெற்றி பாதிக்கப்பட்டிருக்கிறது. யாழ். மாவட்டத்தில் 6, ஆசனங்களை பெறுவதற்கு 6 வாக்குகள் தான் போதாமல் இருந்துள்ளன. இந்நிலைக்கு பொறுப்பானவர்கள், அந்தக் கட்சிகள் மக்களுக்கு பதில் கூற வேண்டும். தமது பொறுப்பை அவர்கள் முழுமையாக ஏற்க வேண்டும் என்றார். (எ -11)

## 34 தமிழ் பேசும்...

அ.இ.ம.கா, ஐ.தே.கவுடன் இணைந்து 04 ஆசனங்களையும் கைப்பற்றியது.

இதேவேளை ஐ.ம.சு.முவிலிருந்து ஒரே ஒரு முஸ்லிம் உறுப்பினராக கே.கே. மஸ்தான் தெரிவாகியுள்ளார்.

அத்துடன் இக்கட்சியிலிருந்து எவ்வித தமிழ் பிரதிநிதியும் தெரிவாகவில்லை. தேர்தலில் வெற்றியீட்டி 8ஆவது பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வருமாறு, (இவர்களுடன் தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் பெயர்கள் இணைக்கப்படவில்லை)

**ஐ.தே.க**

எஸ்.எம். மரிக்கார், முஜிபுர் ரஹ்மான், மனோ கணேசன், கபீர் ஹாசிம், எம்.எச்.ஏ. ஹலீம், ரவூப் ஹக்கீம், வேலுகுமார், ஏ.ஆர். இஷாக், ரிஷாட் பதியுதீன், எம்.எஸ்.எம்.அமீர் அலி, பைஸல் காசிம், எச்.எம்.எம்.ஹரீஸ், எம். ஐ.எம் மன்சூர், எம்.எஸ்.எம்.மஹ்ரூப், இம்ரான் மஹ்ரூப், விஜயகலா மகேஸ்வரன், அரவிந்த் குமார், வடிவேல் சுரேஸ்.

**த.தே.கூ**

எஸ்.நிர்மலநாதன், எஸ்.அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சிவமோகன், ஜி.ஸ்ரீநேசன், எஸ்.வியாழேந்திரன், எஸ். யோகேஸ்வரன், ஆர்.சம்பந்தன், எஸ்.சிறீதரன், மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், ஈ.சரவணபவன்,

**ஈ.பி.டி.பி**

டக்ளஸ் தேவானந்தா

**ஐ.ம.சு.மு**

கே.கே.மஸ்தான்

**ஸ்ரீலங்கா மு.கா.**


அலிசாஹிர் மௌலானா. (எ-11,12)

# கண்ணீர் அஞ்சலி

கடந்த 2015.08.16ந் திகதி அகால மரணமடைந்த எமது நண்பி ர.சத்தியானந்ததேவியின் அன்புக் கணவரான **சின்னத்தம்பி ரவீந்திரன்** மற்றும் மைத்துனி **திருமதி விஜயமலர் சிறீகாந்தவேல்** அவர்கள் இருவரினதும் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கும்



திருமதி விஜயமலர் சிறீகாந்தவேல்



சின்னத்தம்பி ரவீந்திரன்

திருமதி எ.விக்ரோறியா, திருமதி அ.கலா, திருமதி ப.சுசீலாமணி
திருமதி இ.பிறேமா, கே.ஆர்.டேவிற் குடும்பத்தினர்

(533)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர் தேவை

புதுக்குடியிருப்பு **அபான்ஸ் கிளை** நிறுவனத்துக்கு பணியாளர் தேவைப்படுகின்றனர். விரும்புவோர் சுய விபரக் கோவையுடன் தொலைபேசி மூலமாகவும் நேரடியாகவும் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு - 077 159 0339

அபான்ஸ் அன் லிமிட்டட்
புதுக்குடியிருப்பு, பரந்தன் வீதி (C-1859)

முகாமையாளர்
புதுக்குடியிருப்பு
பரந்தன் வீதி



## வேலைவாய்ப்பு

சாதாரணமாக கல்விகற்று வேலையின்றி இருப்போருக்கு அரிய சந்தர்ப்பம். யாழில் இயங்கிவரும் எமது Golden group நிறுவனத்துக்கு நான்கு வகையான பதவிகள்.

- தகுந்த பயிற்சி அளித்து உள் வாங்கப்படுவர்
- வயது எல்லை – 18 – 35 (இருபாலாரும்)
  - 01. விநியோகஸ்தர் – 12,000 + 2,600 = 14,600/-
  - 02. மேற்பார்வையாளர் – 18,000 + 3,000 = 21,000/-
  - 03. உதவி முகாமையாளர் – 24,000 + 3,500 = 27,500/-
  - 04. முகாமையாளர் – 35,000 + 7,000 = 42,000/-
- தூர இடங்களில் இருந்து வருவோருக்கு (தங்குமிடம்)
- முந்தும் 12 பேருக்கு முன்னுரிமை
- உடன் தொடர்பு கொள்ளவும் :

077 621 9536 / 077 998 7699 (1532)

No/08 6th Cross Street, Jaffna.



## ஜீவக வாத தைலம்
Jeewaka Vata Thailaya

முதுகு வலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலியும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு,அரிப்பு, எரிவு, நரம்பு சார்ந்த வலி, பாரிசவாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்கும். வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம். காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.

25ml-150ரூபா 50ml-280ரூபா 100ml-450ரூபா

Manufactured & Marketed by
Jeewaka Herbals
No.17/3, wedagedara'Koskandawala yakkala
Ayu Lic No.6/2/1/02/11BR NO.W/Au/L/3621.
Contact: 071 227 1526

ஏக விநியோகஸ்தர்கள்,
சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2567 (C-1853)



## விற்பனையாளர் தேவை

யாழ் நகரில் உள்ள மிகவும் பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்துக்கான அனுபவமுள்ள / பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.

☀ சிட்டை எழுதுனர் - பெண் (வயது 18-28)

குறிப்பு :யாழ் நகரில் இருந்து 10 கிலோமீற்றர் தூரத்துக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (C-1849)

தொடர்புகளுக்கு : 0775556904/0213213117


## பிரதமர் ரணிலுக்கு...

துள்ள ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பேச்சாளர், இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தலில் அமைதியாகவும் பரந்தளவிலும் கலந்து கொண்ட மக்களுக்கு ஐ.நா செயலாளர் நாயகம் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

மக்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்திய இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் தேர்தல்கள் ஆணையாளருக்கும் அவர் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கான நடவடிக்கைகளை இலங்கையின் புதிய அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என்று ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் நிலையான அமைதியையும் செழிப்பையும் கட்டியெழுப்ப ஜனாதிபதி, பிரதமர், அரசாங்கம் மற்றும் மக்கள் அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என்றும் ஐ.நா செயலாளர் நாயகம் கேட்டுக் கொண்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளார். (எ-11)

## ஜேர்மன்...

சுயாதீனமானதும் நீதியானதுமான தேர்தலகள் ஜனநாயகத்துக்கு மிகவும் அவசியமானது.

தேர்தல்கள் நடத்தப்பட்ட விதம் மிகவும் மகிழ்ச்சியளிக்கும்வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்களின் அறிக்கையை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாகக் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)


## ஆங்கில வகுப்பு

தரம் 02, 03,04, 05, 06, 07, 08, 09, 10ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர் களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். M .Rajan (1528)

தொடர்புகளுக்கு:-0772286054



மீண்டும் O/L உடன்

UK, Australia, New Zealand, Switzerland, Canada, France, Germany, Singapore, Malaysia

மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்கக்கூடிய

Business & Hotel Management

3ஆம் அணி



யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பித்து 6 மாதங்களில் விரும்பிய நாடு செல்லும் விசா உத்தரவாதம்!

SEGi | B.H.M.S. | nmit | William Angliss Institute
MALAYSIA | SWITZERLAND | NEW ZEALAND | AUSTRALIA

அனுமதிகளுக்கு
077 3616 798
021 222 0011

கற்கைநெறி ஆரம்பம்
27-08-2015
வியாழன் 10 மணி

- அடிப்படையிலிருந்து IELTS வரையான விசேட ஆங்கிலக் கற்கைநெறி
- வெளிநாட்டு தூதரக விசா நேர்முகத் தேர்வுக்கான தயார்ப்படுத்தல் பயிற்சி
- பொருத்தமான நாடு, பல்கலைக்கழகம், தொழில் தெரிவுக்கான விரிவான வழிகாட்டல் ஆலோசனைகள்
- கற்கைநெறிக் காலத்திலேயே விரும்பிய நாடு செல்வதற்கான விசா ஒழுங்கு
- பல்கலைக்கழக கட்டணம் மற்றும் வங்கி வைப்புக்கான வங்கிக் கடன் ஏற்பாடுகள்
- வேறு துறைகளில் கற்க விரும்பும் மாணவர்களுக்கும் பகுதி நேர வேலைவாய்ப்புக்கு உதவும்

வெளிநாடு செல்ல விரும்பாதோருக்கு யாழ். கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்து தருகிறோம்.

SIKARAM Any Visa to Any Country

Sikaram (Pvt) Ltd.
இல.275-2/1. மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.(வைத்தியசாலை பின்புறம்) (C-1855)


## ரணில் விக்கிர...

குறிப்பிட்டுள்ளார்.

நடைபெற்றுமுடிந்த நாடாளுமன்றத் தேரதலில் ஐக்கிய தேசியக் கட்சி 106 ஆசனங்களைக் கைப்பற்றி முன்னிலை பெற்றதோடு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 95 ஆசனங்களைப பெற்றுக் கொண்டது.

இந்நிலையில், ஆட்சி அமைப்பதற்காக ஐ.தே.கவுக்கு மேலதிகமாக 7 ஆசனங்கள் தேவைப்படும் நிலை காணப்படுகின்றது. (எ-11)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



# பெரும் வெற்றிக்கு வித்திட்ட எம் தமிழ் உறவுகளுக்கு நன்றி

## மதிப்புக்குரிய என் தமிழ் உறவுகளே !



பாராளுமன்ற தேர்தலில் மகத்தான வரலாற்று அனுபவத்தினூடாக தமிழ் தேசியத்தின் பற்றினூடாக எம் விடுதலைக்காய் விழி மூடிய ஆயிரம் ஆயிரம் உறவுகளின் புனிதமான ஆத்மத்தின் ஊடாக தர்மத்தின் மீதில் நம்பிக்கை வைத்து எனக்கும் எமது கட்சிக்கும் வாக்களித்து என்னை அதிகூடிய வாக்குகளால் வெல்லவைத்தும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினை மீண்டும் தமிழர்களின் அசைக்கமுடியாத பலமாக நிலை நிறுத்தியும் மக்களாகிய நீங்கள் செய்த வரலாற்றுக்கடமைக்கு மிகுந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்னமும் அடிமைகளாக துன்பப்படுகின்ற எமது மக்களுக்கு சுபீட்சமாக வாழ்வை பெற்றுத்தரவும் சிறையில் உள்ள எமது உறவுகளின் வாழ்வில் ஒரு விடிவையும் எமது மக்களின் விடுதலைக்காக பாடுபட்டவர்களின் வாழ்வை மேம்படுத்தவும் வடக்கு கிழக்கு எமது பூர்வீக நிலத் தில் கௌரவமான ஒரு உரிமையுள்ள வாழ்வை நாம் பெற்றுக் கொள்ளவும் நாம் பெற்ற இந்த தேர்தல் வெற்றி ஒரு பெரும் கடமையாக எனது கையிலும் தரப்பட்டுள்ளதாக நான் உணர்கின்றேன். இந்த வெற்றிக்காக இரவு பகலாக பாடுபட்ட அனைத்து உறவுகளையும் புலம்பெயர் மண்ணில் இருந்து வெற்றிக்காக உழைத்த எங்கள் உறவுகளையும் கடமையுணர்வுடன் பணி செய்து பலம் சேர்த்த ஊடகவியலாளர்களையும் என்றும் என்னுள் இருந்து என்னை வழி நடத்தும் கனவோடு விழிமூடித்தூங்கும் தியாகச் செல்வங்களையும் நாம் மிகுந்த நன்றியுணர்வுடன் பற்றி நிற்கின்றேன். இது எமது மக்களின் வெற்றி. கடமைக்கான புனிதமான ஆணை.

என்றும் உங்களில் ஒருவனாக

சிவஞானம் சிறீதரன் - தமிழ்த் தேசியக் கூடடமைப்பு
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் - கிளிநொச்சி.

(C-1854)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.